விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 01 வியாழக்கிழமை (15.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 086

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

புலனாய்வுத்துறையின் இடைஞ்சல் இல்லாமல்

## காணாமல் போனோர் அலுவலகம் இயங்க வேண்டும் - சிறீதரன்

(யாழ்ப்பாணம்)

வடக்கிலும் கிழக்கிலும் காணாமற்போனோர் பற்றிய அலுவலகங்கள் குறைந்தது நான்கையேனும் நிறுவி அங்கு அந்த மக்கள் யாருடைய இடைஞ்சலும் இல்லாமல் குறிப்பாக புலனாய்வுத் துறையினருடைய இடைஞ்சல்கள் இல்லாமல் சர்வதேச மேற்பார்வையோடு சுதந்திரமாகத் தங்களுடைய சாட்சியங்களை அளிப்பதற்கு வழிசெய்ய வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.


பாராளுமன்றத்தில் இது தொடர்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவி 24

## இன, மதவாதத்தை தூண்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை வேண்டும்

### இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ் டொறிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

மதவாதத்தையும் இனவாதத்தையும் தூண்டும் வகையில் செயற்படும் அனைவருக்கும் எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது கட்டாயமாகும் என இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ் டொறிஸ் தெரி 24



James Daur...

Thousands in #SriLanka have been frightened and worse by ugly violence in recent weeks.

Really important that the government and authorities apply the law and prosecute all those who have been leading and inciting religious and ethnic hatred, including through social media.

## நாடு கடத்தப்படவிருந்த தமிழ்க் குடும்பத்தை மீள அழைத்த ஆஸி

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்துவதற்காக விமானத்தில் ஏற்றப்பட்ட நான்கு பேர் கொண்ட தமிழ்க் குடும்பம் ஒன்று கடைசி நேரத்தில் மீளவும் அழைக்கப்பட்டதாக அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் 23

பற்பசைக்குள் வைத்து

## ஹெரோயின் கடத்திய இளம் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவருக்கு வழங்க என 180 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப்பொருளை பற்பசைக்குள் 24

முல்லைத்தீவு சிலாவத்தையில்

## வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்று மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு சிலாவத்தை தியோநகர் பகுதியில் காணி ஒன்றிலிருந்து வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. சிலாவத்தை தியோ 24

## சிறீதரன் எம்.பி ஜெனிவா பயணம்

(ஜெனிவா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞா 23



# ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக இந்தியா, அமெரிக்கா விசனம்

## கால அவகாசமும் வழங்கப்படாது என ஜெனிவா இராஜதந்திர தகவல்கள் தெரிவிப்பு

(ஜெனிவா) ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து அமெரிக்காவும் இந்தியாவும் கடும் விசனம் வெளியிடலாம் என ஜெனிவா இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசாங்கம் மேலும் கால அவகாசம் தருமாறு கேட்கும் கோரிக்கையும் நிராகரிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (23-ம் பக்.)



சர்வதேச விசாரணை வேண்டும் என்ற

## மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மான பிரதி ஐ.நா ஆணையாளரிடம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்தை சர்வதேச விசாரணைக்குட்படுத்துமாறு கோரி வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதியை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு நேரில் வழங்கியுள்ளதாக வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கூறியுள்ளார். சமகால அரசியல் நிலைமைகள் குறித்து யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட 2 வருட கால அவகாசத்திற்குள் நம்பிக்கை தரும் வகையில் அரசாங்கம் ஒன்றையுமே செய்திருக்கவில்லை. இந்நிலையில் இலங்கை அரசாங் 23

தமிழரைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு

## எதிரான இனப்படுகொலைகள் இலங்கையில் தொடர்ந்துள்ளது

### ஜெனிவாவில் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

(ஜெனிவா)

தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை முடிவுக்கு வந்த பின்னர் முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து இனப்படுகொலை நடைபெறுகின்றது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 37-வது கூட்டத் தொடரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். 23



## சம்பிக்க ரணவக்கவே வன்முறைக்கு காரணம்

முஸ்லிம் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், நல்லாட்சி அரசாங்கத்தின் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவே காரணம் என்று முஸ்லிம் உரிமைகளுக்கான கூட்டமைப்பு பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. 23

## இலங்கையின் அபிவிருத்திக்கு ஜப்பான் நிதி உதவி

### மைத்திரியிடம் உறுதியளித்தார் ஜப்பான் பிரதமர்

(டோக்கியோ)

இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உதவி வழங்கும் போது முடிந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் கடன் அல்லாத நிதியுதவிகளை 23



## எதிர்வரும் 22-ம் திகதி முதல் உள்ளூராட்சி சபைகள் இயங்கும்

### அமைச்சர் பைஸர் முஸ்தபா

(கொழும்பு)

எதிர்வரும் 22 ஆம் திகதி 326 உள்ளூராட்சி சபைகளுக்கு தலைவர்கள் நியமிக்கப்பட்டு ஆட்சியமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைஸர் முஸ் 24

வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

# 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை சனத்தொகை கணக்கெடுப்பு

(கொழும்பு)

நாட்டின் சனத்தொகை கணக்கெடுப்பை இந்த ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் கூறியுள்ளது.

பொதுவாக வீடுக்ள் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படுவதுடன், அடுத்த கணக்கெடுப்பு எதிர்வரும் 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருந்ததாக அந்த திணைக்களம் கூறியுள்ளது.

அதற்கு இடைப்பட்ட காலத்தில் அந்த திணைக்களத்திற்கு புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் பல தேவைப்படுவதால், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை கணக் கெடுப்பை மேற்கொள்ள உள்ளதாக தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் கூறியுள்ளது.

மக்கள்தொகை, வீடுகளின் எண்ணிக்கை, கட்டடங்களின் எண்ணிக்கை, வீடுகளில் உள்ள நபர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களை சேகரிப்பதற்கு இதன்மூலம் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகள் மற்றும் மக்கள் தொகை சம்பந்தமான தகவல்களை குறுகிய கால அடிப்படையில் புதுப்பித்துக் கொள்வது அனர்த்த நிலைமைகளின் போது முக்கியமானது என்பதால் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை சனத்தொர்கை கணக்கெடுப்பை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் கூறியுள்ளது. (ம)

## புதிய முறையில் மாகாண சபைத் தேர்தல்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை புதிய தேர்தல் முறையில் நடத்துவதாயின் அதன் நடைமுறைச் சாத்தியம் சம்பந்தமாக ஆராய வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது சப்ரகமுவ, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் வடமேல், மத்திய மற்றும் வடக்கு மாகாண சபைகளின் காலமும் நிறைவடையவுள்ளது.

இதற்கு மேலதிகமாக அடுத்த ஆண்டு மேல் மற்றும் தென் மாகாணங்களின் காலமும் நிறைவடையவுள்ளது.

எவ்வாறாயினும் இந்த மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ம)

## விஜயகாந்தின் பிணை நிராகரிப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான தேர்தலில் உறுப்பினராகத் தெரிவாகியவரும் முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் செயலாளருமான சுதர்சிங் விஜயகாந்த் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது.

அத்துடன், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றால் சுதர்சிங் விஜயகாந்துக்கு வழங்கப்பட்ட 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனைக்கு எதிராக மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்படுவதற்கான அறிவித்தல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதனால் தண்டனைக் கைதியைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சிறைச்சாலையில வைத்திருக்க உத்தரவிடக் கோரிய மனு மீதான கட்டளையை வரும் 20ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதவான் நேற்று புதன்கிழமை ஒத்தி வைத்தார். (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி கலாதேவி குமரேஸ்வரதாஸ்



காயாவீதி வடலியடைப்பை பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கலாதேவி குமரேஸ்வரதாஸ் அவர்கள் 28.02.2018 புதன்கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு-லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும் விஜயதர்மா குமரேஸ்வரதாஸ் அவர்களின் பாசமிகு மனைவியும் றமணதாஸ் அவர்களின் அன்புத்தாயாரும் லக்சிதா-ரமணதாஸ் அவர்களின் மாமியாரும் றஸ்வினின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற சிவசுந்தரம், சிவராசா மற்றும் சிவானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் இந்திராதேவி, சறோயினிதேவி ஆகியோரின் மைத்துனியும் சிவனேசராஜா, சிவரவிந்திரராஜா, சிறிகௌரி, சிவரூபி, சஜுஜி, ரகுதாஸ், ஜீவதாஸ், முஜீபன் (மகுடம் புத்தக சாலை இணுவில்), சசீலன் (லண்டன்), றஜித் (றோயல் புத்தக சாலை பண்டத்தரிப்பு) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16/03/2018) வெள்ளிக்கிழமை 9.15-9.45 (இலண்டன் நேரம்) Sunderland Crematorium, Chester Road Sunderland SR.47 RS எனும் முகவரியில் நடைபெறும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காயாவீதி, வடலியடைப்பு
பண்டத்தரிப்பு.

தகவல்:-அன்புத் தம்பி
தி.சிவானந்தன் (பேபி)
0779905546

(சி-1885)

## வாழ்த்துகின்றோம்



திரு.சண்முகம் சந்திரசேகரம் (சந்திரன்)

எமது ஜெயந்திநகர் சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும் மீனாட்சியம்மன் கோவில் தலைவரும் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க உபதலைவரும் கிளி/மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் ஒன்றிய தலைவரும் கால்நடை வளர்ப்போர் கூ.ச தலைவரும் கிளி/மாவட்ட செஞ்சிலுவைச் சங்க தலைவருமாகிய ஜெயந்திநகர், இல.680/3 முகவரியை கொண்ட திரு. சண்முகம் சந்திரசேகரம் (சந்திரன்) அவர்களுக்கு சமாதான நீதவான் பதவி கிடைத்துள்ளது. எனவே அவரது சேவை சிறந்து நீடுழி வாழவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

ஜெயந்திநகர்
சனசமூக நிலையம்

(சி-1883)



## 104வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நிலாவெளியைச் சேர்ந்த
தற்போது இணுவிலில் வசிக்கும்

### திரு.க.கெஜரெத்தினம்

(ஓய்வுநிலை அதிபர்)

104ஆவது வயதிலும்
கந்தபுராணத்திற்கு பயன்
சொல்லும் நினைவாற்றல்
உடைய எமதன்பு பூட்டப்பாவுக்கு
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

பேரப்பிள்ளைகளுடன்
இணைந்து வாழ்த்தும்
பூட்டப்பிள்ளைகள்

15.03.2018


## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்

T.P :- 0777 569 205

13.03.2018-22.03.2018 வரை
12 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=



மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்க்ளுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்

இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

இப்போது நாம் புதிய முகவரியில்

விதுனா லொச்

ஜும்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.
(அருமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே: 021 722 3409

(சி-1886)


## கண்ணீர் காணிக்கை



### திருமதி விநாயகசுந்தரம் இராஜேஸ்வரி

எமது வலயத்தின் கோப்பாய்க் கோட்ட பணிமனையில் பணியாற்றும் திரு.வி.கணாதீபன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி விநாயகசுந்தரம் இராஜேஸ்வரி அவர்கள் 02.03.2018 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிக் கழகம்
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(225)

## தற்காலிக வியாபார நிலையங்களை அமைப்பதற்கான நிலங்களை பகிரங்க ஏலத்தில் வழங்குதல்

மானிப்பாய் மருதடி விநாயகா ஆலயத்தில் 2018ஆம் ஆண்டு மகோற்சவ காலப்பகுதியில் (22.03.2018 தொடக்கம் 15.04.2018 வரை) தற்காலிக வியாபாரம் மேற்கொள்வதற்கான நிலங்கள் பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளது.

**காலம்:**-18.03.2018 காலை 9.00மணி

**இடம்:**-மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றல்

ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் ரூபா.500.00 இனை மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக செலுத்தி 18.03.2018ஆம் திகதிக்கு முன்னர் ஆலய முகாமையாளரிடம் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

ஏலத்தில் தேர்வு செய்யப்படுவோர் 21.03.2018ஆம் திகதிக்கு முன்னர் முழுத் தொகையையும் செலுத்தி தமது தேர்வினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

**பெறுநர்குழு**
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.**

**குறிப்பு:**-பெறுநர்குழுவின் முன்னனுமதி பெறப்படாத நிறுவனங்கள் எவையும் இவ் ஆலய சுற்றாடலில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(சி-1882)

# ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு மருதங்கேணியில் இன்று

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பும் கண்டனப் பேரணியும் ஏற்பாடு

## அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணியில் இன்று வியாழக்கிழமை மாபெரும் கண்டனப்பேரணியும் கவனயீர்ப்புப் போராட்டமும் இடம்பெறவுள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கண்டறியும் அமைப்பின் ஏற்பாட்டில் முற்பகல் 10 மணியளவில் இப்போராட்டம் இடம்பெறவுள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கண்டறியும் அமைப்பினால் தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் இன்றுடன் ஒரு வருடத்தை அடைந்துள்ள நிலையில் இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக போராட்டம் நடைபெறும் இடத்திலிருந்து மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளதுடன் பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமும் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-60)

# மாகாண தேர்தலை பழைய முறையில் நடத்த மகிந்த உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஆதரவு

## அமைச்சர் மனோ கணேசன் தகவல்



(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையிலேயே நடத்துவதற்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஆதரவு தெரிவித்திருப்பதாக, அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 50க்கு50 என்ற கலப்பு முறைமையின் கீழ் நடத்தப்பட்டது.

ஆனால் இது பல அரசியல் கட்சிகளுக்கும் பாதகமான நிலைமையை தோற்றுவித்திருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி பல்வேறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதாக, அதன் தலைவரும், அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தல் தொகுதி மீள்நிர்ணய அறிக்கை குறித்த விவாதம் எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. புதிய மாகாண சபை தேர்தல் தொகுதி எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதற்காக, முன்னாள் நில அளவீட்டு ஆணையாளர் நாயகம் கனகரத்தினம் தவலிங்கம் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த குழு தமது அறிக்கை கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கையளிக்கப்பட்டு, கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் படி உருவாக்கப்பட்டுள்ள புதிய மாகாண சபை தொகுதி எல்லைகள், சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை பாதிக்கும் வகையில் அமைந்திருப்பதாக, குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.(இ-7)

# கண்டி வன்முறை சிங்கள-முஸ்லிம் மோதல் இல்லை

## அமைச்சர் ஹக்கீம் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கையின் அம்பாறை மற்றும் கண்டி மாவட்டங்களில் ஏற்பட்ட வன்முறைகள் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான மோதல் அல்ல என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். மாறாக அது முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட வன்முறை வழியிலான தாக்குதலே என விளக்கியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், இந்தியாவிலிருந்து வெளியாகும் இந்து ஆங்கில பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை பொலிஸார் பொறுப்பின்றி நடந்து கொண்டதன் காரணமாகவே அந்த வன்முறைச் சம்பவங்கள் முற்றின. அதேவேளை நடக்க போகும் சம்பவங்கள் குறித்து புலனாய்வுப் பிரிவினரும் அறிந்திருக்கவில்லை. திகனயில் கொல்லப்பட்ட இளைஞனின் இறுதிச் சடங்கு நடக்கும் தினத்தில் ஏதேனும் சம்பவங்கள் நிகழலாம் என நான் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் அதனை ஏற்கவில்லை” என அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சமூக வலைத்தளங்களை நாடுவதற்கான வசதிகளை முடக்கும் தேவை அரசாங்கத்திற்கு இல்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

சமூக வலைத்தளங்களை நாடுவதற்கான வசதிகளை முடக்கும் எந்தவொரு தேவையும் அரசாங்கத்திற்கு கிடையாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு இசிபதன கல்லூரியின் நீச்சல் தடாகத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் நேற்று உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். இந்த நீச்சல் தடாகம் ஆறு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் சமூக வலைத்தளங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தும் தேவை எழுந்துள்ளது. இவற்றின் மூலம் பொருளாதாரத்திற்கும், கல்விக்கும், தொலைத் தொடர்பாடலுக்கும் கிடைக்கும் பங்களிப்பு அதிகமாகும்.

எனினும், இனவாத, பிரிவினைவாத மோதல்களுக்கு வித்திடவும், துரோகத்தை பரப்பவும் சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது, கண்டி அசம்பாவிதங்களில் தெளிவாக தெரியவந்தது.

எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகளை தவிர்ப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென பிரதமர் தெரிவித்தார்.


இணையம் காரணமாக புதியதொரு சமூக வலைப் பின்னல் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதில் பாடசாலை மாணவர்கள் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளார்கள்.

எனினும், இதனை கல்வி நடவடிக்கைகளில் சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென பிரதமர் கோரிக்கை விடுத்தார். (இ-7)

# முன்னாள் போராளிகள் குறித்து மகிழ்ச்சி வெளியிட்ட நாமல் எம்.பி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்ட நல்லிணக்க முயற்சிகள் இன்றும் தொடர்வது மனதுக்கு மகிழ்ச்சியளிக்கின்றது' என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



Namal Rajapaksa
@RajapaksaNamal

முன்னாள் ஜனாதிபதி @PresRajapaksa வால் ஆரம்பிக்கப்பட்ட நல்லிணக்க முயற்சிகள் இன்றும் தொடர்வது மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. முன்னாள் LTTE உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு தமது சுய விருப்புடன் சிவில் பாதுகாப்பு படையில் இணைக்கப்பட்டனர். இன்றும் சிறந்து செயல்படுகின்றார்கள். twitter.com/dailymirror_sl...

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

'விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு, சுய விருப்புடன் சிவில் பாதுகாப்புப் படையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்றும் சிறப்பான முறையில் செயற்படுகின்றனர்" என அவர் தனது டுவிட்டர் பதிவில் மேலும் கூறியுள்ளார். (இ-7)

# கல்வி கற்பது மாத்திரம் கல்வி முறைமையல்ல

## கல்வியமைச்சர் காரியவசம்



(கொழும்பு)

கற்பிப்பதும் கல்வி கற்பதும் மாத்திரம் கல்வி முறைமை அல்ல என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு இசிப்பதான வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் கல்விக்கு அப்பாற்பட்ட விடயங்களை அறிந்துகொள்ளவும் முயற்சிக்க வேண்டும் என இதன்போது சுட்டிக்காட்டிய அமைச்சர்,

ஆகையினாலேயே விளையாட்டு மாணவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (இ-7)

## விண்ணை முட்டாத முஷ்பிகுர் ரஹீமின் அதிரடி

# ஹட்ரிக் வெற்றியுடன் இறுதிக்குள் இந்தியா

முத்தரப்பு 'ரி20' தொடரின் இறுதிக்கு இந்தியா ஜோராக முன்னேறியது.

நேற்று நடந்த 5ஆவது லீக் போட்டியில் பங்களாதேஷை 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

ஆக்ரோஷமாக ஆடிய அணித் தலைவர் ரோகித் 89 ஓட்டங்கள் விளாசினார்.

இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ரி20 தொடர் கொழும்பில் நடக்கிறது.

முதல் 4 போட்டிகள் முடிவில் இந்தியா 2, இலங்கை, பங்களாதேஷ் அணிகள் தலா ஒரு வெற்றி பெற்றன.

இதன் இரண்டாவது சுற்று லீக் போட்டியில், நேற்று இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் மகமதுல்லா, முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

### தவான் நம்பிக்கை

இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி இம்முறை நல்ல ஆரம்பம் கொடுத்தது.

நஜ்முல், ரூபெல் பந்துகளை பவுண்டரிக்கு அடித்த தவான், முஸ்தபிஜுர் பந்தில் சிக்சர் விளாசினார். 22 ஓட்டங்களில் தப்பிப் பிழைத்த தவான், 35 ஓட்டங்களில் போல்டாகி திரும்பினார்.

### ரோகித் அபாரம்

மறுபுறம் மெல்ல சுதாகரித்துக் கொண்ட ரோகித், மெஹிடி பந்தை சிக்சருக்கு அடித்து ஓட்ட வேகத்தை அதிகரித்தார். தொடர்ந்து நஜ்முல் பந்தையும் சிக்சருக்கு அனுப்பிய இவர், சர்வதேச ரி20 அரங்கில் 13ஆவது அரைச்சதம் எட்டினார்.

இருப்பினும், இதற்கு 42 பந்துகள் எடுத்துக் கொண்டதால், ஓட்ட வேகம் மந்தமாக இருந்தது. இவருக்கு நல்ல 'கம்பனி' கொடுத்த ரெய்னா, மெஹிடி ஓவரில், அடுத்தடுத்து தலா ஒரு சிக்சர், பவுண்டரி என அடிக்க 13.5ஆவது ஓவரில், இந்திய அணியின் ஓட்டஎண்ணிக்கை 104/1ஐ எட்டியது. விளாசலை தொடர்ந்த ரெய்னா, ரூபெல் ஓவரிலும் அடுத்தடுத்து பவுண்டரிகள் அடித்தார்.

கடைசி நேரத்தில் இருவரும் வேகமாக ஓட்டங்கள் சேர்த்தனர்.

ரெய்னா ஒரு பவுண்டரி, ரோகித் ஒரு சிக்சர் உட்பட 17ஆவது ஓவரில் 14 ஓட்டங்கள் கிடைத்தன. 18 ஆவது ஓவரில் ரோகித் 2, ரெய்னா ஒன்று என சிக்சர் மழை பொழிய 21 ஓட்டங்கள் எடுத்தது இந்தியா.

இரண்டாவது விக்கெட்டுக்காக 56 பந்துகளில் 102 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், சிக்சருக்கு ஆசைப்பட்ட ரெய்னா (47), அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்து, 'பெவிலியன்' திரும்பினார். கடைசி பந்தில் ரோகித் (89 ஓட்., 5 சிக்சர், 5 பவுண்டரி) ஆட்டமிழந்தார்.



20 ஓவர்களில் இந்திய அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்கள் எடுத்தது.

தினேஷ் கார்த்திக் (2) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

### சுந்தர் அசத்தல்

சற்று கடின இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு லிட்டன் தாஸ், தமிம் இக்பால் ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது.

தனது முதல் ஓவரை வீசிய வோஷிங்டன் சுந்தர், லிட்டன் தாஸ் (7), ஆட்டமிழக்கச் செய்தார். தாகூர் வீசிய போட்டியின் 3ஆவது ஓவரில், 3 பவுண்டரிகள், ஒரு சிக்சர் உட்பட 19 ஓட்டங்கள் எடுத்தார் தமிம் இக்பால்.

மறுபக்கம் 'சுழலில்' அசத்திய சுந்தர், தனது அடுத்தடுத்த ஓவர்களில், சௌமியா சர்கார் (1), தமிம் இக்பாலை (27) போல்டாக்கி திருப்பம் கொடுத்தார். மகமதுல்லா (11), சகால் 'வல்லையில்' வீழ்ந்தார். சபிர் ரஹ்மான் (27), ஹசன் (7), நீடிக்கவில்லை. தனிநபராக போராடிய முஷ்பிகுர் அரைச்சதம் அடித்த போதும் வெற்றிக்கு போதவில்லை.

இறுதியில் 20 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

முஷ்பிகுர் (72), அபு (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இத்தொடரில் 'ஹட்ரிக்' வெற்றி பெற்ற இந்திய அணி, 6 புள்ளிகளுடன் இறுதிக்கு (மார்ச் 18) முன்னேறியது.

### 75


சர்வதேச ரி20 அரங்கில் அதிக சிக்சர் அடித்த இந்திய வீரர்களில் யுவராஜ் சிங்கை (74) முந்தி, முதலிடம் பிடித்தார் ரோகித் சர்மா (75). மூன்றாவது இடத்தில் ரெய்னா (54) உள்ளார்.

### 911

சர்வதேச ரி20 அரங்கில் இந்தியாவின் ரோகித், தவான் இணைந்து, அதிக ஓட்டங்கள் (911) எடுத்த ஆரம்ப ஜோடி வரிசையில் நியூசிலாந்தின் கப்டில், வில்லியம்சனை (870) முந்தி, இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. முதலிடத்தில் அவுஸ்திரேலியாவின் வோர்னர், வோட்சன் (1108 ஓட்.) ஜோடி உள்ளது.

# சகாலுக்கு ஒரு கடிகாரம்

## ஹோலியின் புது ஆசை



இந்திய அணித் தலைவர் ஹோலி, சக வீரர் சகாலுக்கு கைக்கடிகாரத்தை பரிசாக தர விருப்பம் தெரிவித்துள்ளார்.

விராட் ஹோலிக்கு இலங்கையில் நடக்கும் முத்தரப்பு ரி20 தொடரில் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியார் நிகழ்ச்சியில் பங்கேற்ற ஹோலி சில சுவாரஷ்யமான விடயத்தை பகிர்ந்து கொண்டார். இதில் ஹோலி கூறியது, இந்திய 'சுழல்' வீரர் சகாலுக்கு, பரிசாக கைக்கடிகாரம் தர விரும்புகிறேன். ஏனெனில், எப்போதுமே இவர் தாமதமாகத்தான் வருகிறார். நான் தரும் கடிகாரத்தில் மணி பார்த்தாவது, சரியான நேரத்திற்கு வருவார் என நம்புகிறேன். 'ரப்பர் ஸ்ட்ராப்' கொண்ட கடிகாரத்தை மட்டும்தான் தருவேன். மற்ற அனைத்தும் இவரது கைக்கு சரியாக வராது.

### என்ன உணவு

களத்தில் மட்டும்தான் மிகவும் துடிப்பாக இருப்பேன. ஓய்வு நேரத்தில் இருந்தால், பல மணி நேரம் இருந்த இடத்திலிருந்து நகரவே மாட்டேன். முன்பு பட்டர் சிக்கனை ருசித்து சாப்பிட்டேன். தற்போது இதிலிருந்து விலகி ஜப்பான் உணவுக்கு அடிமையாகி விட்டேன். வீட்டில் இருக்கும்போது பெரும்பாலும் சைவ உணவுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பேன்.

### பிடித்த ஐரோப்பா

ஸ்பெயினின் டென்னிஸ் வீரர் நடால், யோகியின் சுயசரிதை புத்தகத்தை விரும்பி வாசிப்பது வழக்கம். எனது வாழ்க்கை குறித்து, திரைப்படம் எடுத்தால் புதிதாக வரும் ஹீரோதான் பொருத்தமாக இருப்பார். அப்படி இதை எடுத்தாலும், இதற்கு இன்னும் பல ஆண்டுகள் தேவை. ஐரோப்பாதான், பிடித்த சுற்றுலாத்தளம். பனி மலையை ரசித்துக்கொண்டே நடப்பது வித்தியாசமான அனுபவம். யாரும் அடையாளம் கண்டுபிடிக்க வாய்ப்பில்லை. இதனால் தெருவில் 'ஹாயாக' நடக்கலாம். இவ்வாறு ஹோலி கூறினார்.



ஐ.பி.எல் அணிகளில் ஒன்றான கிங்ஸ் லெவின் பஞ்சாபின் சீருடை அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றபோது...

## சென்னைக்கு பின்னடைவு

# மிட்சல் சாண்ட்னர் விலகல்



கடும் முழங்கால் காயம் காரணமாக 9 மாதங்களுக்கு நியூஸிலாந்தின் சகலதுறை வீரர் மிட்சல் சாண்ட்னரினால் கிரிக்கெட் ஆட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நியூஸிலாந்து அணிக்கும் ஐபிஎல் கிரிக்கெட்டில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கும் சற்றே பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

சாண்ட்னர் மிகவும் சிக்கனமாக தன் இடது கை ஸ்பின் ஓவர்களை வீசுவதோடு பின் வரிசையில் இறங்கி சமீபத்தில் இங்கிலாந்து பந்துவீச்சுக்கு தன் மட்டையின் மூலம் காட்டு காட்டென்று காட்டினார். இதனையடுத்து வரும் ஐபிஎல் 2018 தொடரில் சென்னை சுப்பர் கிங்சில் தல தோனியின் வலதுகரமாகச் செயல்படுவார் என்ற ஆவல் மேலிட்டது.

தோனிக்கும் வேகப்பந்து வீச்சைவிட சுழல்பந்தின் தான் அதிக விருப்பம். அதிலும் சாண்ட்னர் போன்ற ஒரு சகலதுறை வீரர் தோனியின் கிரிக்கெட் உத்திக்கு மிகவும் நெருக்கமான ஒன்றாவார்.

இந்நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் அவர் காயமடைந்தார். ஸ்கானில் முழங்காலெலும்பில் கோளாறு உள்ளது தெரியவந்தது. இதனையடுத்து அறுவை சிகிச்சை கட்டாயம் என்று மருத்துவர்கள் தெரிவிக்க சாண்ட்னர் 6-9 மாதங்கள் வரை கிரிக்கெட் பக்கம் தலைவைத்து படுக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நியூஸிலாந்தின் அடுத்தடுத்த தொடர்களில் இவரது பங்களிப்பின்மையாலும் இவரை வைத்து திட்டங்கள் பல தீட்டும் தோனியின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கும் கொஞ்சம் கை ஒடிந்தது போல்தான் இருக்கும் என்று கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


வாழ்த்துகின்றோம்



திரு.சண்முகம் சந்திரசேகரம் (சந்திரன்)

எமது ஜெயந்தி நகர் ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவில் தலைவரும் ஜெயந்தி நகர் சனசமூக நிலைய முன்னாள் தலைவரும் கிளி/ மாவட்ட செஞ்சிலுவை சங்கத் தலைவரும் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் தலைவரும் கால்நடை வளர்ப்போர் கூ.சங்க தலைவருமாகிய ஜெயந்திநகர் இல. 680/3 முகவரியைக் கொண்ட திரு.சண்முகம் சந்திரசேகரம் (சந்திரன்) அவர்களுக்கு சமாதான நீதவான் பதவி கிடைத்தமையையிட்டு அவரது சேவை மேன்மேலும் சிறந்து விளங்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.


ஸ்ரீமீனாட்சியம்மன் ஆலய

(C-1884) பரிபாலன சபையினரும், ஜெயந்தி நகர் பக்தர்களும்

# அவசரகால நிலையும்—சமூக வலைத்தள முடக்கமும்

# திட்டமிட்ட சதி

## விக்கிரமபாகு கருணாரட்ன குற்றச்சாட்டு




(கொழும்பு)

அரச சார்புடைய வர்த்தகர்களுக்கு இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும் வகையிலேயே நாட்டில் அவசரகால நிலை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளதாக நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தற்போது நாட்டின் நிலைமைகள் சுமுகமடைந்துள்ளன. ஆனால் மக்களது வர்த்தக நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக பேஸ்புக் தடையை நீடிப்பதற்காக அவசரகால நிலைமையையும் நீடித்து வருகின்றனர்.

இனவாதத்துடன் தொடர்புபடாத நடவடிக்கைகள் குறித்தே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அரச சார்புடைய வர்த்தகர்களுக்கு இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும் வகையிலேயே நாட்டில் அவசரகால நிலை தொடர்ந்து நீடிக்கப்பட்டு வருகி றது.

இதனை ஒருபோதும் இடமளிக்க முடியாது. தற்போது நாட்டில் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளதால் அவசரகால நிலையை உடனடியாக இரத்து செய்ய வேண்டும்.

இந்த வன்முறை சம்பவங்களின் பின்னணியில் காணப்படுபவர்கள் யார் என்பதை நாம் நன்கறிவோம். இச் சம்பவம் குறித்து நூற்றுக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் ஒரு பௌத்த தேரரேனும் கைது செய்யப்பட்டதாக இல்லை.

ஏன் தேரர்களுக்கு மாத்திரம் அவ்வாறு சலுகை கொடுக்கப்படுகிறது.

வீதியில் இறங்கி கலவரத்தில் ஈடுபட அவர்களுக்கு மாத்திரம் அனு மதி வழங்கப் பட்டுள்ளதா" என்றும் கேள்வி எழுப்பினார். (இ-7)

# வவுனியா வளாகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் இடைநிறுத்தம்

## முதல்வர் மங்களேஸ்வரன் அறிவிப்பு

(குருமன்காடு)

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க போராட்டம் தொடர்பாக நேற்று வவுனியா வளாகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

28.02.2018 இல் இருந்து இலங்கையில் உள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்த போராட்டத்தினால் எமது வளாகத்தின் கல்விசார், கல்விசாரா செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப் பட்டுள்ளது. 13.03.2018 அன்று வளாக முதல்வர் தலைமையில் பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் கூடி கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க போராட்டம் முடிவடைந்த பின்னர் எங்களது கல்வி நடவடிக்கைகளையும் ஆரம்பிப்பது என்றுதீர்மானம்எடுத்துள்ளோம்.

பரீட்சைகள் அனைத்தும் முன்பே முடிவடைந்துள்ளது. 12.02.2018 அன்று வியாபார கற்கைகள் பீடத்தின் புதிய ஆண்டிற்கான கற்கை நெறிகள் மட்டுமே ஆரம்பமாகியிருந்தன. அப்போது கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க போராட்டம் காரணமாக கல்விக்கான அனைத்து வசதி வாய்ப்புக்களையும் வழங்க முடியாத காரணத்தினால் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் இடைநிறுத்தியிருந்தோம். மேலும் 03.03.2018 அன்று நடைபெறவிருந்த பிரயோக விஞ்ஞான பீடத்தின் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான விவேக நுண்ணறிவு பரீட்சையானது தற்போது பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் இப்பரீட்சைகளிற்கான திகதியும் 19.03.2018 தொடங்க இருந்த பிரயோக விஞ்ஞான கற்கை நெறிகள் கற்கைநெறிக்கான திகதியும் இப்போராட்டம் முடிவடைந்த பின்னர் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-250)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சிவகுமார், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஊழியர் பழைய மாணவன் க.கனகலிங்கம் யாழ். மாநகர சபை பாதுகாப்பு ஊழியர் பழைய மாணவன் அ.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அருளானந்தம் திரேசம்மா

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1935 - 11 - 23 | 2014 - 03 - 15 |

அன்பு என்ற மணியெடுத்து
பொறுமை என்ற உருவமைத்து
தியாகம் என்ற உயிர்கொடுத்து
மென்மை என்ற ஒன்றையே
அன்னையென
ஆண்டவன் படைத்ததாக
தத்துவங்கள் சொல்லக் கேட்டோம்
நிதர்சனமாய் அவ்வுருவை
நித்தமும் உம்மில் கண்டோம்
நான்காண்டு கடந்திடினும்
நானிலத்தில் உம்மை
கணப்பொழுதும் மறந்தறியோம்

அன்னையே உந்தன்
உயிர் மூச்சு நிற்கவில்லை
எம் சுவாசக் காற்றுடன்
சங்கமித்துள்ளது
இதனால் எம் இதய ஒலி கூட
உம் நாமம் சப்திக்கின்றது
கிறிஸ்துவுக்குள் நீர்
நித்திரை செய்வதால்
நித்தியத்தில் உம்மை
காணும் நாள் வரைஎம் உள்ளத்தில்
சுமந்தே வலம்வருவோம்...

36/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்
கணவன், பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

# இராசி பலன்

**மீனம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், அலைச்சல்கள் சற்றுக் கூடும்.

**மேடம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆனந்தமான நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** தொழிலில் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் அனுகூலம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| சூரி, சுக், புத | | | |
| சந் | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம் | | ராகு |
| சேது | | | |
| சனி, செவ் | குரு | | |

15.03.2018
பங்குனி 01, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 5.41 மணிவரை
அவிட்டம் மாலை 5.28 மணிவரை
சுபநேரம் 7.51-9.21 மணிவரை
இராகுகாலம் 1.51-3.21 மணிவரை

வளவன்

**கடகம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் நிலை ஏற்படலாம்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சியுண்டு, பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** வியாபார விரோதம் விலகும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், வளர்ச்சி கூடும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைகள் ஏற்படலாம்.

**கன்னி:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், இனத்தார் பகைமாறி இன்பங்கள் கூடும் நாள், ஆரோக்கியமான நாள், கடன் பாக்கிகள் வசூலாகும்.

# வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் அறநெறி வகுப்புக்களை நடத்த சட்டம்

## யாழ்.மாவட்ட நல்லிணக்க குழுக் கூட்டத்தில் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

இளையோர் மத்தியில் ஆன்மீக சிந்தனை அற்றுவருவதால், அறநெறி வகுப்புகளை வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் நடத்தும் சட்டத்தை அமைச்சின் ஊடாக அமுல்படுத்துவதற்கு மாவட்ட நல்லிணக்கக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



சர்வமதத் தலைவர்களுக்கிடையிலான மாவட்ட நல்லிணக்கக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவா்று வலியுறுத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் மதத் தலைவர்கள்,பாடசாலை அதிபர்கள்,பொலிஸார்,புத்திஜீவிகள் உட்பட பலர் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்தனர்.

அறநெறிப் பாடசாலையில் கூடிய அக்கறை எடுக்க வேண்டும். வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் கல்வி நிலையங்களை மூட வேண்டும். அது வரை அறநெறியில் இளையோரை இணைப்பது மிகக் கடினமாகும்.

வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்திலும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை நேரத்திலும் அறநெறி வகுப்புக்களை நடத்துவதற்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அத்துடன் சமய வழிபாடுகள் நடைபெற வேண்டும்.

எமது இளையோரின் ஆன்மீக சிந்தனை வளர்ச்சி பின்தங்கிய நிலையில் உள்ளது. தனியார் வகுப்பு ஆதிக்கம் கூடிக்கொண்டே செல்லும் நிலையில், மாணவர்களுக்கு ஓய்வு இல்லை, அவர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட வேண்டும். அது தான் சில மாற்றங்களை ஏற்படுத்தும்.

இளையோர்கள் பாரிய சவால்களின் மத்தியில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஆன்மீக வளர்ச்சி கட்டாயம் தேவை. அறநெறி வகுப்புக்களை மேற்குறித்த தினங்களில் நடத்துவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த வடக்கு மாகாண முதலமைச்சரும் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருந்தார் அந்த வகையில் விரைவில் அதை ஒரு சட்டமாக அமுல்படுத்த முயற்சி எடுக்க வேண்டும் என சமயத் தலைவர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

மேலும் இளம் சந்ததியினருக்கு ஆன்மீக சிந்தனைகளை ஊட்ட வேண்டும். தென்னிந்திய சினிமா திரைப்படங்களில் அதிகளவாக வெட்டுவதும் அடிப்பதும் தான் படமாக்குகிறார்கள்.

அதை பார்த்த எமது இளையோர் தம்மை கதாநாயகர்களாக சித்திரித்துக் கொண்டு தீய திசை நோக்கி திரும்புகிறார்கள். இதன் காரணமாகவே பல குற்றச் செயல்களுக்கு இளையவர்கள் உள்ளாகிறார்கள்.

குறிப்பாக பாடசாலை ஆசிரியர்கள் தான் மாணவர்களுக்கு கதாநாயகர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் அன்புடனும் ஒழுக்கத்துடனும் மாணவர்களை நடத்த வேண்டும். மாணவர்களின் மனதை மாற்றக்கூடிய வகையில் ஆசிரியர்கள் இணைந்து பயணிக்க வேண்டும். அப்போது தான் மாணவர்கள் இளையவர்கள் மத்தியில் குற்றச்செயல்கள், சட்டவிரோத செயல்களை தடுக்க முடியும் என பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கருத்து தெரிவிக்கையில், அறநெறி வகுப்புக்களை நடத்துவது தொடர்பாக கடந்த வருடம் தனியார் கல்வி நிலையங்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுத்திருந்தோம்.

ஆனால் போதியளவு ஆதரவை பலர் தரவில்லை. கிராமப்புறங்களில் உள்ள தனியார் நிறுவனங்கள் ஆதரவு தந்திருந்தாலும் நகர் புறத்தில் போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

இது தொடர்பாக நீதி மன்றை அணுகினோம். ஆனால் சட்டரீதியாக செயற்படுத்த முடியாது என தெரிவித்தார்கள். எனவே இதை ஒரு சட்டமாக நல்லிணக்க அமைச்சின் ஊடாக அமுல்படுத்த தீர்மானித்துள்ளோம். இதை நடைமுறைப்படுத்த விரைவில் முயற்சி எடுப்போம் என தெரிவித்தார்.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்ட மாவட்ட நல்லிணக்க குழு கூட்டம் யாழ்.மாவட்டத்தில் 3 ஆவது முறையாக நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

இதில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான தந்திரோபாயங்களை வளர்ப்பது தொடர்பான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## அனுமதியின்றி விடுதி நடத்திய குற்றச்சாட்டில் இருவருக்கு தலா ஒரு இலட்சம் தண்டப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் அனுமதிப் பத்திரமின்றி விடுதி நடத்திய குற்றச்சாட்டின் பேரில் அதன் உரிமையாளர் மற்றும் பொறுப்பாளருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், அந்த விடுதியில் விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்று 3 பெண்கள் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என்பதால் அவர்கள் மூவரையும் வழக்கிலிருந்து நீதவான் விடுவித்துள்ளார்.

யாழ். நகரில் இயங்கிய ஒரு விடுதியில் விபச்சாரம் இடம்பெறுவதாகக் குற்றஞ்சாட்டி கடந்த 2013ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் திகதி பிரதேச செயலாளர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் உள்ளிட்டோர் பொலிஸாருடன் சுற்றிவளைத்து அந்த விடுதியில் தங்கியிருந்த பெண்கள் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் விடுதியின் உரிமையாளர் மற்றும் பொறுப்பாளரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களில் 3 பெண்களுக்கு எதிராக சட்டவிரோத பாலியல் தொழிலில் ஈடுபட்டனர் என பொலிஸார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர். அத்துடன், விடுதி உரிமையாளர் மற்றும் பொறுப்பாளருக்கு எதிராக அனுமதிப்பத்திரமின்றி விடுதியை நடத்தினர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து பொலிஸார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. வழக்கின் விசாரணை நிறைவடைந்த நிலையில் நீதவான் நேற்று முன்தினம் இந்தத் தீர்ப்பை வழங்கினார். (இ-9)




## சாரதி மீது தாக்குதல்

### புலனாய்வாளருக்கும் அவர் முகவருக்கும் இரண்டு மாதங்கள் சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரிலுள்ள தனியார் பேருந்து தரிப்பிடத்தில் வைத்து சாரதியைத் தாக்கிய குற்றச்சாட்டில் பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தர் மற்றும் அவரது முகவராகச் செயற்பட்டவருக்கு தலா இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன் தீர்ப்பளித்துள்ளார்.

அத்துடன், சாரதி மற்றும் நடத்துநரை அச்சுறுத்திய குற்றத்துக்கு தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள தனியார் பேருந்துத் தரிப்பிடத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், சேவைக்காக தரித்துநின்ற பேருந்தின் சாரதியையும் நடத்துநரையும் அச்சுறுத்தி சாராயம் வாங்கித்தருமாறு இருவர் வற்புறுத்தியுள்ளனர். சாரதி அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டார். அதனால் ஆத்திரமடைந்த அந்த நபர்கள் இருவரும் சாரதி மீது தாக்குதல் நடத்தினர். அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தர் மற்றும் அவரின் முகவரும் கைது செய்யப்பட்டனர்.

சாரதி மற்றும் நடத்துநரை அச்சுறுத்தியமை மற்றும் சாரதியைத் தாக்கியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளை முன்வைத்து சந்தேக நபர்கள் இருவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில் இரண்டு குற்றச்சாட்டுகளிலும் இருவரையும் குற்றவாளிகள் என நீதிவான் சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

குற்றவாளிகள் இருவரும் முதலாவது குற்றத்துக்காக தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்தவேண்டும். இரண்டாவது குற்றத்துக் காக குற்றவாளிகள் இருவருக்கும் 2 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது என நீதிவான் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (இ-9)

## சிங்கள மகா வித்தியாலயத்தை மீள ஆரம்பித்து மும்மொழி கற்கை பாடசாலையாக மாற்ற வேண்டும்

### நல்லிணக்க குழுக்கூட்டத்தில் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் அமைந்துள்ள சிங்கள மகா வித்தியாலயத்தை மீண்டும் ஆரம்பித்து மும்மொழி கற்கை பாடசாலையாக மாற்ற வேண்டும் என மாவட்ட நல்லிணக்க குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சர்வமத தலைவர்களுக்கிடையிலான மாவட்ட நல்லிணக்கக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

கிறிஸ்தவ பாதிரியார் டிக்சன் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், யாழ் மாவட்ட சர்வமதகுழுவால் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பல செயற்பாடுகளை பாடசாலை மட்டத்தில் நடத்தியுள்ளோம். வடக்கிலும் பல கலாசார நிகழ்வுகளை நடத்தி வருகிறோம்.

இருப்பினும் சில செயற்திட்டங்களை செய்ய முடியாதுள்ளது. யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு சிங்கள மகா வித்தியாலயத்தை மீண்டும் ஆரம்பித்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். அதில் மூன்று மொழிகளில் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும். இப்பாடசாலை நகரின் மத்தியில் இருப்பதால் மூன்று இனத்தவரும் வந்து கற்கும் போது நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இது ஆக்கபூர்வமான செயற்பாடாக இருக்கும். உயர் மட்டம் வரை இதற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளோம். அனைவரும் இணைந்து முயற்சி செய்தால் இதை நடைமுறைப்படுத்த முடியும் என தெரிவித்தார். மேலும் இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பௌத்த மத துறவி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

அறநெறி பாடசாலைகளுக்கு போவதால் சமூக பிரச்சனைகளில் ஈடுபடமாட்டார்கள் என்பது இல்லை. அறநெறி பாடசாலைகளுக்கு செல்கின்றவர்களும் பிரச்சினைகளில் ஈடுபடுகிறார்கள். அறநெறி வகுப்புகளுக்கு போகாதவர்கள் சமூகப் பிரச்சினையில் ஈடுபடுவார்கள் என்று இல்லை.

அனைத்து தனியார் வகுப்புகளையும் நிறுத்தி அறநெறி வகுப்புக்களை உருவாக்க எம்மால் முடியும். ஆனால் எமது மனமாற்றம் அனுபவ ரீதியான செயற்பாடுகள் தான் சமூகத்தை கட்டியெழுப்ப உதவும் என தனது கருத்தை முன்வைத்திருந்தார். (இ-9)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை இரவு 8 மணியளவில் சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ

# கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தும் திட்டம் வடக்கில் சில வாரங்களில் ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் சிவநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தும் திட்டம் எதிர்வரும் சில வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண விவசாயம் மற்றும் கால்நடைகள் அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார். கட்டாக்காலி நாய்களால் நாளாந்தம் விபத்துக்கள் மற்றும் தொற்றுநோய்கள் அதிகரித்துக் காணப்படும் நிலையில், பொதுமக்கள் இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது குறித்து அமைச்சரிடம் நேற்றைய தினம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் பிரகாரம் கட்டாக்காலி நாய்கள்ளைக் கொல்ல முடியாது. கட்டாக்காலி நாய்கள் பெருக்கமடையாமல் அவற்றுக்கு கருத்தடை தான் செய்து கொள்ள முடியும். இந்த விடயம் முன்னர் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் தான் இருந்தது. தற்போது தான் விவசாய அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தும் நோக்கில் செயற்றிட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் மிக தீவிரமாக நடந்து கொண்டுள்ளன. எதிர்வரும் சில வாரங்களில் சாவகச்சேரியில் முதலாவது செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஏனைய இடங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எனினும் முன்னர் மத்திய அமைச்சுக்குள் வேலை செய்தவர்கள் தற்போது எமது அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த செயற்றிட்டத்திற்குள் முன்வருகின்றனர் இல்லை.

எனவே நாங்கள் ஆளணியை உள்வாங்க வேண்டிய தேவையும் உள்ளது. இந்த ஆளணி தேவை கணிசமான அளவு பூர்த்தி செய்யப்பட்டு விட்டது. புதியவர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு விட்டன. இந்த நிலையில் தான் சாவகச்சேரியில் செயற்றிட்டத்தின் முதலவாது அமர்வு நடைபெறவுள்ளது என தெரிவித்தார். இதே வளை யாழ்.மாநகர சபைக்குட்பட்ட இடங்களில் கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பினால் ஏனைய இடங்களை விட இந்தப் பகுதி மக்கள் அதிகளவு பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட இடங்களில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து யாழ். மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலனிடம் கேட்ட போது, யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தும் செயற்றிட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறிப்பாக மாநகர எல்லைக்குள் உள்ள கட்டாக்காலி நாய்களைப் பிடித்து கருத்தடை செய்த பின்னர் அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் காணப்படும் அரச காணி ஒன்றை கோரியுள்ளோம். இதுவரை அந்த காணி எமக்குக் கிடைக்கவில்லை. அது கிடைத்தவுடன் சுகாதாரத் திணைக்களம் மற்றும் யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பிரிவு ஆகிய இணைந்து மிக விரைவில் இந்த திட்டத்தை முன்னெடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# இலஞ்சம் பெற்ற OIC 28ம் திகதி வரை விளக்கமறியலில்

கைது செய்யப்பட்ட சீதுவ பொலிஸ் நிலையத்தின் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி இம்மாதம் 28 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சீதுவ பொலிஸ் நிலையத்தின் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி 25,000 ரூபா பணம் மற்றும் மதுபான போத்தல் ஒன்றையும் இலஞ்சமாகப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆடைத் தொழிற்சாலைக்கு ஆட்சேர்ப்பு

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தினால் தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டின் தொடர்ச்சியாக கொழும்பில் இயங்கும் முன்னணி ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் 500 வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு மார்ச் மாதம் 19, 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது. 18-32 வயதிற்கு இடைப்பட்ட க.பொ.த. உயர்தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்ற பெண்கள் இந்நேர்முகத் தேர்வில் பங்குபற்றி தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளலாம் என்பதை தெரிவிப்பதுடன் மேலதிக விளக்கங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தில் நேரடியாகவும் 021 221 9359 இலக்க அலுவலக தொலைபேசி ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகின்றேன் என அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ-7)

# உரிமைகளை மீறும் அரசாங்கத்தின் முயற்சிகள் நிறுத்தப்படல் வேண்டும்

## ஜே.வி.பி.வலியுறுத்து



(கொழும்பு)

சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தினால் ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பதற்ற காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக வலைத்தளங்கள் மீதான தடை நிலைமை சுமுகமடைந்தும் நீக்கப்படாது தொடர்கிறது. இது பொதுமக்களை பாரிய நெருக்கடிக்கு தள்ளியுள்ளது.

மேலும், தடையை நீடிப்பதன் மூலம் தகவல்களை அறிந்துகொள்ளல் மற்றும் கருத்துக்களை வெளியிடுதல் போன்ற உரிமைகளை பறிக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

எனவே, விரைந்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் தடுப்பிலுள்ள சமூக வலைத்தளங்கள் விடு விக்கப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை உபத்திரவம் செய்யாமல் இருங்கள்

## விவசாயி கோரிக்கை

(கரணவாய்)

புகையிலையினைத் தடை செய்வது என்பது யாழ்ப்பாணத்தவர்கள் மீது மேற்கொள்ளப்படும் சதித்திட்டமாகவே நாம் கருதுகின்றோம். புகையிலை செய்து எங்களை வாழவிடுங்கள். உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உபத்திரவம் செய்யாமல் இருங்கள் என பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவசாயி ஒருவரால் தெரிவிக்கப்பட்டது.

இணைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தின் போது புகையிலை தொடர்பில் ஆராயப்பட்ட போது விவசாயி ஒருவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்த மண்ணுக்கு, எந்தத் தண்ணிக்கு எந்தப் பயிர் வரும் என்ற அடிப்படையில் நாம் பயிர் செய்கின்றோம். எமது பணப் பயிர் புகையிலை. அதனைச்செய்து எம்மை வாழவிடுங்கள் எனக் கூறினார்.

இதற்குப் பதிலளித்த இணைத் தலைவர்களில் ஒருவரான எம்.ஏ.சுமந்திரன், புகையிலைச் செய்கையை உடனடியாக தடுக்க முடியாது.

ஆனால் தடுப்பதற்கான மாற்றுப்பயிர்செய்கை ஆராய்கின்றோம். இதில் எவ்வித சதித்திட்டமும் கிடையாது. கஞ்சாவினை விட மோசமானது புகையிலை. அதனைத் தடுக்கத்தான் வேண்டும். அதில் மாற்றுக் கருத்தில்லை என்றார்.

இணைத்தலைவர்கள் இருவரும் ஆராய்ந்த பின்னர் இது தொடர்பில் சகல பிரதேச செயலர்களையும் விவ சாயிகளையும் வடமாகாண விவசாய அமைச்சு, மத்தியில் விவசாய அமைச்சினையும் அழைத்து மாவட்ட செயலகத்தில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்வதாக கூறப்பட்டது. (இ-60)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ USA PR
தொ.இ: B/8353

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/8354

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 17 செவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L/கடை
தொ.இ: B/8355

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: B.ENG, MSc/ லண்டன் PR
தொ.இ: B/8356

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 16 சூரிசெவ் 11 இல்
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/8385

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:HNDA
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/8388

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 153cm
தகைமை/தொழில்:IT/ ஜேர்மன் குடியுரிமை
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/8395

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:HNDM/தனியார் தொழில்
தொ.இ: G/8396

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புக்கு தீர்வு காணவேண்டும்

## முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழிருக்கும் பல்கலைக்கழகங்கள், வளாகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் என முப்பதுவரையான கல்வி நிறுவனங்களில் ஊழியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் கடந்த இரு வார காலம் தொடர் பணிப்புறக்கணிப்பினால் சகல கல்விச்செயற்பாடுகளும் செயலற்று இருக்கின்றன என்பது நாடு தழுவிய ரீதியில் கவலைக்குரிய விடயமாகும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும் பல்கலைக்கழக கல்விசாரா தொழிற்சங்க சம்மேளனத்திற்கும் இடையே முன்னர் உடன்பாடு கண்ட கோரிக்கைகளை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அமுல்படுத்தவில்லை என்பதே பணிப்புறக்கணிப்புக்குப் பிரதான காரணமாகும்.

இலங்கையில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குப் பின் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதிபெற ஓரிரு வருடங்கள் எடுக்கின்றன. இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் பாடசாலைக் கல்வி முடிந்து 3 மாதங்களுக்குள் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனர்.


இங்கு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதிக்கப்பட்ட பின்னரும் நியம காலத்திற்குள் அவர்களின் கற்கை நெறி நிறைவடைவதில்லை. உதாரணமாக நான்கு வருடங்கள் கற்கைநெறி நிறைவடைய ஐந்து அல்லது ஆறு வருடங்கள் எடுக்கின்றன. இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள், பட்டமளிப்பு விழாக்கள் நடைபெற மேலும் பல மாதங்களாகின்றன.

இலங்கையில்பாடசாலைக் கல்வி திட்டமிட்ட கால ஒழுங்குமுறையில் சிறப்பாக நடைபெற எங்களது பல்கலைக்கழகக் கல்வி பல்வேறு பிரச்சினைகளால் கால ஒழுங்குக்குள் நிறைவடைவதில்லை. பல்கலைக்கழக மாணவர்களின் ஆக்க பூர்வமான இளவயதுக்காலம் வீணடிக்கப்படுவதுடன் இது பெற்றோருக்கும் நாட்டுக்கும் பெரும்சுமையாக இருக்கின்றது. மேலும் மாணவர்களும் பொருளாதார, சமூக, உளவியல் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளனர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுடன் உடன்பாடு கண்ட கோரிக்கைகளையும் அவர்களது மேம்பாட்டிற்குரிய செயற்பாடுகளையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் அரசும் காலதாமதமின்றி நிறைவேற்றி அவர்களின் விளை திறனும் விளைத்திறனானபணிகளைப் பெற முயற்சிக்க வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாகும். இதனால் பல்கலைக்கழகங்களில் கற்றல், கற்பித்தல், ஆய்வுச் செயற்பாடுகளுக்குச் சிறந்ததொரு சூழல் ஏற்படும் என்பது திண்ணம்.

உலகின் இன்றைய அறிவுசார் பொருளாதாரக் கட்டமைப்பில் பல்கலைக்கழகங்களின் பங்கும் பணியும் மிக முக்கியமானவை.

## 490ஆவது பொலிஸ் நிலையம் கிளிநொச்சியில் நேற்று திறப்பு







(பரந்தன்)

490 ஆவது பொலிஸ் நிலையம் கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் நேற்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ, கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிகன்ன மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இப் பொலிஸ் நிலையமானது யுத்தம் முடிவடைந்து மீள்குடியேற்றப்பட்டதில் இருந்து பொலிஸ் காவலரணாக இயங்கி வந்தது. இக் காவலரண் மிகவும் சிறப்பாக இயங்கியமையால் இது பொலிஸ் நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக எம்.எம்.டி.என். சந்துரங்க பொலிஸ் தலைமை அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-312)

## 50 வீட்டுத்திட்டத்தில் பயனாளிகளை மீள்குடியமர்த்தக் கலந்துரையாடல்

### பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் முடிவு

(பனிக்கன்குளம்)

பனிக்கன்குளம் அரச வீட்டுத்திட்டத்தில் பயனாளிகளை குடியமர்த்துவது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இறுதித் தீர்மானம் எடுப்பதாக பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடந்த 2012 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அரச அதிகாரிகளுக்காக அமைக்கப்பட்ட 50 வீட்டுத்திட்டத்தில் இதுவரை அரச அதிகாரிகள் குடியேறாத காரணத்தால் குறித்த பகுதியில் பல்வேறு கலாசார சீரழிவு சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

குறித்த பகுதியில் கடந்த 2012 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அரச அதிகாரிகளுக்காக காணிகள் துப்புரவு செய்து வழங்கி அதற்குள் அவர்களுக்கான வீடுகளை அமைப்பதற்காக ஒரு இலட்சம் ரூபா மானியமும் இரண்டு இலட்சம் ரூபா கடன் அடிப்படையிலும் வழங்கி அரச அதிகாரிகள் 50 பேர் தமக்கான வீடுகளை அமைத்தனர்.

குறித்த கிராம நிரந்தர வாசிகளின் தேவைகள் பூர்த்தி செய்யாத போதும் குறித்த வீட்டுத்திட்டத்துக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தில் மின்னிணைப்பு வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டு வீதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு குடிநீர் கிணறுகள் அமைத்து கொடுக்கப்பட்டும் பல்வேறு குறைபாடுகளை காரணம் காட்டி பல குடும்பங்கள் இங்கு குடியேறவில்லை.

தற்போது குறித்த பகுதியில் யாருமற்ற நிலையில் அங்கு திருட்டு மற்றும் சட்டவிரோத செயல்கள், பாலியல் ரீதியிலான கலாசார சீரழிவுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதோடு இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக வீட்டுக் கூரைகள், கதவு நிலை, ஜன்னல்கள் திருடப்பட்டும் வருகின்றன.

உரியவர்கள் குடியேறாதன் விளைவால் பலரும் துன்பப்படவேண்டி ஏற்பட்டுள்ளதோடு பல்வேறு குற்றச் செயல்களுக்கு சந்தர்ப்பமாக அமைந்துள்ளதோடு வீடுகள் காடுகளாக உள்ளதோடு வீட்டுக்குள் பாம்புப் புற்றுகள் உருவாகிக் காணப்படுகின்றன. இங்கு மக்களை உடனடியாக மீள்குடியேற்றுமாறு பல தடவை பலரிடம் கூறியும் எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. பல பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களில் இந்த விடயம் பேசப்பட்டும் வெவ்வேறு காரணங்களால் தட்டிக்கழிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போது இங்கு வழமைபோன்று பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதிலும் இதற்கு ஒரு இறுதித் தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைய அரசியல் பிரமுகர்கள், வீட்டுத்திட்ட உரிமையாளர்கள் அனைவரையும் குறித்த கிராமத்தில் எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் சந்தித்து கலந்துரையாடி தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (7-281)

## ஆளணிப் பற்றாக்குறை

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உள்ள பொலிஸ் சாவடியில் பொலிஸாரை கடமையில் அமர்த்துவதற்கு தற்போது ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை பிரதேச செயலக குழுக்கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட போது பதிலளித்த பொலிஸ் பொறுப்பதிகாரி அண்மையில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றை அடுத்து அங்கு பொலிஸார் கடமையில் இல்லை. ஏதாவது சம்பவம் தொடர்பில் தகவல் தந்தால் அங்கு உடனடியாக செல்வோம். ஒரு பொலிஸாரை கடமையில் விடுவதில் பாதுகாப்பு பிரச்சினை உள்ளது. ஆளணி கிடைத்ததும் பொலிஸார் கடமையில் அமர்த்தப்படுவர் என்றார். (இ-60)

## துன்னாலைச் சம்பவம்; தேடுதல் தொடர்கிறது

(கரணவாய்)

துன்னாலை சம்பவம் தொடர்பில் தேடப்படுவோர் சரணடையாமையால் தொடர்ந்து தேடுதல் நடத்தப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் துன்னாலைப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து தற்போதும் பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸாரால் அப்பகுதி மக்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி இச்சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் சிலர் தேடப்பட்டு வருகிறார்கள்.

இவர்கள் தலைமறைவாகி இருப்பதாகவும். இவர்கள் வீடுகளுக்கு வருவதாக தகவல் கிடைத்தால் அங்கு சென்று தேடுதல்கள் மேற்கொள்வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே தேடப்படுவோரின் பட்டியலை வெளியிட்டால் அவர்கள் சரணடைவார்கள் எனக் கூறப்பட்ட போது அவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவர்கள் தொடர்ந்தும் சரணடையாமல் தலை மறைவாக இருப்பதால் தேடுதல் மேற்கொள்ள வேண்டியுள்ளதாக பொலிஸார் கூறினார்.

இது தொடர்பில் அப்பகுதி மக்களுடன் தான் கலந்துரையாடுவதாக இணைத் தலைவரில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (இ-60)

## அபிவிருத்திக் குழுக்கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை

(பனிக்கன்குளம்)

வவுனியா பிரதேச செயலகங்களில் இடம்பெறும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு அதிகளவான பொது அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலர் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியாவில் இடம்பெற்று வரும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு பொது அமைப்பின் பிரதிநிதிகள் சிலருக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றன.

குறிப்பாக கிராம அபிவிருத்தி சங்கங்கள், கமக்கார அமைப்புகளுக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்படுகின்றபோதிலும் பல கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை எனச் சுட்டிக் காட்டியுள்ளனர். (2-281)

# நுளம்புகளின் உறைவிடமானது வவுனியா சிறுவர் பூங்கா

## பாறி விழும் நிலையில் மரங்கள்

(பனிக்கன்குளம்)

வவுனியா நகரசபையின் பொதுப் பூங்காவானது கடந்த வருடம் 10 இலட்சம் ரூபா நிதியில் புனரமைப்புச் செய்யப்பட்டு வடக்கு மாகாண முதலமைச்சரினால் சிறுவர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. பொதுப் பூங்கா வவுனியா நகரசபையினரால் பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் கேள்வி கோரல் மூலம் தனியார் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது சிறுவர் பூங்காவானது பராமரிப்பற்ற நிலையில் காணப்படுவதால் கேள்வி கோரல் மூலம் பெற்றுக்கொண்டவருக்கு பல தடவைகள் மாலை நேரத்தில் 5 மணியளவிலிருந்து அங்கு நுளம்புத் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பெற்றோர்கள் தெரிவித்திருந்தனர். நுளம்புத் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் நேரகாலத்துடன் சிறுவர்களை 5 மணியளவில் அவ்விடத்திலிருந்து அழைத்துச் செல்லவேண்டிய நிலையும் பெற்றோர்களும் நுளம்புக்கடிக்குள் அகப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகின்றது.

நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல தடவைகள் தெரிவித்து வந்த நிலையிலும் இன்று வரையில் எவ்வித நடவடிக்கையும் சம்பந்தப்பட்டவரினால் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் பூங்காவினுள் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த மரங்களின் கொப்புகள் நீண்டு வளர்ந்து செல்கின்றன. இவை சிலவேளைகளில் கடும் காற்றுடன் கூடிய மழையினால் அப்பகுதிகளில் முறிந்து வீழ்ந்து சிறுவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய நிலையில் காணப்படுவதுடன் பாறி வீழ்ந்துவிடவும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன என பெற்றோரினால் சுட்டிக் காட்டப்படுகின்றன.

எனவே இங்குள்ள பாரிய மரங்களின் கிளைகளை வெட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தி சிறுவர்களின் பொழுது போக்கிற்கு அமைதியான சூழலை ஏற்படுத்தித் தருமாறும் பெற்றோர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரியுள்ளனர். (2)

# விசமிகளால் உடைக்கப்பட்ட பாடசாலை மதில் மீள்நிர்மாணம்





(கனகபுரம்)

கிளிநொச்சி கனகபுரம் பாடசாலையின் மைதான காணியில் அமைக்கப்பட்ட சுற்று மதில் கடந்த 12ஆம் திகதி இரவு விசமிகளால் உடைக்கப்பட்டிருந்த நிலையில் அது விமானப் படையினரால் மீள்நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி அம்பாள்குளம் பொருளாதார மத்திய நிலையம் திறப்பு விழாவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வருகை தந்த போது கனகபுரம் பாடசாலை சமூகத்தினரால் பாடசாலை மைதானத்திற்குரிய காணிக்கு சுற்று மதில் அமைத்து தருமாறு கோரி கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து ஆயிரத்து 600 அடி நீளமான மதில் ஜனாதிபதி செயலகத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 45 இலட்சம் ரூபா செலவில் விமானப் படையினரால் அமைக்கப்பட்டு வந்த நிலையில் குறித்த மதில் உடைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பாடசாலை சமூகத்தினரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த மதில் நேற்றுக் காலை முதல் விமானப்படையினரால் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது. (இ-312)



செல்வி.சோபிதா முகுந்தன் எழுதிய "தாய்" சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை ச.ஜெயதாசன் தம்பதியர் பெற்றுக்கொள்வதையும் வவுனியா தமிழ்ச் சங்கம் சார்பாக நூலாசிரியர் கௌரவிக்கப்படுவதனையும் படங்களில் காணலாம்.



கிளிநொச்சி மாவட்டம் சிவநகர் கிராாம மூத்தோர் சங்க கட்டடத் திறப்பு விழாவும் சங்கத்தின் மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் தலைவர் அ.இரகுபதி தலைமையில் நடைபெற்ற போது...

(படம்:-சிவநகர் செய்தியாளர்)

வன்னி வலம்

# விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட மானியத் தொகையைப் பயன்படுத்தி உள்ளீடுகள், உபகரணங்கள் வழங்கல்

## தாண்டிக்குளத்தில் 16ம் திகதி நடைபெறும்

(வவுனியா)

உணவு விவசாய ஸ்தாபனத்தின் (FAO) அனுசரணையுடன் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தில் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட 50%மான அறவீட்டுத் தொகையை பயன்படுத்தி விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் வழங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திற்கென கொள்வனவு செய்யப்பட்ட 13.5 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள், உள்ளீடுகள் என்பன வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தலைமையில் வவுனியா அரசினர் விதை உற்பத்தி பண்ணை தாண்டிக்குளத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் பயனாளிகளாக போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள், ஏனைய பெண்தலைமைத்துவ குடும்பங்கள், பாதிக்கப்பட்ட மாற்று வலுவுடையோர், பெற்றோரை இழந்த பாதிக்கப்பட்ட சிறார்கள், பிள்ளைகளை இழந்த பெற்றோர் ஆகிய தெரிவுப் பிரமாண வகுதிகளுக்கு அமைவாக விவசாயப் போதனாசிரியர், கிராம சேவையாளர் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றின் சிபாரிசுடன் வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலகங்களின் ஊடாக 214 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் நிலக்கடலைச் செய்கைக்கு 15 பேரும் வயல் நிலங்களில் நிலக்கடலைச் செய்கைக்கு 40 பேரும் நிலக்கடலைச் செய்கைக்கு 10 பேரும் தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் வெங்காயச் செய்கைக்கு 15 பேரும் வெங்காயச் செய்கைக்கு 15 பேரும் தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் மிளகாய்ச் செய்கைக்கு 20 பேரும் கொடித்தோடைச் செய்கைக்கு 40 பேரும் துளி நீர்ப்பாசனத்தின் கீழ் பப்பாசிச் செய்கைக்கு 17 பேரும் சேதன இலை மரக்கறிச் செய்கைக்கு 17 பேரும் சேதன மரக்கறிச் செய்கைக்கு 25 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மின்சார நீர்ப் பம்பியுடன் உதிரிப்பாகங்கள், நீர்ப்பம்பி விநியோகக் குழாய், தூவல் நீர்ப்பாசனத் தொகுதி, துளி நீர்ப்பாசனத் தொகுதி, தெளிகருவி, முட்கம்பி, விவசாய உள்ளீடுகள் என்பன அவர்கள் தெரிவு செய்யப்பட்ட தொகுதிக்கு அமைவாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# காணி ஆவணங்கள் வலுவுள்ளதால் புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்க முடியாது

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தெரிவிப்பு

(கண்டாவளை)

மத்திய வகுப்பு காணிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஆவணங்கள் வலுவுள்ளதாக இருப்பதனால் இக்காணிகள் தொடர்பில் தாங்கள் பல்வேறு பிணக்குகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட தேவிபுரம் பகுதியில் மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட காணியில் காணி உரிமையாளர்கள் அல்லாத பலர் கடந்த 27 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு சொந்தக் காணிகளின்றி நீண்டகாலம் இவ்வாறான காணிகளில் வாழ்ந்து வரும் தமக்கு நிரந்தரமான வீட்டுத்திட்டங்கள், காணி ஆவணங்கள் என்பவற்றை வழங்குமாறு தற்போது வாழ்ந்து வரும் குடும்பங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் மத்திய வகுப்புத் திட்டக் காணிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்களே வலுவானதாக உள்ளதால் அதனை இரத்துச் செய்து புதிய அனுமதிப்பத்திரம் எதுவும் வழங்க முடியாது.

இது தொடர்பில் தொடர்ந்தும் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றோம். அந்தக் காணிகளில் வீடுகள் வழங்கப்பட்டமை தொடர்பில் தற்போது நீதிமன்ற வழக்குகளுக்கு செல்ல வேண்டியுள்ள நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான காணிகளில் வாழ்பவர்கள் அதன் உண்மையான உரிமையாளர்களை கண்டு பிடித்து அவர்கள் மூலம் ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இதனை இலகுவாக தீர்க்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# கலைத்தரிசனம்





## “கலையரசு” பா.வேதநாயகம் அவர்களுடனான சந்திப்பு

“ நமது தமிழர் பாரம்பரிய கலைகளில் முக்கியமான நாட்டுக் கூத்துக்கலை மெல்ல மெல்ல அழிந்து வரும் தற்காலத்தில் அதற்கு மருந்திட்டு பேணிப்பராமரித்து வடமராட் சிப் பகுதியில் வாழவைத்துக் கொண்டிருக்கும் இவர் 1948. 10.18 இல் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரும் கலையரசு சொர்ணலிங்கமும் பிறந்து வாழ்ந்து கலையுலகிற்குப் புகழ்தேடிய நவாலியூரில் நாட்டுகூத்து வேந்தன் அமரர் பர்னாந்து பாவிலுப்பிள்ளையின் இரண்டாவது புத்திரனாக பிறந்து நவாலி சென்.பீற்றர் பாடசாலையிலும் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து, கிளிநெச்சி சென் தெரேசா மகா வித்தியாலயத்திலும் பயின்றார். நாட்டுக்கூத்துடன் இவரின் பணி நின்று விடாது மாறாக சிந்து நடைக்கூத்து, நாடகம், தாளலயம், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, கவிதை, நாட்டார் பாடல் போன்ற விடயங்களை உருவாக்கி, நெறிப்படுத்தி அரங்கேற்ற வல்லவர். இது தவிர வானொலிக்கு நாடகங்கள் எழுதுவது, கவிதையில் வாழ்த்து மடல்கள் புனைவது, பாடசாலைச் சிறார்களுக்கான ஓவியம் வரைவது, குறுநாடகங்கள், சிறுகதை என்பவற்றை எழுதி நெறிப்படுத்தி அதற்கான பரிசில்களையும் பெற்று வடமராட்சி மண்ணுக்குப் பெருமை தேடித்தந்தவர் பருத்தித்துறை தும்பளையை நிரந்திரவதிவிடமாகக் கொண்ட கலாபூஷணம் பா.வேதநாயகம் அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய செல்வி பிரசுரமாகிறது. ”

**★ கூத்துக்கலையை நீங்கள் எப்படி கற்றீர்கள்?**

எனது தந்தையார் மிகச்சிறந்த அண்ணாவிகளுள் ஒருவர். இவர் பக்கவாத்தியங்களை மீட்டுவதில் வல்லவராக இருந்தார். பல கூத்துகளை நெறிப்படுத்தி அரங்கேற்றி பரிசில்களும் பாராட்டும் பெற்றவர். நவாலியூர் பர்ணாந்து பாவினுப்பிள்ளை என்றால் நாடக மாந்தர் யாவரும் அறிவர். அவரின் பிள்ளைகளாகிய நாமனைவரும் சிறுவயதிலிருந்தே இந்தக் கூத்துக்கலையைக் கற்றுக் கொண்டோம். அவர் பிறருக்குக் கற்றுக் கொடுக்கும் போது அதனைக்கேட்டு அறிந்து கொண்டது பாதி, அவர் தூங்கும் போது தவிர, பாடல் இசைத்துக்கொண்டு இருக்கும் வேளைகளில் கேட்டு அறிந்து கொண்டது மீதியாகும். இது தவிர கூத்துகளுக்கும் ஒத்திகைகள் நடக்கும் போதெல்லாம் எம்மைக்கூடவே அழைத்துச் செல்வார். இதன் பயனாகவே கூத்துக்கலையை நான் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

**★ நாட்டுக்கூத்துக்கலையைப் பற்றி நீங்கள் சொல்லக் கூடியது என்ன?**

கூத்து என்ற பெயர் வந்ததே குதித்து ஆடுதல் என்பதால் தான். ஐரோப்பியரின் வருகைக்கு முன்பு நாடகம் என்றால் அது கூத்தாகவே இருந்தது. இது ஆடல், பாடல் மரபைப் பிணைந்து புராண, இதிகாசக் கருத்துகளைக் கருப்பொருளாய்க் கொண்டு இருந்திருக்கிறது. பின்னர் 1505 ஆம் ஆண்டில் மேலைத் தேசத்தவரின் வருகையால் தமது மதப்பரப்புதலின் ஊடகமாகப் பயன்படுத்தப் பட்டு அவர்களாலேயே இந்தக்கலை வளர்க்கப்பட்டதெனலாம். பிற்காலத்தில் கத்தோலிக்க மத அறிஞர்களாலும் துறவிகளாலும் அண்ணாவிமாராலும் பராமரித்துப் பாதுகாக்கப்பட்டது. இது வடமோடி, தென்மோடி என இரு பிரிவுகளாகக் காணப்படுகிறது. இராமாயணம், மகாபாரதம் போன்ற வடமொழியின் வீரகாவியங்கள் வடமோடியிலும் தமிழ்க் காவியங்கள் சார்ந்த காதல் கதைகள் தென்மோடியிலும் இடம்பெற்றிருக்கின்றன். காலப் போக்கில் தம் மத நெறிகளுக்கேற்ப ஆடல் மரபைக் கைவிட்டு கடனுக்கு அடிப்படையான தாளலயம் தென்மோடிக் கூத்தில் பேணப்பட்டிருக்கின்றது.

**★ ஒருவர் அண்ணாவியாராக வருவதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் என்ன எனக் கருதுகிறீர்கள்?**

கூத்தைப் பொறுத்தவரையில் இதைப் பற்றிய தெளிவான அறிவும் குரல் வளமும் தாளத்திற்கேற்ப இசைக்கக்கூடிய தன்மையும் இருக்க வேண்டும். இராகம், தாளம் குறிப்பிடப்படாத பாடல்களாயினும் அவற்றை இனங்கண்டு அதற்கான இராகத்தை அறிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் வேண்டும். அத்துடன் எந்த வேடமானாலும் அதனைக் கற்றுக்கொடுத்து கூத்தை நெறிப்படுத்தவும் ஆர்மோனியம், மிருதங்கம் போன்ற பக்க வாத்தியங்களை ஓரளவேனும் கையாளும் திறமை பெற்றிருப்பதுடன் கூத்துக்களை மரபுமுறை மாறாது ஆக்கும் திறனும் பெற்றிருப்பின் அவர் அண்ணாவியாராக இருப்பதற்குத் தகுதியானவர் எனலாம்.

**★ நீங்கள் எழுதிய கூத்துக்கள் பற்றிக் கூறுங்கள்?**

நான் யாழ்ப்பாணப் பாங்கான தென்மோடி நாட்டுக்கூத்தில் 1994 இல் (ஜோசவாஸ்) ஒளி கொடுத்த உத்தமன் என்ற கூத்துடன் வீரத்தாய், கனவும் பலிக்குமா?, விலையான தலை, தூயசவேரியார், யாருக்கு மணிமுடி, தூய தோமையார், அலங்கார ரூபன், தூய அந்தோனியார் போன்ற முழு இரவுக் கூத்துக்களையும் ஒளி பிறக்குமா?, “கெட்ட ஊழியன்” சாமரியப்பெண் என்று விவிலியக் கதைகளை ஒரு மணி நேரக் கூத்துக்களாகவும் அரக்கனை வென்ற மழலை, பெரிய தம்பிரான் என்ற இரு கூத்துக்களை மட்டக்களப்பு விபுலானந்தர் பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி ஜெய்சங்கரின் பணிப்புக்கிசைய இரண்டு மணி நேரக் கூத்துக்களாக எழுதி உள்ளேன்.

**★ தங்களின் தந்தையாரின் காலத்து மேடை ஒலி, ஒளி பற்றிக் கூறுங்கள்?**

அந்நாட்களில் மேடை அமைப்புகள் மிகச் சிரமத்துடன் மேற்கொள்ளப்பட்டன. காய்க்காத காய்த்து ஓய்ந்த தென்னைகளை அளவோடு தறித்து மேடையின் அளவுக்கு நான்கு மூலைகளிலும் நடுவார்கள். நடப்பட்ட நான்கு பக்கங்களுக்கும் அளவான தென்னங்குற்றிகள் ஒன்றன்மேல் ஒன்று அடுக்கப்பட்டு தொட்டிபோல் உருவாக்கி அதில் மணலை நிறைந்து விட அது மேடையாகிவிடும். பின்னர் சீன் (திரைகள்) காட்டப்படும். நல்ல சந்த சாரீரம் உள்ளவர்களை உள்வாங்கி கூத்து ஆடப்பட்டு வந்ததால் ஒலிபெருக்கியின் தேவை அங்கு இருக்கவில்லை. அடுத்து வெளிச்சத்திற்காகப் பெற்றோல் மாக்ஸ்ஸினைப் பயன்படுத்தி அக்குறையைப் போக்கினர். அத்துடன் அக்காலத்தில் மின்சாரப் பாவனை நகரப் பகுதிகளில் மட்டுமே காணப்பட்டது.



**★ தென்மோடி நாட்டுக் கூத்தின் அம்சங்கள் எவை எனக் கருதுகிறீர்கள்?**

இந்தக் கூத்தில் தற்போதுள்ள அம்சங்களான காப்பு, விருத்தம், எண் சீர்விருத்தம், அறுசீர்விருத்தம், ஆசிரிய விருத்தம், சந்த விருத்தம், இன்னிசை கொச்சகம், பரணி, தாழிசை காதல், ஆசிரியர், கழிநெடில் தரு மங்களத்தரு, சனபகவி, வருகவி, ஆட்டத் தரு என இன்னும் பல. இவற்றை இராகதாளத்துடன் பாடுவது கடினம் என்பதால் தற்கால இளைஞர்கள் இதில் நாட்டம் கொள்வதில்லை. அதிலும் சினிமா மோகம் விண்ணையே தொட்டு விட்டது. இருப்பினும் பயில முன்வருவோர் அதிக கூத்துக்களையும் அதிக ஒத்திகைகளையும் பார்த்து அதில் ரசனையை ஏற்படுத்திய பின்னரே சிறந்த அண்ணாவிமாரிடத்தில் கூத்தைப் பயின்று கொள்வது சிறந்தது என்பது எனது கருத்து.

**★ நீங்கள் பயிற்றும் இடங்களையும் அண்ணாவிமாராகி உங் களுக்குப் பின் இக்கலையைத் தொடர ஏதும் வழிவகை செய்தீர்களா?**

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, குடத்தனை போன்ற பகுதிகளிலும் வடமராட்சி வடக்கில் சக்கோட்டை, பொலி கண்டிப் பகுதிகளிலும் பலாலி அன்ரனிபுரம் போன்ற பகுதிகளில் உள்ள இளம் தலைமுறையினர் இருபாலாரும் மிக ஆர்வத்தோடு பங்களிப்புச் செய்வதால் அக்கூத்துக்கள் பெரும் வெற்றிகளை எனக்குத் தந்தன. கட்டைக்காட்டில் முத்துராசா என்பவரும் வெற்றிலைக் கேணியில் ஜோர்ஜ் என்பவரும் குடத்தனையில் திருமதி வசந்தா என்பவரும் சக்கோட்டையில் ஜெயசிங்கம் என்பவர்கள் எனது உதவிகள் இல்லாமலே கூத்துக்களைப் பயிற்றுவித்து அறிக்கை செய்பவர்களாக மாறிவிட்டதால் எனது வாரிசுகளாக மாறி விட்டனர்.

**★ நீங்கள் முதன் முதலில் அரங்கம் ஏறிய காலத்தையும் கூத்தையும் குறிப்பிடுங்கள்?**

வவுனியா சின்னக்குளத்தில் 1968 இல் “புனித பார்றெம்பாள்” என்ற கூத்தில் மன்னர் மட்சியான் வேடத்தில் தோன்றி பின்னர் ‘ஞானசவுந்தரி’ ‘கற்பைக் காத்த மங்கை’ ‘தேவசகாயம் பிள்ளை’ ‘விசயமனோகரன்’ எனப் பல கூத்துக்களைத் தொடர்ந்து மேடையேற்றினேன்.

**★ நாட்டுக்கூத்து துறையில் நீங்கள் புதிய யுக்திகளைக் கையாண்டதுண்டா?**

நாட்டுக்கூத்தின் மரபு முறைகளுக்குக் குந்தகம் விளைவிக்காமல் கதையிலே மாற்றமும் நினைவுக் காட்சிகள்-வரலாறுகள் போன்றவற்றை ஒருவர் சொல்லத் தொடங்க அதனைக் காட்சியில் காட்டுவதற்கு 1993 இல் “யாருக்கு மணிமுடி” என்ற கூத்தை உருவாக்கி அரங்கேற்றினேன்.

**★ தாங்கள் எழுதி மேடையேற்றிய நாடகங்கள் பற்றி?**

பள்ளிப் பருவத்தில் பல நாடகங்களை ஆக்கி அரங்கேற்றுவதற்கு தும்பளை தெற்கு தமிழொலி நாடக மன்றம் எனக்கு முழுமையான களமமைத்துத் தந்ததையிட்டு நன்றியுடன் இதை நினைவு கூறுகின்றேன். அன்றிலிருந்து இன்றுவரை பல நாடகங்களையும் பல கலைஞர்களையும் உருவாக்கியுள்ளேன். 1991 இல் “சுருகுசுரமாகிறது”, 1992 இல் “பாவமா பாசமா”, 1993இல் “சங்கிலியன் வரலாற்று நாடகம்” போட்டியில் முதலாமிடத்தையும் பெற்றது. பின்னர் நாட்டில் சீரற்ற தன்மையால் சிறிது தடைப்பட்டு 2003 இல் மீண்டும் “சங்கமம்” எனும் நாடகத்தையும் 2004இல் “வார்த்தைக்குப் பின்னால்” எனும் நாடகத்தையும் 2005இல் தண்டனை என்ற நாடகத்தையும் அரங் கேற்றினேன்.

**★ நீங்கள் பெற்ற வெற்றிகள் விருதுகள் பற்றி?**

1992இல் ஒளி கொடுத்த உத்தமன் கூத்தினை எழுதிப் பாத்திரம் ஏற்று பயிற்றுவித்து அளிக்கை செய்தமைக்காக பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் வண.பிதா.பீ.எம் இம்மானுவேல் அடிகளார் நாட்டுக்கூத்து மன்னன் என்றும் 1995 கலையரசு என்ற பட்டத்தையும் வடமராட்சிக் கல்வி வலயத்தினரால் கலைவாரிதி என்ற விருதையும் பருத்தித்துறை பிரதேச செயலகக் கலாசார பேரவையினர் கலைப்பரிதி என்ற விருதையும் 2014 இல் கலாபூஷண விருதையும் 1998 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அறுபத்து நான்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன்.

**★ இக்கூத்துக்கலை அழிவுறாது பாதுகாக்க ஆர்வலர்களுக்கு நீங்கள் கூறுவது?**

தற்போது சினிமா என்பது இளந்தலைமுறையினரை ஆக்கிரமித்து விட்டது .சினிமா தொலைக்காட்சி நாட்டில் பெருகி விட்டதால் பலமான சவாலுக்கு நாம் முகம்கொடுக்க வேண்டியுள்ளது. அதனால் நமது பாரம்பரிய சொத்துக்கள் முற்றாக அழிந்து போக வாய்ப்புள்ளது. அதனை அரசு கவனத்திற் கொண்டு பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு முதல் ஒரு பாடமாக்கி கற்பித்தலை மேற்கொண்டால் ஓரளவேனும் இக்கலையை அழிவினின்று பாதுகாக்கலாம் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

# சமுர்த்தி உத்தியோகத்தர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு!





(ஏறாவூர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் மாவடிவேம்பு பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் கிரான் பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தித் திட்ட உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கறுவல்தம்பி வரதராஜன் (வயது 56) என்பவரே உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை கோதுமைமா ஆலையிலிருந்து கல்முனை நோக்கி கோதுமை மாவை ஏற்றிவந்து கொண்டிருந்த லொறியும் வந்தாறுமூலையிலிருந்து சித்தாண்டி நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வரதராஜன் படுகாயமடைந்த நிலையில் அருகிலிருந்த மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி மரணித்துள்ளார்.

ஸ்தலத்திற்கு விரைந்த ஏறாவூர் போக்குவரத்துப் பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டு லொறி சாரதியைக் கைது செய்துள்ளதோடு லொறியையும் கைப்பற்றி ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# உயிர் காத்த வைத்தியர் வீட்டிற்கே உலை வைத்த மோசமான இளைஞர்கள்



(கம்பளை)

உயிரை மீட்டுத் தந்த வைத்தியர் ஒருவரின் வீட்டினுள் புகுந்து கொள்ளையடித்த இரண்டு இளைஞர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவம் நுவரெலியா மாவட்டம் கம்பளையில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குறித்த இரண்டு கொள்ளைக்கார இளைஞர்களின் தந்தை கடுமையான நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டு கம்பளை போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்துள்ளதாகவும் அதன் போது அவருக்கு மிகுந்த அக்கறையுடன் வைத்தியர் ஒருவர் மருத்துவ சிகிச்சையளித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. குறித்த வைத்தியரின் அர்ப்பணிப்பான சேவையால் நோயாளி குணமடைந்து வீட்டிற்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நோயாளியின் இரண்டு மகன்களும் குறித்த வைத்தியரின் வீட்டுக் கதவை உடைத்து உள்ளே சென்று பாரிய கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் இருவரும் 18 மற்றும் 19 வயதானவர்கள் என்றும் இவர்களைத் தாம் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுக்குப் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட இருவரையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த கொள்ளைச் சந்தேகநபர்கள் இருவரும் சுமார் நான்கரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைக் களவாடியதாகவும் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு அடிமையாகியுள்ள குறித்த இரண்டு இளைஞர்களும் ஏற்கனவே பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்காக தண்டனை அனுபவித்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# மதுபாவனையை ஒழிப்பதே குறிக்கோள்

## சுமந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கரணவாய்)

மது பாவனைச் சாலைகளிற்கான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு மதுபாவனையை ஊக்குவிப்பதற்காக நாம் செயற்படுகின்றோம் என்ற தோரணையில் தயவு செய்து செய்திகளை வெளியிட வேண்டாம்.

மதுபாவனையை குறைப்பதும் முடிந்தால் அதை இல்லாது ஒழிப்பதுமே எமது குறிக்கோள் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் மாலை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத்தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது பருத்தித்துறையில் உள்ள மதுபான சாலை தொடர்பான விடயம் எடுக்கப்பட்ட போதே இணைத்தலைவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் மதுபான சாலைகள் தொடர்பில் கதைக்கப்பட்ட விடயத்தை பத்திரிகைகள் திரிவுபடுத்தி பிரசுரித்திருந்தன.

செய்திகளை விளங்கிக் கொண்டு பிரசுரிக்க வேண்டும். விளங்காவிட்டால் கேட்க வேண்டும்.

புதிதாக எந்த மதுபான நிலையத்திற்கும் அனுமதி கொடுக்கவில்லை. இயங்கும் மதுபான சாலைகள் சமயத்தலங்கள் அல்லது பாடசாலைகளுக்கு அருகில் இருந்தால் அனுமதி கொடுக்க முடியாது என்ற கட்டளை உள்ளது. அதையும் மீறி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டால் அதனை மீறி பிரதேச செயலரோ, இக் கூட்டமோ செயற்பட முடியாது.

மதுபாவனையை குறைக்க வேண்டும், இல்லாதொழிக்க வேண்டும் என்பதில் ஒரு நிலைப்பாட்டில் உள்ளோம். அதில் மாற்றுக் கருத்து எதுவும் கிடையாது.

இதனை செயற்படுத்துவதற்கு பாடசாலை மாணவர் மட்டத்திலும் இளைஞர்கள் மத்தியிலும் வேலைத் திட்டத்தினை செய்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# சுற்றுச் சூழல் விவசாயம் யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் (JMF), இலங்கை பொறியியலாளர் நிறுவகம்-(வடபிராந்தியம்)(IESL) இணைந்து "சுற்றுச்சூழல் விவசாயம்" பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது. இக்கலந்துரையாடலானது நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கின் வளவாளராக பேராசிரியர் ஆசி. காந்தராஜா (மேற்கு சிட்னி பல்கலைக்கழகம்) கலந்து கொள்வார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ)

# ரணிலுக்கு உதவ முயன்ற ஹக்கீமுக்கு ஏற்பட்ட நிலை

(கொழும்பு)

பிரதியமைச்சர் ஹரீஸ் மீது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டிக்கொண்டதற்கு இணங்க ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முயற்சித்த அமைச்சர் ரவூப் ஹக்கீமின் மூக்குடைந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களுக்கு எதிராகவும் முன்னாள் சட்ட ஒழுங்குகள் அமைச்சராக இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து போராடிய பிரதியமைச்சர் ஹரிஸை உடனடியாக இடைநிறுத்த வேண்டும் என அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் பிரதமர் கோரியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, அதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தொலைபேசியூடாக பிரதமருக்கு வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்.

இதன் காரணமாக குறித்த ஒழுக்காற்று நடவடிக்கை கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்தில் "ஹரிஸ்"க்கு எதிராக நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் கட்சியின் செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் கூட்டத்தில் பிரேரணை கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, பிரதியமைச்சர் ஹரிஸ்"க்கு ஆதரவான கருத்துக்கள் மேலோங்கியதால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அமைச்சர் ரவூப் ஹக்கீமும் நிசாம் காரியப்பரும் அவரை சார்ந்த சிலரும் ஒழுக்காற்று நடவடிக்கை முயற்சியில் தோல்வியடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# அரச புகைப்பட விழாவுக்கு மே 15 வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டின் அரச புகைப்பட விழாவுக்கு தற்பொழுதிலிருந்து படைப்புகள் ஏற்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த விடயத்தினை உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து மேற்படி திணைக்களம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஐந்து பிரிவுகளின் கீழ் நடைபெறும் இந்த விழாவுக்கு இலங்கையர் அனைவரும் தமது படைப்புக்களை அனுப்பி வைக்க முடியும். விண்ணப்பம் உள்ளிட்ட விபரங்களை பிரதேச செயலகத்திலும், மாவட்ட செயலகத்திலும் பெற்றுக் கொள்ள முடியும். கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தலைமையகத்திலும் விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை நாட்டில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ கையளிக்க முடியும்.

கலாசார திணைக்களத்தின் தலைமையகத்திற்கு நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும்.

மேமாதம் 15 ஆம் திகதி வரை இதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்று அந்த செய்திக்குறிப்பின் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பில் விசேட சுற்றிவளைப்பு 23 இந்தியர்கள் நேற்றுக் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது 23 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து சட்டவிரோதமான முறையில் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

புறக்கோட்டை, செட்டியார் தெருவில் மூன்று வெவ்வேறு இடங்களில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பெண் ஒருவர் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாஸ்திரம் பார்க்கும் தொழிலில் ஈடுபட்ட 9 பேரும், துணி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 9 பேரும், கூலித் தொழிலில் ஈடுபட்டு வந்த 5 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# இரண்டு மாதங்களில் மாத்திரம் 1,532 சிறுவர் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டின் கடந்த இரண்டு மாதங்களில் ஆயிரத்து 532 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

உடல், உள, பாலியல் ரீதியான தொந்தரவுகள் மற்றும் புறக்கணிப்பு முதலான சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கட்டாயக் கல்வி வழங்கப்படாமை தொடர்பில் 241 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.


கம்பஹா, கொழும்பு, களுத்துறை, குருநாகல், இரத்தினபுரி மற்றும் புத்தளம் முதலான மாவட்டங்களிலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

மேலும், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பாரதம்

# தமிழின அழிப்பிற்கு நீதிகோரி ஜெனிவாவில் திரண்ட தமிழர்கள்



## பென்னு குறுங்கோளை கண்டறிந்தது நாசாவின் ஓஸிரிஸ் ரெக்ஸ் விண்கலம்


(புளோரிடா)

பூமியின் குறுங்கோளை கண்டுபிடிக்க நாசா அனுப்பிய ஓஸிரிஸ் ரெக்ஸ் என்ற விண்கலம் பென்னு என்னும் குறுங்கோளின் படங்களை அனுப்பியுள்ளது.

குறுங்கோளில் உள்ள கனிம வளங்களை கண்டு பிடிப்பதற்காக கடந்த 2016 ஆம் ஆண்டு புளோரிடாவின் கேப்கேனவரால் ஏவு தளத்திலிருந்து ஓஸிரிஸ் ரெக்ஸ் விண்கலத்தை நாசா நிறுவனம் அனுப்பியது.

## இந்திய வரைபடத்தில் ஆந்திரா இல்லையா?

## சந்திரபாபு நாயுடு கேள்வி



(அமராவதி)

இந்திய வரைபடத்தில் ஆந்திர மாநிலம் இல்லையா? என அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு மத்திய அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

"ஆந்திர மாநில பிரிவினைச் சட்டத்தில் உள்ள அம்சங்களை மட்டுமே அமுல் படுத்துமாறு மத்திய அரசை வலியுறுத்தினோம். ஆனால் அதிலும் மத்திய அரசு தனது அலட்சியப் போக்கைக் காட்டுவது சரியல்ல. மாநிலப் பிரிவினையால் பெருமளவு நட்டம் அடைந்துள்ள ஆந்திர மாநிலத்துக்கு உதவ வேண்டிய மத்திய அரசு, கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்ற தயங்குவது ஏன்? பொலிஸ் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றை ஆந்திராவில் நிறுவாமல் இருப்பதன் பின்னணி என்ன?

ஆந்திரா இந்திய வரைபடத்தில் இல்லையா? அல்லது ஆந்திரா இந்தியாவிலேயே இல்லையா? மாநில சிறப்பு அந்தஸ்து விடயத்தில் அனைத்து கட்சிகளும் ஒரே நிலை வகிக்கின்றன. ஆனால் வை. எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சியின் அமைச்சர் விஜய சாய் ரெட்டி மட்டும், சிறப்பு அந்தஸ்து வழங்குவது என்பது பா.ஜ.கவால் மட்டுமே சாத்தியம் என்கிறார். இவர் இப்படி சொல்லும்போது, ஒரு புறம் வை.எஸ்.ஆர்.காங்கிரஸ் கட்சி, மத்திய அரசு மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வருவோம் என்றும் கூறுகிறது.

எதை நம்புவது? மாநில சிறப்பு அந்தஸ்து எங்களது உரிமை. அதை எக்காரணத்தைக் கொண்டும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## பாலஸ்தீன பிரதமரை இலக்கு வைத்து காரில் வெடிகுண்டுத் தாக்குதல்



(காஸா)

காஸாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பாலஸ்தீன பிரதமர் ராமி ஹம்டல்லா நூலிழையில் உயிர் தப்பியுள்ளார்.

பாலஸ்தீன பிரதமர் ராமி ஹம்டல்லா தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் காஸாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் அவருடைய வாகனத் தொடரணியை இலக்கு வைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும், பிரதமருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றும் அவர் திட்டமிட்டபடி குறித்த தொலைக் காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்றதாகவும் கூறப்படுகின்றது.

இருப்பினும் வெடிகுண்டு தாக்குதலில் ஐவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலை ஹமாஸ் போராளிகளே நடத்தியிருப்பர் என்று சந்தேகிக்கப்படுகின்ற போதிலும் உறுதியான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# வெளிநாடு

ஈழத்தில் இடம்பெற்ற தமிழ் இன அழிப்பிற்கு நீதி கோரி மாபெரும் போராட்டம் ஒன்று ஜெனிவாவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த நீதி கோரும் மாபெரும் போராட்டம் ஜெனிவா புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பூங்காவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில் பல இலட்சக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பல தசாப்தங்களாக இலங்கையில் தொடர்ந்து நடத்தப்படும் தமிழினப் படுகொலையை முழுமையாக ஆராய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் அவை மார்ச் 2011 அறிக்கைக்கு நீதி கிடைக்கும் பொருட்டு அனைத்துலக சமூகம். அனைத்துலக நீதிமன்றில் விசாரணையை நடத்தி தமிழ் மக்களுக்கான நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து குறித்த போராட்டம் இடம்பெற்றது.

## உலகின் புகழ்பூத்த இயல்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் லண்டனில் காலமானார்



(லண்டன்)

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் நேற்று காலமானார்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங்.

குவாண்டம் கோட்பாடு, அண்டவியல், கருந்துளை ஆராய்ச்சியில் இவரது பங்கு முக்கியமானது.

பல்வேறு அறிவியல் மாநாட்டில் பங்கேற்று மக்களுக்கு அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.

நரம்பியல் நோயால் உடலியக்கம் பாதிக்கப்பட்ட நிலையிலும், விசேடமாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி தனது ஆராய்ச்சியை தொடர்ந்தார்.

இந்நிலையில், விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங், நேற்று அதிகாலை காலமானார். அவருக்கு வயது 76. லண்டன் கேம்பிரிட்ஜில் உள்ள வீட்டில் அவரது உயிர் பிரிந்ததாக அவரது குடும்ப செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (10)

2 மில்லியன் கிலோமீற்றர் பயணம் செய்த ரெக்ஸ், பென்னு என்ற குறுங்கோளை கண்டறிந்து அதில் கரையறங்கியது.

பென்னுவின் மேற்பரப்பை படம் எடுத்துள்ள ஓஸிரிஸ் ரெக்ஸ் அதனை நாசாவின் தலைமையகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

ஓஸிரிஸ் ரெக்ஸ் 1.3 மில்லியன் கிலோமீற்றர் வரை பயணிக்கும் என்று நாசாவின் தலைமையகம் தெரிவித்துள்ளது. (10)

## அமெ.வெளியுறவு செயலாளராக மைக் போம்போயா நியமனம்

## டில்லர்சன் அதிரடி நீக்கம்




(வோஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவு செயலாளராக இருந்த ரெக்ஸ் டில்லர்சன்னை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் நீக்கினார். அந்தப் பதவிக்கு சிஐஏ இயக்குநராக பணிபுரிந்து வந்த மைக் போம்பியாவை அவர் நியமித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவு செயலராக பணியாற்றி வந்த ரெக்ஸ் டில்லர்சன்னுக்கும், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் இடையே அண்மைக்காலமாக பல்வேறு விவகாரங்களில் கருத்து வேறுபாடு இருந்து வந்தது. குறிப்பாக, வட கொரியா விவகாரத்தில் அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கைகளுக்கு அவர் வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்.

இந்நிலையில், அமெரிக்க அரசின் வெளியுறவுச் செயலர் பதவியிலிருந்து ரெக்ஸ் டில்லர்சனை ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கினார்.

இதையடுத்து, அந்தப் பதவிக்கு, அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏ அமைப்பின் இயக்குநராக பொறுப்பு வகித்து வந்த மைக்போம்பியாவை ட்ரம்ப் நியமித்துள்ளார்.

அதேபோல், சிஐஏ இயக்குநர் பதவிக்கு ஜீனா ஹாஸ் பெல்ஸை நியமிக்க ட்ரம்ப் உத்தரவிட்டார். சிஐஏ இயக்குநராக ஒரு பெண் நியமிக்கப்படுவது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது. டில்லர்சனின் திடீர் பதவி நீக்கத்திற்கு சர்வதேச நாடுகள் கண்டனம் வெளியிட்டுள்ளன. (10)

## மக்கள் மய்ய உறுப்பினர் பட்டியலில் தமிழிசையின் பெயரும் இணைப்பு



(சென்னை)

நடிகர் கமல்ஹாசனின் மக்கள் மய்யம் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டுள்ளதாகத் தெரிவித்து, மின்னஞ்சல் வந்துள்ளதாக தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

"கமல்ஹாசன் கட்சியில் நான் உறுப்பினராக சேர்ந்துள்ளதாக தெரிவித்து மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளது. அதில் 'வைத்தியர் தமிழிசைக்கு வணக்கம்.

உறுப்பினராக சேர்ந்தமைக்கு உளமாற நன்றி. நீங்களும், நானும் நாமானோம், நாளை நமதே. இது உங்கள் உறுப்பினர் அடையாளமாகும்' என்று குறிப்பிட்டு உறுப்பினர் எண்ணாக டிஎன்.இ டி.ஓ.இ எப். 92829 எனவும் 'என்றும் மாறாத அன்புடன் கமல்ஹாசன்' என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இவ்வாறுதான் கட்சி உறுப்பினர்களை அவர்கள் சேர்த்து கொள்கிறார்கள்" என தமிழிசை குற்றம்சாட்டியுள்ளார். (10)

## வேகக் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததில் 38பேர் பலி

### எதியோப்பியாவில் சம்பவம்

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் 38 பேர் பரிதா பமாக உயிரிழந்தனர். 10 பேர் படு காயமடைந்துள்ளனர்.

எதியோப்பியாவின் அம்ஹாரா மாநிலம், லேகம்போ மாவட்டத்தில் மாணவர்கள் உள்ளிட்ட பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பேருந்து திடீரென நிலை தடுமாறி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

டெஸ்சி மற்றும் மெக்கானே, சேலம் நகரங்களுக்கு மத்தியில் இந்த விபத்து ஏற்பட்டது. அதிவேகத்தில் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்ததால் பேருந்து முற்றிலும் சிதைந்தது.

விபத்து குறித்து தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 28 ஆண் கள், 10



பெண்கள் என மொத்தம் 38 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக அந்நாட்டு அரசு செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் ஆவர்.

10 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (10)

## நேபாள ஜனாதிபதியாக பித்யா மீண்டும் தெரிவு

(காத்மண்டு)

இடதுசாரி கட்சிகளின் ஆதரவுடன் இரண்டாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட பித்யா தேவி பந்தாரி வெற்றி பெற்றுள்ளார்.

நேபாளத்தில் ஜனாதிபதியாக இருந்த பித்யா தேவி பந்தாரியின் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து, ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டது. இதில், பித்யா தேவி பந்தாரி இடதுசாரி கட்சிகளின் ஆதரவுடன் இரண்டாவது முறையாக போட்டியிட்டார்.

நேபாள காங்கிரஸ் சார்பில் குமாரி லக்ஷ்மி ராய் போட்டியிட்டார். 275 நாடாளு



மன்ற உறுப்பினர்கள், 550 மாகாண சபை உறுப்பினர்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்தனர். நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகளில் ஆளும் இடதுசாரி கட்சிகளே பெரும்பான்மையாக உள்ளதால் பித்யா தேவி பந்தாரிக்கே வெற்றி வாய்ப்பு இருந்தது.

இந்நிலையில், பித்யா தேவி பந்தாரி வெற்றி பெற்றுள்ளதாகவும், இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக விரைவில் பதவியேற்பார் எனவும் அந்நாட்டு பாராளுமன்ற செயலகம் தெரிவித்துள்ளது. (10)

# ஜப்பானில் இலங்கை பௌத்த விகாரைகளின் தலைமை தேரர்களை சந்தித்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

ஜப்பானிற்கு அரசமுறை விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஜப்பானில் அமைந்துள்ள இலங்கை பௌத்த விகாரை தலைமை தேரர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் டோக்கியோ நகரில் இடம்பெற்றது.

பௌத்த மதத்தின் மேம்பாட்டிற்காக ஜப்பானிலிருந்து குறித்த தேரர்கள் ஆற்றி வரும் சேவைக்குப் பாராட்டுத் தெரிவித்த ஜனாதிபதியை சந்திக்க கிடைத்தமைக்கு மகிழ்ச்சியையும் தெரிவித்தார்.

இளம் தலைமுறையினருக்கு எமது கலாசார விழுமியங்களை தெளிவுபடுத்தி அவர்களை சிறந்த விழுமியப் பண்புகளையுடைய தலைமுறையாக கட்டியெழுப்பவேண்டியதன் தேவை குறித்து இதன் போது தெளிவுபடுத்திய ஜனாதிபதி, சமயத் தலைவர்களுக்கு இதில் பாரிய பொறுப்பு இருப்பதாக தெரிவித்தார். (இ-7)

# பேஸ்புக் தடையின் ஊடாக உலகிற்கு முன்மாதிரியாக மாறிய இலங்கை

## பிரதமர் ரணில் பூரிப்பு



(கொழும்பு)

சமூக வலைத்தளங்களை தடை செய்ததன் காரணமாக உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இலங்கை மாறியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளம் முடக்கப்பட்டமையினால் கண்டியில் ஏற்பட்ட வன்முறைகள் குறைவடைந்தன. இவற்றிக்கான புதிய சட்டங்கள் கொண்டுவர வேண்டும். பேஸ்புக்கினால் ஏற்படுகின்ற பாதிப்பினை தடை ஊடாக தடுக்க முடியும் என்பதற்கான உதாரணத்தை இலங்கை இன்று உலகத்திற்கு வழங்கியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி குழுவினருக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, கண்டி வன்முறை தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது சமூக வலைத்தளம் தொடர்பில் பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார்.

சமூக வலைத்தளம் முடக்கப்பட்டமையினால் அந்த நேரத்தில் ஏற்பட்ட வன்முறைகள் குறைவடைந்தன. இவற்றிக்கான புதிய சட்டங்கள் கொண்டு வர வேண்டும். பேஸ்புக்கினால் ஏற்படுகின்ற பாதிப்பினை தடை ஊடாக தடுக்க முடியும் என்பதற்கான உதாரணத்தை இலங்கை இன்று உலகத்திற்கு வழங்கியுள்ளது.

ஜேர்மன், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் இவற்றிக்கு தடை விதித்துள்ளது. சீனாவிலும் பேஸ்புக் இல்லை. சீனா நமக்கு தொழில்நுட்ப ரீதியிலும் சட்ட ரீதியாகவும் ஆலோசனை வழங்க ஆயத்தமாக உள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

எனினும் சிலர் இந்த சமூக வலைத்தளங்களை தவறாகப் பயன்படுத்துகின்றனர். சிலர் சரியான முறையிலேயே பயன்படுத்துகின்றார்கள்.

ஒரு சிலரின் தவறு காரணமாக முழு நாடும் அதன் உரிமையை இழந்துள்ளதென அமைச்சர் நவின் திஸாநாயக்க இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)


# மகிந்தவின் எழுச்சிக்குப் பின்னர் வீழ்ச்சி காணும் ரூபாவின் மதிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் பொதுஜன முன்னணி வெற்றி பெற்றதையடுத்து அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு 1.18 ரூபாவினால் (0.76 வீதம்) வீழ்ச்சி கண்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் உறுதிப்பாடின்மையினால் பொருளாதாரம் ஆட்டம் கண்டு வருகிறது.

கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி 156.19 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலர் ஒன்றின் மதிப்பு நேற்று முன்



தினம் 157.37 ரூபாவாக வீழ்ச்சி கண்டது. இது முன்னொருபோதும் இல்லாதளவு வீழ்ச்சியாகும்.

கண்டியில் வன்முறைகள் வெடித்த பின்னர் அமெரிக்க டொலர் ஒன்றின் மதிப்பு 56 சதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்த ஆண்டில் மாத்திரம் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கையின் ரூபாவின் மதிப்பு 2.22 ரூபாவினால் குறைவடைந்துள்ளது. இது 1.43 வீத வீழ்ச்சியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ரவூப் ஹக்கீமும் கட்டார் பிரதிநிதியும் சந்திப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கட்டார் அறக்கட்டளை நிலையத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஹாலித் கௌதாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு நேற்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது இதன் போது அம்பாறை, கண்டி பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக இருவருக்கிடையிலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இச்சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உப தலைவருமான எம்.எச்.எம். சல்மானும்கலந்து கொண்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## வீட்டு அலங்கோலம் – யார் காரணம்?

வீடுகள் அலங்கோலமாக இருப்பது பற்றி நான் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். நினைவிருக்கிறது. இப்போது எடுத்துக் கொண்டிருப்பது அதன் வளர்ந்த கண்ணோட்டம்.

ஒரு குடும்பத் தலைவியைக் கேட்டால் என்ன சொல்கிறார். " இவருக்குக் கொஞ்சங்கூட பொறுப்பே இல்லைங்க. அதையதை அங்கங்கே போட்டுடுவாரு. அதை எடுத்த இடத்தில் வைக்கிற பழக்கம் சுத்தமாக் கிடையாது. நான் பிள்ளைங்களையா பெத்துருக்கேன்! சரியான வானரங்களைப் பெத்திருக்கேன்! பார்த்தேன். எடுத்து வச்சுக் கட்டுப்படியாகலை விட்டுட்டேன்," என்கிறார்.

குடும்பத் தலைவரின் பல்லவி சற்று நீளமானது . "ஆம்பளைங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும் அவனவன் தொழிலைப் பார்த்து விட்டு அசந்து போய் வர்றப்போ வீடு இப்படிக் கிடந்தா எப்படி இருக்கும்? வீட்டைச் சுத்தமா வச்சுக்கலைன்னாவர்றவங்க என்ன நினைப்பாங்க? வீடு சுத்தமா இருந்தாலும் சரி, அலங்கோலமாகக் கிடந்தாலும் சரி, அந்தப் பெருமையும் சிறுமையும் பொம்பளைங்களைத் தானே சேரும்! பசிக்கப்பசிக்கச் சாப்பிட்டுகிட்டே இருக்கிற மாதிரி கலையக் கலைய எடுத்து வச்சிட்டுகிட்டுத்தான் இருக்கணும். இதெல்லாமா ஓர் ஆம்பளை செஞ்சிக்கிட்டிருப்பான்?"

யாருடைய வாதம் சரி என்கிற பட்டிமன்றமே இங்கு வேண்டாம் . ஆனால் வீட்டின் சூழ்நிலை மாற்றப்படவேண்டும். இதற்கு வீட்டில் எவரேனும் ஒருவராவது முயற்சி எடுத்துக் கொண்டால் நல்லது. எல்லோரும் உதறினால் எப்படி?

முதல் கட்டமாகப் பொறுமையான அணுகுமுறை அவசியம். உதாரணமாக கலைந்து கிடக்கும் பொருட்களை எடுத்து வைக்கும் போது கோபம் கோபமாக வரும். சம்பந்தப்பட்டவர்கள் கண்ணில் பட்டால் நன்றாகத் திட்டத் தோன்றும். வீட்டிலேயே நாம் மட்டும் தான் கஷ்டப்படுகிறோம் என்பது போலவும் மற்ற எவருக்கும் பொறுப்பே இல்லை என்பது போலவும் தோன்றும் . இந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு மற்றவர்கள் பார்க்கப் பார்க்க எதுவுமே பேசாமல் பொறுமையாக எடுத்து வைக்க வேண்டும்.

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஆற அமர இருக்கும் போதும் கலகலப்பான சூழ்நிலையின் போதும், வீட்டு அலங்கோலத்திற்கு யார் காரணம் என்கிற தலைப்பை ஆரம்பித்து கோப்படாமல் விவாதிக்க வேண்டும். இதைச் செய்தால் கலைத்துப் போடுபவர்கள் மெல்ல மாறுவார்கள்.

பிள்ளைகளில் ஓரளவு பொறுப்பானவர்கள் யாரோ அவர்களைப் பாராட்ட வேண்டும். இது மற்றவர்கள் மனதில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும், நாமும் இந்தப் பாராட்டைப் பெறவேண்டும் என்று மற்றப் பிள்ளைகளுக்குத் தோன்றும்.

அண்மையில் ஒரு வெளியூர் நண்பர் வீட்டுக்குப் போயிருந்தேன். வரவேற்பறையில் அப்படி ஒரு சுத்தம். டிரெஸ்ஸிங் டேபிளில்கூட ஒரு முடியோ பவுடரின் சிந்தலோ இல்லை. பாத்ரூம் பளீர்! அடுக்களை பயன்படுத்தப்படுகிறதா? அல்லது எக்ஸிபிஷன் மாடலா என்கிற சந்தேகம்.

காரணம் கேட்டேன். அடிப்படையில் சுத்த உணர்வு குடும்பத் தலைவிக்கு. ஓயாமல் எடுத்து வைத்துப் பொறுமையாக அணுகி குடும்பத்தையே மாற்றி விட்டிருக்கிறார்.

ஒரு வீட்டின் அலங்கோலத்திற்குப் பலர் காரணமாக இருக்கலாம். ஆனால் சுத்த உணர்விற்குப் பெரும்பாலும் குடும்பத் தலைவி தான் காரணமாக இருக்க முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

# அதிபர் பதவி உயர்வுக்கான கடிதங்கள் வழங்கும் நிகழ்வு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 இற்கு பதவி உயர்த்தப்பட்டதற்கான அழைப்பு கடிதம் கல்வி அமைச்சின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி பதவி உயர்வுக்கான கடிதங்களை வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதில் பதவி உயர்வு பெறுபவர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் ஒன்றும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.15 மணி வரை நடைபெறவுள்ளது. அந்த நிகழ்வில் சம்பந்தப்பட்ட அதிபர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.


கலந்துகொள்ளும் அதிபர்கள் தேசிய அடையாள அட்டையை எடுத்துவர வேண்டும் என்றும் பொருத்தமான ஆடைகளை அணிந்துவர வேண்டும் என்றும் அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## மாதிரி முன்பள்ளியின் மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

மூளாய் இந்து இளைஞர் மன்ற மாதிரி முன்பள்ளியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் சி.ஜனார்த்தனன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ், சிறப்பு விருந்தினராக முன்பள்ளி இணைப்பாளர் இ.சத்தியரூபி ஆகியோர் கலந்து கொள்வர். (இ)



கேலிச்சித்திரம்

# இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது ராகுல் காந்தி எங்கிருந்தார்-தமிழிசை கேள்வி

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி எங்கிருந்தார் என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பா.ஜ.க. சார்பில் திருப்பூரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தல் பொறுப்பாளர்களை நியமிக்கும் நிகழ்வில் அக் கட்சியின் மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் கலந்து கொண்டார்.

அப்போது செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 2009 இல் நடைபெற்றது போர்க்குற்றம் என்று அறிவித்து அங்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

அன்றைய சூழலில் இந்தியாவை ஆண்ட மத்திய காங்கிரஸ் அரசின் துணையோடு போர் புரிந்ததாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருந்தார்.



காங்கிரஸ் அரசால் நாடு எந்த முன்னேற்றமும் அடையவில்லை. இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது ராகுல் எங்கிருந்தார்?

ராஜீவ் கொலையாளிகளை மன்னிப்பதாக இன்று ராகுல் சொல்வது வெறும் அரசியல் என்றார் தமிழிசை. (இ-7)

# ஊரடங்குச் சட்டத்தை மீறியவர்கள் மறியலில்

(திகன)

தெல்தெனிய, திகன பிரதேசங்களில் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடிய 6 பேரை தெல்தெனிய நீதிமன்ற நீதவான் எச்.எம். பரீக்தீன் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

தெல்தெனிய,திகன பிரதேசங்களில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களையடுத்து தெல்தெனிய பொலிஸ் பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வேளையில் அதனை மீறி வீதிகளில் நடமாடிய 6 நபர்களைச் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் திகன, அம்பாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது. பொலிஸார் சந்தேக நபர்களை தெல்தெனிய நீதிமன்ற நீதவான் எச்.எம்.பரீக்தீன் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்ததையடுத்தே நீதவான் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-7)

# மூடிய அறையில் மகாநாயக்கர்களுடன் பிரதமர் ரணில் சந்திப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் காலை அஸ்கிரிய மற்றும் மல்வத்த பௌத்த மகாபீடங்களின் மகாநாயக்கர்களை மூடிய அறையில் சந்தித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல் வழங்கப்படவில்லை.

சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருப்பதை பிரதமர் அலுவலகம் மற்றும் அஸ்கிரிய மகா பீடம் ஆகியவற்றின் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதன்போது கண்டியில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் குறித்து பேசப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அதேநேரம் கண்டியைச் சேர்ந்த முக்கியமான அமைச்சர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# பேஸ்புக் மூலம் நாடு நிர்வகிக்கப்படுமாயின் அரசாங்கமும் சட்டமும் தேவையில்லை

(கொழும்பு)

நாட்டை நிர்வகிக்கும் பிரதான ஊடகமாக பேஸ்புக் விளங்குமாயின் நாட்டில் அரசாங்கமும் சட்டமும் எதற்கு என இலங்கை இணையத்தள ஊடகங்களின் தொழிற்சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் உரையாற்றிய குறித்த சங்கத்தின் அங்கத்தவரும், சட்டத்தரணியுமான பிரபோத ரத்நாயக்க இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கண்டி கலவரத்திற்கு சமூக வலைத்தள பதிவுகளே காரணம் என குறிப்பிடப்பட்டது. அதற்கேற்ப அக்காலப் பகுதியில் அவை தடை செய்யப்பட்டமை ஏற்றுக்கொள்ளக்கூடியது.



ஆனால் தற்போது பிரச்சினைகள் ஓய்ந்துள்ள நிலையில்தொடர்ந்தும்சமூக வலைத்தளங்களை முடக்கியிருப்பது தேவையற்றதொன்றாகும்.

நாட்டின் நிலைமையை சீர்செய்ய சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டை பேஸ்புக்தான் நிர்வகித்து வருகின்றது என்றால், நாட்டிற்கு அரசாங்கமும் சட்டமும் தேவையில்லை.

வெளியிலுள்ள இனவாதிகளை பாதுகாத்துக்கொண்டு ஒளிந்துகொண்டிருக்கும் இனவாதிகளைக் கண்டுபிடிப்பதற்காக பேஸ்புக்கை முடக்கியிருப்பதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இனவாதத்தை முறியடிக்க வேண்டுமாயின் வெளியில் அரசாங்கத்தின் பாதுகாப்பிலுள்ள இனவாதிகள் தண்டிக்கப்பட வேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# தமிழர்-முஸ்லிம் நல்லிணக்க உறவு பற்றி இனவாதி ஹிஸ்புல்லா கூறுவது வேடிக்கை

(திகன)

தமிழர்களுக்கு எதிராக கடந்த காலத்தில் செயற்பட்ட மதவாதியும் இனவாதியுமான அமைச்சர் ஹிஸ்புல்லா தமிழர் - முஸ்லிம் நல்லிணக்க உறவு பற்றி கூறுவது வேடிக்கையானது என இந்து சம்மேளனத்தின் தலைவர் நாரா. அருண்காந்த் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் கண்டி திகன வன்முறைகள் தொடர்பாக அமைச்சர் ஹிஸ்புல்லா வழங்கிய செவ்வி தொடர்பாக இந்து சம்மேளனத்தின் தலைவர் நாரா.அருண்காந்த் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அவ் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திடம் இருந்து ஆயுதங்களைப் பெற்று தமிழ் மக்களை கொலை செய்ய உதவிய அமைச்சர் ஹிஸ்புல்லாவிற்கு சிங்கள பேரினவாதத்தை எதிர்க்க தமிழ் மக்களின் உதவி தேவைப்படுவது வேடிக்கையானது என்றுதான் கூற வேண்டியுள்ளது.

"மட்டக்களப்பில் பிள்ளையார் கோயிலை சேதப்படுத்தி சந்தைக் கட்டடத் தொகுதி அமைத்தமை, தமிழரான நீதிபதியை இடமாற்றம் செய்து முஸ்லிம் நீதிபதியை நியமித்தமை, எல்லைக் கிராமங்களில் வாழ்ந்த தமிழர்களை கொலை செய்ய கொழும்பில் இருந்து ஆயுதங்களை முஸ்லிம் இளைஞர்களுக்கு வழங்கியமை போன்ற செயல்களைச் செய்த ஹிஸ்புல்லாவிற்கு தமிழர்-முஸ்லிம் நல்லிணக்கம் பற்றிக் கூறுவதற்கு எந்த உரிமையும் கிடையாது.

கிழக்கில் முஸ்லிம்களின் நல்லெண்ணத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் மூலம் அரசியல் தீர்விற்கு சாதகமான ஒத்துழைப்பை முஸ்லிம் தலைவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நல்லெண்ணத்தை தமிழர்கள் பலவீனமாக இருப்பதாக கருதிய அரசியல்வாதிகளில் முதன்மையானவராக இருக்கும் ஹிஸ்புல்லாவின் இக்கூற்று ஆச்சரியமானது எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# பலகாயவின் பணியகத்தில் இனவாத பிரசுரங்கள் மீட்பு

(கண்டி)

கண்டியில்இன வன்முறைகளைத் தூண்டி விட்டதாக குற்றஞ்சாட்டப்படும் மகாசேன் பலகாயவின் பணியகத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தேடுதலின் போது, பெற்றோல் குண்டுகள், வன்முறைகளைத் தூண்டும் பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டி, குண்டசாலைப் பகுதியில் உள்ள நட்டரன்பொத்த பகுதியில் இருந்த மகாசேன் பலகாயவின் பணியகமே நேற்று முன்தினம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

இதன்போது, இனவாதத்தைத் தூண்டும் வகையிலான சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், ஆறு பெற்றோல் குண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மகாசேன் பலகாயவின் செய்தியாளர் சந்திப்புக்குப் பயன்படுத்தப்படும் ஒலிவாங்கி, இனவாதத்தைத் தூண்டும் கைப்பட்டிகள், கணனி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை மகா சேன் பலகாயவின் தலைவரான அமித் ஜீவன் வீரசிங்க உள்ளிட்ட 10 பேர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வலி.மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் சமாசத் தலைவர் ந.சிவறஞ்சன் தலைமையில் இடம்பெறும். (இ)

# கழிவு முகாமைத்துவ நிலையத்தை ஜனாதிபதி மைத்திரி பார்வையிட்டார்







(டோக்கியோ)

ஜப்பானுக்கு அரச முறைப் பயணமொன்றை மேற் கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் டோக்கியோவிலுள்ள நவீன கழிவு முகாமைத்துவ நிலையத்தை பார்வையிட்டார்.

சுமார் 9.3 மில்லியன் மக்கள் வாழும் டோக்கியோ நகரில் நாளாந்தம் 11 ஆயிரம் மெற்றிக் தொன் திண்மக் கழிவுகள் வெளியேற்றப்படுவதுடன், இவற்றை முகாமைத்துவம் செய்வதற்காக இதுபோன்ற 23 மத்திய நிலையங்கள் செயற்படுத்தப் பட்டு வருகின்றன.

ஜனாதிபதி பார்வையிட்ட சினகாவாவிலுள்ள திண்மக் கழிவு முகாமைத்துவ நிலை யத்தில் சுமார் 60 மெற்றிக் தொன் திண்மக் கழிவுகள் நாளாந்தம் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சூழல் நட்புடைய வகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், அந்த நடவடிக்கைகளை ஜனாதிபதி பார்வையிட்டார்.

கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு மேலதிக பெறுபேறாக உற்பத்தி செய்யப்படும் அனல்மின் மின் சக்தியாக மாற்றப்படுவதுடன், இந்த மின்சக்தி திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் பயன்பாட்டுக்காக பெற்றுக்கொள்ளப்படுவதுடன் எஞ்சிய தொகை தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் திண்மக் கழிவு பிரச்சினையை தீர்ப்பதற்கு இத்தகைய திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயவுள்ளதாகவும் இதற்கு ஜப்பானின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது குறித்து கவனம் செலுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் தலைவரினால் இந்த நிலையத்தின் பணிகள் குறித்து ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு விரிவாக விளக்கப்பட்டது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆஷு மாரசிங்ஹ ஆகியோரும் இந்நிழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# அருள்மொழி அரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் காலமானார்



(கொழும்பு)

ஈழத்தின் பிரபல சமய இலக்கியச் சொற்பொழிவாளரும் மூத்த சைவத்தமிழறிஞருமான திருமதி வசந்தா வைத்தியநாதன் தனது 81 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலை காலமானார்.

கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கைக் கம்பன் கழகம் போன்ற அமைப்புகளின் ஸ்தாபக உறுப்பினரான அம்மையார் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசகராகவும் செயற்பட்டார். அம்மையார் ஈழத்திலும் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் ஆயிரக்கணக்கான ஆலய மற்றும் மாநாட்டு சொற்பொழிவுகளை ஆற்றி இம்மண்ணிற்கு பெருமை சேர்த்தவராவார். இவர் வர்த்தக வங்கி வடமாகாண பிராந்திய முகாமையாளராய் இருந்த அமரர் எஸ்.வைத்தியநாதசர்மாவின் துணைவியார் ஆவார். தனது இறுதிக் காலத்தில் வெள்ளவத்தை ஐஸ்வர்யலக்ஷ்மி தத்துவத் திருக்கோயில் தொண்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து வைக்கப்பட்டு, இறுதிச் சடங்கு முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என கம்பன் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)

# பத்தாண்டுகளாக ஒரே பாடசாலையில்; ஆசிரியர்களை இடமாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் 10 ஆண்டுகளுக்கு அதிகமாக ஒரே பாடசாலையில் 6 ஆம் தரம் முதல் 11 தரம் வரையான வகுப்புகளுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் 5473 பேருக்கு இம்மாத இறுதிக்குள் இடமாற்றம் வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய பாடசாலைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இடமாற்ற வேலைத் திட்டம் மூன்று கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் முதற் கட்டம் கடந்த வருட இறுதிப் பகுதியில் இடம்பெற்றது. இதில் உயர்தர வகுப்பு ஆசிரியர்கள் 2590 பேர் ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இரண்டாம் கட்டத்தில் முதலாம் தரம் முதல் ஐந்தாம் தரம் வரை ஒரே பாடசாலையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றும் ஆசிரியர்கள் 1441 பேரில், 760 பேருக்கு இடமாற்றம் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-7)

# கடுகதிப் புகையிரதம் மீது கல்வீசித் தாக்குதல்!




(ஏறாவூர்)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இரவு நேர விரைவுப் புகையிரதத்தின் மீது ஏறாவூரில் வைத்து கல் வீசித் தாக்குதல் நடத்திய சந்தேகத்தின் பேரில் அறுவர் கைது செய்யப்பட்டிருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8.15 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட நகர் சேர் கடுகதிப் புகையிரதம் ஏறாவூர் புகையிரத நிலையத்தை நெருங்கும்போது சற்றுத் தூரத்தில் வைத்து சுமார் 8.30 மணியளவில் புகையிரதப் பாதையின் இரு மருங்கிலும் நின்று சரமாரியான கல்வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் சொகுசு இருக்கை, இரண்டாம் வகுப்பு உறங்கலிருக்கை பெட்டிகளின் கண்ணாடிகள் நொருங்கியுள்ளதாக ஏறாவூர் புகையிரத நிலைய அதிபர் கே. குபேந்திரகுமார் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் காரணமாக நகர சேர் கடுகதி புகையிரதம் ஏறாவூரிலிருந்து சுமார் 20 நிமிடங்கள் தாமதமாகியே கொழும்பு நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையிலுள்ள சீனப் பிரஜைகளைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

## சீனத் தூதுவர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு அரசாங்கத்திற்கும் அதன் மக்களுக்கும் இயலுமை இருப்பதாகவே சீனா நம்புகின்றது. அதேபோன்று இலங்கையினது இங்குள்ள சீன பிரஜைகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என நம்புகின்றோம் என இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சுயான் கோரிக்கை விடுத்துள்ளார். வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே சீனத் தூதுவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது சீனத் தூதுவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையும் சீனாவும் பாரம்பரிய நட்பு நாடுகள். நீண்டகாலமாக இரண்டு நாடுகளும் ஒன்றுக்கொன்று உதவிக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் அனைத்து துறைகளிலும் இணைந்து பணியாற்றுவதற்கு சீனா விரும்புகின்றது. குறிப்பாக இரண்டு நாடுகளினதும் தலைவர்கள் அடைந்த இணக்கப்பாட்டுக்கு அமைவாக செயற்படுவதற்கு இரண்டு நாடுகளும் எதிர்பார்க்கின்றன.

அத்துடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் மெகா வேலைத்திட்டங்களும் விரைவுபடுத்துவதற்கும் அதன் மூலம் இரண்டு நாடுகளினதும் மக்களுக்கு நன்மையை பெற்றுக் கொடுப்பதற்கும் சீனா எதிர்பார்க்கின்றது. இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் சீனா அவதானித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமையை அரசாங்கத்தினாலும் அதன் மக்களினாலும் தீர்த்துக்கொள்ள முடியும் என சீனா நம்புகின்றது என்றார்.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன மேலும் தெரிவிக்கையில், சீனாவின் நீண்டகால உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கும் இலங்கையின் தேசிய ஒற்றுமை மற்றும் ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதற்கு சீனா வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கின்றோம். ஒரு சீனா என்ற சீனாவின் கொள்கையை நாங்கள் மதிக்கின்றோம்.

அத்துடன் சீனா இலங்கையில் முன்னெடுக்கும் திட்டங்களை மதிப்பிடவும் அனுமதி பெற்றுக்கொடுக்கவும் வெளிவிவகார அமைச்சு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றும். குறிப்பாக இலங்கை மக்கள் உணரக் கூடிய நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க முயற்சிக்கின்றோம் என்றார்.

இதேவேளை இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் உரிய விளக்கம் ஒன்றை வெளிவிவகார அமைச்சர் வழங்கினார். (இ-7)








யாழ். கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் மாணவ பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நேற்று முற்பகல் 10 மணியளவில் அதிபர் கனகலிங்கம் தலைமையில் நடைபெற்றது (படங்கள்:- மகாலிங்கம்)

# வன்முறைகளின் போது 445 வீடுகள் சேதம்

## 24 பள்ளிவாசல்களுக்கும் பாதிப்பு

(கண்டி)

கடந்த வாரம் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளில் 24 பள்ளிவாசல்கள், 445 வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.



கடந்த 4 ஆம் திகதி கண்டி மாவட்டத்திலுள்ள தெல்தெனிய மற்றும் திகன பகுதிகளில் தொடங்கிய வன் முறைகளில் முஸ்லிம்களின் பெருமளவு சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக நேற்று முன்தினம் தகவல் வெளியிட்ட பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர,

"வன்முறைகளின் போது 445 வீடுகள், வர்த்தக நிலையங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன. இதில் கண்டி பொலிஸ் பிரிவில் மாத்திரம் 423 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

24 பள்ளிவாசல்களும் தாக்குதலுக்கு உள்ளாகி சேதப்படுத்தப்பட்டன. கண்டியில் மாத்திரம் 19 பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. ஏனைய பகுதிகளில் 5 பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன். 65 வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இதில் கண்டியில் மாத்திரம் 60 வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

கண்டியில் 22 பேரும் ஏனைய பகுதிகளில் 6 பேருமாக மொத்தம் 28 பேர் இந்த வன்முறைகளில் காயமடைந்தனர். இந்த வன்முறைகள் தொடர்பாக அவசரகாலச் சட்டத்தின் கீழும் ஏனைய சட்டங்களின் கீழும் 280 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்துள்ளார். (இ-7)

## தொழில்நுட்ப மையத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி தொழில்நுட்ப மைய திறப்பு விழா நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், மத்திய கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-9)

## பழந்தமிழர் ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

பழந்தமிழர் இயக்கம் நடத்தும் பழம் தமிழரும் பௌத்தமும் எனும் கருப் பொருளில் பழந்தமிழர் ஆய்வு மாநாடு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதி அத்தியடியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை TCT மண்டபத்தில் பழந்தமிழ் இயக்க நிறுவுநர் யாழ்ப்பாண மாவட்ட புள்ளி விபரவியலாளர் ம. வித்தியானந்த நேசன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்னிந்திய திருச்சபை முன்னாள் ஆயர் எஸ். ஜெபநேசன், ஆய்வாளராக பேராசிரியர் ஜி.பி.வி. சோமரட்ணா, யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை தலைவர் பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## தேசிய ஆக்கத்திறன் விருது விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் நடைபெற்ற இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் நிகழ்வில் சிறப்பான ஆக்கத்தினை வெளிப்படுத்திய இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் தேசிய ஆக்கத்திறன் விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் இடம்பெறும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்து கொள்வார். (இ)

## பொறுப்பற்ற பதில்; கூட்டத்தில் சிரிப்பொலி பொறுப்பதிகாரிக்கு சுமந்திரன் அறிவுரை

(கரணவாய்)

பேருந்துச் சேவை தொடர்பான விடயம் ஆராயப்பட்ட போது பெரும் சிரிப்பொலிகள் எழுந்ததைத் தவிர கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயம் எதுவும் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது பேருந்துச் சேவை தொடர்பில் ஆராயப்பட்ட போது அதற்கு பொறுப்பான அதிகாரி பொறுப்பற்ற முறையில் பதிலளித்தமையும் பொதுமக்களை பெரும் சிரிப்பிற்குள்ளாக்கியது.

இதனைத் தொடர்ந்து அவதானித்த இணைத் தலைவர்களில் ஒருவரான எம்.ஏ. சுமந்திரன், பொறுப்பு வாய்ந்த அதிகாரி இவ்வாறு பொறுப்பற்று நடக்கக் கூடாது என அவருக்கு அறிவுரை வழங்கினார். (இ-60)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாகம பகுதியில் விற்பனைக்காக வைத்திருந்த 63 கிராம் கேரளாக்கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுப் புதன்கிழமை காலை ஹற்றன் பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் குடாகம பகுதியைச் சேர்ந்தவர் என்றும் இவர் நீண்ட காலமாக மற்றுமொருவருடன் சேர்ந்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக் கட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1357

Search for people, places and things Nagendram Home

### தனராஜ்

ஏனோ தானோனு வாழ்றவனுக்கு எல்லாம் கிடைக்குது...



இப்படி வாழலாம்னு நினைச்சி வாழ்ந்தா ஒரு செம்பு தண்ணிகூட கிடைக்கமாட்டேங்குது...

### சாகித்தியா

மிக்ஸியை அரைக்க மட்டும் பயன்படுத்தாமல்



வீட்டில் இருப்பவர்களை சீக்கிரம் எழுப்பவும் பயன்படுத்துவது பெண்களின் புத்திசாலித்தனம்

### சாரங்கன்

கொடுப்பது சிறிது என்று தயங்காதே... பெறுபவர்க்கு அது பெரிது...



எடுப்பது சிறிது என்று திருடாதே... இழப்பவர்க்கு அது பெரிது...

### சந்தியா

அடிச்சது அப்பான்னுதான் தெரியும்



ஆனாலும் அழுதுகிட்டே அம்மாகிட்டதான் ஓடும் குழந்தைகள்

### சபேஷ்

நாம எங்க கூப்பிட்டாலும்...



என்னு கேட்காம பின்னாடியே ஓடி வரும் நண்பன் கிடைக்கிறது வரம்...

### தனஞ்சயன்

இப்படி அடம்பிடித்துப் பள்ளிக்குப் போனவங்களாம் கைதூக்குங்க...



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2018-13.04.2018



### பொதுப்பலன்

இந்த மாதம், உங்களுக்கு நல்ல மாற்றமும், ஏற்றமும் தரும் மாதமாகவே அமையப் போகின்றது. சுபவிரயங்கள் அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். நல்ல காரியங்கள் படிப்படியாக நடைபெறும். உங்கள் திறமை வெளிப்பட்டு பாராட்டும், புகழும் கிடைக்கலாம். கடுமையாக உழைத்ததன் பலன் இந்த மாதம் தெரியும். பயணம் செய்யும் பொழுது கவனம் தேவை. கொடுக்கல் - வாங்கலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வீர்கள்.

### உத்தியோகம்

அலுவலகப் பணியில் இருப்பவர்களுக்கு, இடமாற்றம், ஊர் மாற்றம் வரலாம். பிறருக்கு ஆலோசனை சொல்வதன் மூலம், சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரலாம். சுய தொழிலில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. எந்த முடிவையும் உடனடியாக செயற்படுத்த இயலாது. கூட்டுத் தொழிலில் உங்களுக்குரிய ஆதாயத்தைப் பெற பெரும் போராட்டம் நடத்த வேண்டிய சூழல் உருவாகலாம்.

### உடல்நலம்

இராசிநாதன் செவ்வாய், சனியோடு இணைந்திருப்பதால் இனம் புரியாத பயம் ஏற்படும். இரத்தம், நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்பு வரலாம். பெண்களுக்கு வயிற்று உபாதை, கர்ப்பப்பைக் கோளாறு ஏற்படலாம்.

### குடும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் தொடர்ந்து நடைபெறும். உங்களை உதாசீனப்படுத்தியவர்கள், மீண்டும் தேடி வருவார்கள். மகப்பேறு எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு. அதற்கான வாய்ப்பு உருவாகும். தனவரவு திருப்திகரமாக இருந்தாலும், செலவுகளும் அதிகரிக்கும்.

### பணவரவு

தனாதிபதி சுக்ரன், விரய ஸ்தானத்தில் உச்சம் பெற்றிருக்கிறார். அவரோடு சகாய ஸ்தானாதிபதியும் இணைந்திருப்பது யோகம் தான். எனவே விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டேஇருக்கும். வீண் விரயங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. குடும்பச் செலவு கூடும் என்பதால், அத்தியாவசிய பொருட்களை வாங்கிக் கொள்ளலாம்.

### செவ்வாய்-சனி

இராசிநாதன் செவ்வாயும், 10, 11ஆம் இடத்திற்கு அதிபதியான சனியும் 9ஆம் இடத்தில் இணைந்து சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர் வழி ஒத்துழைப்பு குறையலாம். சகோதரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம் தான். அக்கம் பக்கத்து விடயங்களை ஆராய்வதன்

தான். இந்த காலகட்டத்தில் உத்தி யோக முன்னேற்றம் உண்டாகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

### மேஷ சுக்ரன்

மார்ச் 27ஆம் திகதி மேஷத்திற்கு சுக்ரன் செல்கிறார். தன சப்தமாதிபதியான சுக்ரன், உங்கள் இராசிக்கு வரும் பொழுது பண வரவு திருப்திகரமாக இருக்கும். குடும்ப முன்




னேற்றம் கூடும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும்.

மாதக் கடைசியில் மகிழ்ச்சி அதிகரிக் கும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். உடல் நலம் சீராகும். செய்யும் தொழிலில் எதிர் பார்த்த ஆதாயம் கிடைக்கும். உத்தியோ கத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

விரயங்கள் கூடுதலாக இருக்கும். சேமிப்புக் கரைகின்றதே என்று கவலைப்படுவீர்கள். வாக்குவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள இயலும்.

கண்வன்- மனைவிக்குள் ஒற் றுமை பலப்படும். சகோதர வர்க்கத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்குப் புதிய வேலைவாய்ப்பு கிடைக்கலாம்.

### கலைத்துறை

ஏற்றமும், மாற்றமும் வரும் நேரம் இது. புதிய ஒப்பந்தங்கள் கிடைப்பதில் இருந்து வந்த தடைகள் அகலும். கலைஞர்களின் படைப்புகளுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும். கடின உழைப்பால் நினைத்த இலக்கை எட்டிப் பிடிப்பீர்கள்.

## ஏற்றமும் மாற்றமும் வரும் நேரம் இது

மூலம் அநாவசிய தொல்லை வந்துசேரும்.

### புதன் வக்ரம்

மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை மீனத்தில் புதன் வக்ரம் பெறுகிறார். 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்ரம் பெறு வது யோகம்

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

### துலாம் குரு

மாதத் தொடக்கத்தில் விருச்சிக இராசியில் வக்ர இயக்கத்தில் இருந்த குரு, ஏப்ரல் 11ஆம் திகதி துலாம் இராசிக்கு வக்ர இயக்கத்தில் வருகிறார். அப்பொழுது அதன் பார்வை உங்கள் இராசியில் பதிவ தால்

### அரசியல்

பொதுச்சேவையில் இருப்பவர்களுக்கு ஆதரவு அதிகரிக்கும். எதிரிகளின் சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்வீர்கள். பணிகளில் இருந்த தொய்வு அகலும். சப்தம ஸ்தானத்திற்கு குரு வந்த பிறகு, நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள்.



### பொதுப்பலன்

இந்த மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்களின் வாழ்க்கைத் தேவை பூர்த்தியாகும். நண்பர்கள், உங்கள் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்க வழிவகுத்துக் கொடுப்பார்கள். மங்கல காரியமும், மனதிற்கு இனிய விஷயமும் தொடர்ந்து நடை பெறும். உங்களை விட்டு விலகி இருந்தவர்கள், மீண்டும் வந்து இணைவார்கள். புறம் பேசியவர்கள் இடம் மாறிச் செல்வர். நீண்ட தூரப் பயணங்கள் பலன் தரும்.

### உத்தியோகம்

பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். வாகனம், வீடு வாங்க அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சுயதொழில் செய்பவர்களுக்கு இலாபம் திருப்திகரமாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். கொடுக்கல்- வாங்கல்களில் இருந்த மந்த நிலை மாறும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### உடல்நலம்

இராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்றிருப்பதால் உடல் நலம் சீராகும். உடலின் இடது பக்க உறுப்புகளில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. மாதக் கடைசியில், குரு பகவான் துலா இராசிக்கு வந்த பிறகு மருத்துவச் செலவு குறையும்.

### குடும்பம்

மாதத் தொடக்கத்தில் வக்ர குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். குடும்ப பிரச்சினைகள் படிப்படியாக மாறும். குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட பகை மறையும். இல்லறம் இனிமையாக புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

### பணவரவு


தனாதிபதி புதன் வக்ரம் பெற்றும், நீசம் பெற்றும் இருப்பதால் போதுமான பொருளாதாரம் வந்தாலும் திருப்தி ஏற்படாது. வாங்கல் - கொடுக்கலில் வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வரும். சிக்கனத்தைக் கையாள்வதன் மூலம் தினசரி வாழ்க்கையை வளமாக அமைத்துக் கொள்ளலாம்.

தேவை. இடம், பூமி விற்பனையில் எதிர்பார்த்த நற்பலன் கிடைப்பது அரிது.

### மேஷ சுக்ரன்

உங்கள் இராசிநாதன் சுக்ரன், மார்ச் 27-ஆம் திகதி மேஷ இராசிக்குச் செல்கிறார். இதன் விளைவாக வீடு மாற்றங்கள், இட மாற்றங்கள், பணியில் தொய்வு போன்றவை ஏற்படலாம். விலை உயர்ந்த பொருட்களை ஒருசிலர் விற்க நேரிடலாம். வழக்குகள் நீடிக்கும்.

### புதன் வக்ரம்




மார்ச் 16 ஆம் திகதி முதல் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை மீனத்தில் புதன் வக்ரம்

வைத்துக் கொள்ளுங்கள்.

### துலாம் குரு

ஏப்ரல் 11ஆம் திகதி துலாம் இராசிக்கு குரு வக்ரமாக செல்கிறார். இது ஒரு வழிக்கு நன்மை தான். அஷ்டம லாபாதிபதியான குரு 6இல் வக்ரம் பெறும் பொழுது, எதிர்பாராத நல்ல திருப்பங்கள் உருவாகும். விருப்பங்கள் நிறைவேறும். உத்தியோக முயற்சி கைகூடும். நட்பால் நல்ல காரியம் நடைபெறும். ஒரு சிலர் சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

### பெண்களுக்கான பலன்கள்

குடும்பத்தில் சுகங்களும், சந்தோஷங்களும் உருவாகும். கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். எதிர்பார்த்த தொகை வந்துசேரும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். பணிபுரியும் பெண்களின் வாழ்வில் இனிமை சேரும். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### கலைத்துறை

கலைஞர்களுக்கு நல்ல நட்பால் வாய்ப்புகள் வந்துசேரும். மூத்த கலைஞர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுப்பார்கள். இடையூறுகளைச் சமாளித்து லட்சியங்களை நிறைவேற்றப் பாடுபடுவீர்கள்.

## இலட்சியங்களை நிறைவேற்ற பாடுபடுவீர்கள்

### செவ்வாய்-சனி

இம்மாதம் அஷ்டமத்தில் சனி, செவ்வாய் சேர்க்கை ஏற்படுவது அவ்வளவு நல்லதல்ல. மனக்கசப்பு தரும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெறும். மகிழ்ச்சி குறையாமல் இருக்க ஜாதகத்தை ஆராய்ந்து பரிகாரங்களைச் செய்வது நல்லது. வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற் படும். பயண ங்களில் கவனம்

பெறுகிறார். உங்கள் இராசிக்கு தன பஞ்சமாதிபதியான புதன், வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பணப்புழக்கம் குறையும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய முடியாமல் போகலாம். பிறருக்கு ஜாமீன் போடுவதை தவிர்ப்பது நல்லது. வீண் விரயங்கள் அதிகரிக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில்

### அரசியல்

பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு சிக்கல்கள் விலகும். பொதுவாழ்வில் சீரான வளர்ச்சி கிடைக்கலாம். மறைமுக எதிர்ப்புகள் மாறும். மற்றவர்களின் தவறான வழிகாட்டுதலில் இருந்து விடுபடுவீர்கள். புதிய பதவிகளும், பொறுப்புகளும் வருவதற்கான அறி குறிகள் தோன்றும்.

(தொடரும்)

# சிவனொளிபாதமலைப் பகுதியில் 10இலட்சத்திற்கும் அதிகமான பிளாஸ்டிக் போத்தல்கள் சேகரிப்பு



(ஹற்றன்)

நல்லதண்ணி - சிவனொளிபாதமலைக்கு உட்பட்ட பகுதிகளில், வருகை தந்த இலட்சக்கணக்கான யாத்திரிகர்களால் பாவனைக்குப் பின்னர் வீசி எறியப்பட்ட நிலையில் கிடந்த சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான பிளாஸ்டிக் போத்தல்கள் இதுவரை சேகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அதிகபடியான பிளாஸ்டிக் போத்தல்கள் அம்பகமுவ பிரதேச சபையின் கழிவு சேகரிப்பு பிரிவினாலும், நல்லதண்ணி வனவிலங்கு காரியாலய பிரிவினாலும் சேகரிக்கப்பட்டதாக நல்லதண்ணி மீள்சுழற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.ஹேமந்த தெரிவித்துள்ளார்.

நல்லதண்ணி நகரத்திலிருந்து சிவனொளிபாதமலை உச்சி வரை இந்த பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்கள் மற்றும் மென்பான போத்தல்கள் என்பன சூழலில் வீசப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் சிவனொளிபாதமலை பருவகாலத்தில் புனித பூமி சூழலுக்கு உக்கலடையாத போத்தல்கள் உள்ளிட்ட பொருட்களை வீசுவதிலிருந்து தவிர்த்து சூழலுக்கு இணக்கமான பருவகால வழிபாடுகளில் ஈடுபடுமாறு அனைத்து யாத்திரிகர்களிடமும் கேட்டுக் கொள்வதாக நல்லதண்ணி கழிவு சேகரிப்பு மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ. ஹேமந்த வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 26 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியா மற்றும் சுவிட்சர்லாந்தில் சட்டவிரோதமாக குடியிருந்த 26 இலங்கையர்கள் அங்கிருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில் நேற்றுக்காலை இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் இருந்து 15 இலங்கையர்கள் அங்கிருந்து சிறப்பு விமானம் மூலம் நேற்றுக் காலை 6.20 மணியளவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை, சுவிட்சர்லாந்திலிருந்து 11 இலங்கையர்கள் காலை 9 மணியளவில் விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டவர்களுள் சிங்கள மற்றும் தமிழர்கள் இருப்பதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நாடு கடத்தப்பட்டுள்ள இலங்கையர்களை கட்டுநாயக்க விமான நிலையத்தின் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் அவர்களது அறிக்கையை பதிவு செய்த பின்னர் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கடலட்டை பிடிப்போருக்கு வாடியமைக்க அனுமதியில்லை

(கரணவாய்)

கடலட்டை பிடிப்பவர்களுக்கு வடமராட்சி கிழக்கில் வாடி அமைப்பதற்கான அனுமதியை கொடுக்க முடியாது என மருதங்கேணி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.


கடந்த திங்கட்கிழமை மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்ற போது கடலட்டை பிடிப்போர் வாடி அமைப்பதற்கான கோரிக்கை முன்வைத்திருப்பதாக கூறப்பட்ட போது அக் கோரிக்கைக்கு அமைவாக அனுமதியை கொடுக்க முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது. (இ-60)

# சமூக ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் சுதந்திரத்தில் கைவைக்கும் செயற்பாடு

## துரைராஜசிங்கம் கூறுகிறார்

(ஏறாவூர்)

சமூக ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் சுதந்திரத்தில் கைவைக்கும் செயற்பாடு என்பதுடன், சுதந்திரம் என்பது வரையறுக்கப்பட்ட ஒரு விடயம் என்பதை அனைவரும் கருத்திற் கொள்ள வேண்டும் என இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.



மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முகநூல் தொடர்பான கட்டுப்பாடுகள் வரவுள்ள நிலையில் இவை எழுத்துச் சுதந்திரத்திற்கும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்திற்கும் இன்றியமையாத ஒன்று என்ற வகையில் முகநூல்கள் முகமூடிகளாக இருக்காமல் வெளிப்படைத்தன்மையாக இருக்கும் நிலையேற்படும். முகநூல்கள்என்பவை முகமூடி நூல்களாக மாறிவிட்டன.

ஒருவர் தனது எழுத்துக்கு பொறுப்புக் கூறவேண்டும். தன்னுடைய முகத்தினைக் காட்டவேண்டும். அந்த முகநூலில் முகம் தெரியவேண்டும். யார் எழுதுகின்றார் என்று முகத்திலன காட்ட வேண்டும்.

ஒருவர்எழுதுவதற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்பதையே கருத்துச் சுதந்திரம் கூறுகின்றது. அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள சிந்தனைச் சுதந்திரம் கருத்து வெளியீட்டு சுதந்திரம் என்ற வகையில் வருகின்ற கருத்து வெளியிடும் சுதந்திரம் என்பது ஜனநாயகமுறையில் இருக்கவேண்டும்.

இந்த முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் தொடர்பில் புதிய சட்ட விதிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக அறிகின்றோம். இவை வவேற்கத்தக்கவை ஆகும்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வலல்லாவிட பிரதேச சபை முன்னாள் தலைவருக்கு குற்றப்பத்திரிக்கை கையளிப்பு

(கொழும்பு)

வலல்லாவிட பிரதேச சபையின் முன்னாள் தலைவர் உதேனி அதுகோரலவிற்கு கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று குற்றப்பத்திரிகை கையளித்தது.

உதேனி அதுகோரலவிற்கு எதிராக கையூட்டல் ஆணைக்குழுவால் தொடரப்பட்டுள்ள வழக்கொன்று நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டது.

வலல்லாவிட பிரதேச சபையின் தலைவராக செயற்பட்ட காலத்தில் மண் வியாபாரத்திற்கான அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதற்காக 10 இலட்சம் ரூபாய் கையூட்டல் பெற்றதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்ட பின்னர் பிரதிவாதியை 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் மற்றும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப்பிணை அடிப்படையிலும் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மே மாதம் 16ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (இ-7)

# இராணுவத் தலைமை அதிகாரி அமால் கருணாசேகர ஓய்வு

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர. நேற்றுமுன் தினத்துடன் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இதையடுத்து இராணுவத்தின் இரண்டாவது நிலை தளபதிப் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.



இலகு காலாட்படையைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர, கடந்த 2017 ஜூலை 21ஆம் திகதி இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

ஓய்வுபெற்றுச் செல்லும் மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகரவுக்கு பனாகொடவில் உள்ள இலகு காலாட்படை தலைமையகத்தில் நேற்று முன்தினம் பிரியாவிடை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இவர்இராணுவப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். (இ-7)





நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வாசிப்பு மாத போட்டியின் போது மாணவர்களின் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றிய செயற்பாடும் நல்லூர் பிரதேச செயலக வாசிப்பு மாதப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிக்கு கலாசார உத்தியோகத்தர் எஸ். விக்கினேஸ்வரன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)





# செயலே சிறந்தது

நேற்றைய தொடர்ச்சி...

கழுகும் அதன் உறவினர்களும் விலங்குகளைத் தங்கள் கால் விரல்களால் பிடித்துத் தூக்க முயற்சி செய்தன. விலங்குகளைக் கழுகுகளால் தூக்கவே முடியவில்லை.

லேசான மழைத் தூறல் ஆரம்பித்தது. கழுகின் பேச்சை இப்படி நம்பிவிட்டோமே என்று சிங்கம் கலங்கியது.

அப்போது வௌவால் வந்து சேர்ந்தது. "அரசே! இன்னும் கழுகுகளை நம்பிக்கொண்டிருந்தீர்கள் என்றால் நம் நண்பர்கள் வெள்ளத்தில் அகப்பட்டுக்கொள்வார்கள். நாங்கள் வசிக்கும் குகைகளைச் சுத்தம்




செய்து தயாராக வைத்திருக்கிறோம். அனைவரும் அங்கே தங்கிக்கொள்ளலாம். உணவுப் பொருட்களையும் சேகரித்து வைத்திருக்கிறோம்" என்றது வௌவால்.

"அரசே! வௌவால் சொல்வது சரியான வழி. இப்போது நாம் அனைவரும் குகைக்குள் சென்று தங்கலாம். உண்மையில் மேகங்களுக்கு மேலே விலங்குகளைத் தூக்கிச் செல்வதெல்லாம் கழுகால் இயலாது" என்றது கரடி.

குகைக்குச் செல்ல உத்தரவிட்டது சிங்கம்.

காட்டில் மூன்று தினங்கள் கடுமையான மழை பொழிந்தது. வெள்ளம் சூழ்ந்தது. ஆனாலும் விலங்குகளும் பறவைகளும் எந்த



விதப் பாதிப்பும் இன்றி வௌவாலின் குகைக்குள் தங்கியிருந்தன.

இரு தினங்களில் வெள்ளம் வடிந்தது. எல்லாம் வெளியே வந்தன. அங்கே வந்த கழுகு, "அரசே! மழைக்குப் பாதுகாப்பாக இருந்தீர்களா?" என்று கேட்டது.

கழுகின் பேச்சு சிங்கத்துக்குக் கோபத்தை வரவழைத்தது.

"வௌவாலின் குகைக்குள் நாங்கள் பாதுகாப்பாகவே இருந்தோம். வீண் பேச்சுகளைவிடச் சிறிய செயல் பெருமைக்குரியது. இனி என் கண்களில் படாதவாறு வாழுங்கள்" என்று ஆணையிட்டது சிங்கம்.

சிங்கத்தின் ஆணைக்குப் பயந்த கழுகும் அதன் உறவினர்களும் அன்றிலிருந்து காட்டிலிருந்து வெளியேறி, மலைகளில் வசிக்கத் தொடங்கின. தங்கள் டாம்பீகப் பேச்சையும் நிறுத்திக் கொண்டன.

முற்றும்.




❖1493-கொலம்பஸ் அமெரிக்காவுக்கான தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு ஸ்பெயின் திரும்பினார்.

1776 - தெற்கு கரோலினா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்ற முதலாவது அமெரிக்கக் குடியேற்ற நாடு இதுவாகும்.

❖1802-இலங்கையின் முதலாவது அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது.

❖1877-முதலாவது தேர்வுத் துடுப்பாட்டம் இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் மெல்பேர்னில் ஆரம்பமானது.

❖1961-தென்னாபிரிக்கா பொதுநலவாய நாடுகளில் இருந்து வெளியேறியது.

❖1984-விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடு விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டது.

❖1985-முதலாவது இணைய பொனையன் பெயர் (symbolics.com) பதியப்பட்டது.

❖1990-பிரித்தானிய ஊடகவியலாளர் பர்சாட் பாசொஃப்ட் ஈராக்கில் தூக்கிலிடப்பட்டார்.

❖1990-மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் ஒன்றியத்தின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாகத் தெரிவானார்.

❖1991-இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஜேர்மனியின் ஆதிக்க நாடுகளான ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் ஆகியவற்றிடம் இருந்து ஜேர்மனி முழுமையான விடுதலையைப் பெற்றது.

**பிறப்புகள்**

❖1914-எஸ்.எம்.சுப்பையா நாயுடு, தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர் (இ. 1979)

❖1915-அழகு சுப்பிரமணியம், ஆங்கில இலக்கியத்துறையில் புகழ் பெற்ற இலங்கையர் (இ. 1973)

❖1929-செம்பனார்கோவில் எஸ்.ஆர்.டி.வைத்தியநாதன், தமிழக நாதசுவரக் கலைஞர் (இ. 2013)

❖1938-தி. சு. சதாசிவம், தமிழக எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், நடிகர் (இ. 2012)

❖1950-கே.வி.தங்கபாலு, தமிழக அரசியல்வாதி

❖1956-ஓவியர் ஜீவா, தமிழக ஓவியர், திரைப்பட விமர்சகர், எழுத்தாளர்

**இறப்புகள்**

❖கி.மு.44-யூலியசு சீசர், உரோமக் குடியரசுத் தலைவர் (பி. கி.மு.100)

**சிறப்பு நாள்**

❖காவல்துறையினரின் வன்செயல்களுக்கு எதிரான பன்னாட்டு நாள்

❖உலக நுகர்வோர் உரிமைகள் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 80 | 40 | 40 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 50 | 60 | 80 | 40 |
| தக்காளி | 20 | 30 | 20 | 40 | 40 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 50 | 40 | 35 |
| கோவா | 20 | 30 | 30 | 50 | 60 | 25 |
| கரட் | 60 | 100 | 75 | 100 | 160 | 70 |
| பூசணி | 60 | 30 | 40 | 40 | 60 | 45 |
| புடோல் | 50 | 50 | 35 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 70 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 140 | 110 | 140 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 65 | 80 | 100 | 60 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 50 | 50 | 30 | 40 | 60 | 50 |
| லீக்ஸ் | 100 | 140 | 100 | 160 | 120 | 130 |
| பீற்றூட் | 20 | 40 | 30 | 60 | 50 | 25 |
| கறிமிளகாய் | 80 | 80 | 65 | 100 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 500 | 600 | 400 |
| போஞ்சி | 80 | 140 | 60 | 100 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | -- | — | 50 | 40 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 40 | 70 | 80 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 35-90 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 160 | 140 | 160 | 200 | 150 |
| வெங்காயம்பூ | 80 | 100 | 70 | 100 | 140 | 130 |
| முள்ளங்கி | 30 | 80 | 30 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | 40 | — | 60 | 80 | 80 |

தெய்வத்தின் விருப்பத்துக்கு எதிராக எந்தவொரு மனித சக்தியும் நிற்கமுடியாது.

– ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வமதக் கூட்டங்களை இந்து சமயத்தவர்கள் தவிர்க்க வேண்டும்

சர்வ மதம் என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்படுகின்ற கூட்டங்களில் சைவ சமயத் தலைவர்கள் பங்குபற்றுவதை முற்றாகத் தவிர்ப்பது நல்லது என்பது நம் தாழ்மையான கருத்து.

இதை நாம் கூறும்போது, இஃதென்ன குழப்பம் என்று யாரேனும் நினைக்கலாம். அந்த நினைப்பு யாரிடம் ஏற்பட்டாலும் அதற்குரிய விளக்கத்தை நாம் கூறுவது மிகவும் முக்கியமானது.

அந்த வகையில் சைவ சமயத்துக்கென ஒரு பொதுவான தலைமைத்துவம் இன்னமும் நம்மத்தியில் உருவாக்கப்படவில்லை.

அதேவேளை சைவ சமயத்தின் பிரதிநிதிகள் கூறுகின்ற கருத்துக்களை பிறமதத் தலைவர்கள் ஏற்பதாகவோ அன்றி அவை தொடர்பில் கருசனை கொள்வதாகவோ இல்லை.

மாறாக இலங்கையில் எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும் சைவ சமயத்தை ஆக்கிரமிக்கின்ற செயற்பாடுகளை பிற மதத்தவர்கள் செய்து வருகின்றனர்.

ஆனால் சைவ சமயம் இது காலத்தில் எந்தவொரு மதத் தலத்தையும் ஆக்கிரமிப்புச் செய்ததான பதிவுகள் எதுவுமில்லை.

தென்பகுதியில் கதிர்காமக் கந்தன் ஆலயம் பெரும்பான்மை இனத்தினுடையதாகிவிட்டது.

மன்னாரில் பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்தையும் பாலாவி தீர்த்தத்தையும் பங்குபோடுவதில் குறிப்பிட்ட ஒரு மதம் கடுமையாகச் செயற்பட்டு வருகின்றது.

இதேபோன்று கோணேச்சரம் ஆலயத்திலும் பௌத்தத்தின் ஆதிக்கம் செல்வாக்குச் செலுத்தத் துணிந்துவிட்டது.

இதேபோன்று வடபுலத்தில் பணத்துக்கு மதம் மாற்றும் சம்பளத் தொழிலாளர்கள் வீடு வீடாகச் சென்று சைவக் கடவுளைச் சாத்தான்கள் என்று கூறுகின்றனர்.

அதேநேரம் எங்கெல்லாம் சைவாலயங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் மதமாற்ற சபைகள் தத்தம் மதமாற்ற அலுவலகங்களை வழிபாட்டு இடம் என்ற பெயரில் அமைத்து வருகின்றனர்.

இதனைத் தடுத்து நிறுத்த முடியாதவர்களாக சைவ சமயத்தவர்கள் மனவேதனையுடன் வாழ்கின்றனர்.

இவை தவிர, சர்வ மதக் கூட்டம், ஆய்வு, கலந்துரையாடல் என்ற பெயரில் ஒரு சில சமயங்களை ஆதிக்கத்துக்கான ஆமோதிப்புகளே நடந்து வருகின்றன.

இதன்காரணமாகவே சர்வ மதக் கூட்டங்கள், சர்வமதப் பேரவைகள் என அனைத்தில் இருந்தும் சைவ சமயத் தலைவர்களும் அதன் பிரதிநிதிகளும் விலகிக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றோம்.

சர்வமதக் கூட்டங்களில் இருந்து சைவ சமயத் தலைவர்கள் விலகுவதற்காக அல்லது அவற்றைப் புறக்கணிப்பாளர்களாக இருந்தால், நிச்சயம் சைவ சமயத்துக்கான மதிப்பும் உரிய இடமும் வழங்கப்படும்.

இதைவிடுத்து சர்வமதம் என்ற பெயரில் பத்தோடு ஒன்றாக பங்கேற்றால் சைவ சமயத் தலைவர்களைக் கொண்டே சைவ சமயத்தை அழிப்பதற்கான அனுமதியை பிற சமயத்தவர்கள் பெற்றுவிடுவர்.

ஆக, இது தொடர்பில் சைவ சமய அமைப்புகள் ஒன்றாகக்கூடி நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவது மிகவும் அவசியமானதாகும்.

## பாதுகாப்பு விவகாரங்களில் தலையீடு

# அமெரிக்கத் தூதுவர் அதுல் ஜனாதிபதி ட்ரம்பால் அழைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவரான அதுல் கெசாப்பை எதிர்வரும் ஜூலை மாதம் முதல் மாற்றம் செய்வதற்கு டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இலங்கையின் பாதுகாப்பு மற்றும் உள்விவகாரங்களில் அமெரிக்க தூதுவரான அதுல் கெசாப் தலையீடு செய்துவந்தார்.

அதுல் கெசாப் தலைமையிலான குழு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் ஆதரவாளர்கள் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது."

இந்நிலையில், அமெரிக்க தூதுவரான அதுல் கெசாப்பை மாற்றியமைப்பதற்கு டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ட்ரம்பின் நெருங்கிய ஒருவர் இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அதுல் கெசாப் நாட்டை விட்டு செல்வது தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# குளத்தின் கரையோரப் பகுதிகள் சட்டவிரோதமாக அபகரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி குளத்தின் கரையோரப்பகுதிகளை சட்டவிரோதமான முறையில் மண் போட்டு நிரப்பி அக்காணிகளை அபகரிக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் உள்ள வசதி படைத்தவர்களே இச்சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுளளது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டப ஒழுங்கையின் முடிவுப் பிரதேசத்தில் கிளிநொச்சி குளத்தின் பின்பகுதி காணப்படுகின்றது.

இப்பகுதியில் உள்ள குளத்திற்குச்சொந்தமான காணிகளில் மண் நிரப்பி அங்கு உள்ள ஏனைய மேட்டுக் காணிகளுடன் இணைத்து குளத்திற்குச் சொந்தமான காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-315)

# சமூக வலைத்தளப் பயன்பாடு குறித்து புதிய சட்டம் சிலவாரங்களில் வரும் பிரதமர் ரணில் நடவடிக்கை

(கொழும்பு)

பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவது தொடர்பில் புதிய சட்டம் ஒன்றை இன்னும் சில வாரங்களில் கொண்டு வரவுள்ளதாக பிரதமர் ரணில் விககிரமசிங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற் றும் விதிமுறைகள் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களுக்கும் ஏற்புடையதாக அமையும் வகையில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களை அடுத்து, பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களுக்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்தும் நீடிக்கிறது.

இந்நிலையிலேயே பிரதமர் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மீள்குடியேற்றத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றத்துக்காக அனுமதிக்கப்பட்ட இடங்களில் உள்ள பாடசாலைகளில் தேவையாக இருந்த ஆசிரியர்கள் நேற்றைய தினம் வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் நடவடிக்கையை அடுத்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது உறுப்பினர் கஜதீபன், இராணுவம் உயர் பாதுகாப்பு வலயமாக பிடித்து வைத்துள்ள காணிகளில் இன்னும் எட்டு பாடசாலைகள் உள்ளதாகவும், அதனை விடுவிக்க வடக்கு மாகாண சபை தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதுதவிர மீள்குடியேற்றத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும்,இதனால் அந்த பாடசாலைகள் வினைத்திறனாக இயங்க முடியாமல் உள்ளதாகவும் சுட்டிக்காட்டி, அந்த பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என வடக்கு மாகாண சபையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனை அடுத்து கல்வி அமைச்சரின் விரைவான நடவடிக்கையை அடுத்து நேற்றைய தினம் மேற்படி பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த பகுதிக்குள் தற்போதும் 08 பாடசாலைகள் விடுவிக்கப்படாமல் இருக்கின்றது.

அவற்றை இராணுவத்தினரிடமிருந்து விடுவிப்பதற்கு வடக்கு மாகாண சபை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என கஜதீபன் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ் **பிரதேசத்தில்** வாதரவதைை, பெரியபொக்கணை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** கணேசபுரம் கிராமத்திலும் **மன்னார் பிரதேசத்தில** நீராவிபுரம், கற்கடந்த குளம் ஆகிய பிர தேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## சத்திய தரிசனம்

### கோபம் பஞ்சாய்ப் பறக்க வழி

❖ செல்வம் குறைந்திருந்தாலும் ஒழுக்கத்தில் சிறந்த குடும்பங்கள் உயர்வாக கருதப்படுகின்றன. பெரும்புகழ் அவர்களைத் தானாக வந்து சேரும், ஏனெனில் செல்வம் நிலையற்றது. ஒழுக்கம் நிலையானது. பணம் இல்லாதவனுக்கு குறைகள் ஏதும் கிடையாது.

❖ தவறுகளைச் செய்வதாலும், தீயவர்களின் சேர்க்கையாலும் உடலைக் கெடுத்துக் கொள்வது வருந்தத்தக்கது. செய்யும் செயல் அனைத்தையும் உயர்ந்த நோக்கத்துடன் இணைத்து உங்கள் உடலைப் புனிதமானதாக மாற்றுங்கள்.

❖ மற்றவர்கள் உங்களுக்கு எதைச் செய்யக்கூடாது என்று எண்ணுகிறேர்களோ, அதை நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யாமல் இருக்க வேண்டும்.

❖ ரயில் தவறிவிட்டது என்கிறோம், ஆனால், நாம் தான ரயிலுக்குத் தக்க நேரத்தில் சென்று அடையாமல் தவறிவிட்டோம். அதேபோல் நாம் செய்த வினைகளே நம்மை சோதிக்கின்றனவே தவிர, இறைவன் சோதிப்பதில்லை.

❖ அளவுக்கு அதிகமாக கோபம் வந்தால், இறைவனின் திருப்பெயர்களை இடைவிடாது கூறினால், கோபம் ஆடிக்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் பறக்கும்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வாசல், நடை அமையும் முறைகள் எவை?**

தெற்கு வடக்கு ஈசானிய வாயவிய வாயில் நடை: பெண்களுக்கு இழுக்கைத் தரும்.

தெற்கு ஆக்நேயத்தில் இருந்து வடக்கு வாயில் நடை: மன அமைதியைக் குறைக்கும்

மேற்கு வடக்கு ஈசானிய வாயில் நடை: மேன்மையான பலன்கள்

மேற்கு கிழக்கு ஈசானிய வாயில் நடை: புகழ்

மேற்கு தலை வாயில்: கிழக்கு வாயில் நலம்

வடக்கு தெற்கு வாயில்: செல்வக்குறைவு

வடக்கு தெற்கு ஆக்நேயம்: கலகம்

வடக்கு தெற்கு நிருதி வாயில்: பெண் கெடுதி

தெற்கு தலை வாயில்: வடக்கு வாயில் அவசியம்

கிழக்கு வாயில் இல்லாத வீடு: ஆண்களுக்கு கேடு

வடக்கு வாயில் இல்லாத வீடு: பெண்ணிற்கு அலைச்சல்

(தொடரும்)




வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் 2018 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் பரிசளிப்பு விழாவின் போது...

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விளையாட்டுப் போட்டிகள்

தமிழரின் பண்பாட்டு நிகழ்வாகவும் தமிழர்களின் புத்தாண்டாகக் கொண்டாடப் படும் சித்திரை மாத பிறப் பன்று வவுனியா மாவட்டத் தில் 34 வருடமாக கலைம கள் சனசமூக நிலையமும் கலைமகள் விளையாட்டுக் கழகமும் இணைந்து பல் வேறு தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களை நடத்து கின்றது. அந்த வகையில் இவ்வருடமும் நடத்தப்பட வுள்ளதால் அதற்கான விளை யாட்டுகளுக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமாகாண அணிகள் மட்டும் பங்குபற்றக்கூடிய அணிக்கு 4 பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, வவுனியா மாவட்ட வீரர்கள் மட்டும் பங்குபற்றக்கூடிய 40 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, வவுனியா மாவட்ட வீரர்கள் மட்டும் பங்குபற்றக்கூடிய 5 மைல் மரதன் ஓட்டப்போட்டி மற்றும் வவுனியா மாவட்ட வீரர்கள் மட்டும் பங்குபற்றக் கூடிய கயிறு இழுத்தல்போன்ற போட்டிகளும் தமிழரின் பாரம் பரிய விளையாட்டுக்களான சறுக்கு மரம் ஏறுதல், தலை யணைச் சண்டை, முட்டி உடைத்தல், சங்கீதக் கதிரை, மூன்று சில்லு சைக்கிள் ஓட்டம் போன்ற விளையாட்டு போட்டிகளும் நடைபெறும்.

மேலும்பிரபல இன்னிசைக் கலைஞர்களின் இன்னிசை இரவு நிகழ்ச்சியும் இடம் பெறும் என்பது குறிப்பிடத் தக்கது.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பப் படிவங்களை 30.03.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வாறு தலைவர் கலைமகள் சனசமூக நிலையம், மன் னார் வீதி, வவுனியா என்ற முகவரிக்கோ அல்லது திருப் பதி கூல்பார், மன்னார் வீதி, வவுனியா என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடி யாகவோ அனுப்பி வைக்க வும். இவ்விளையாட்டு தொடர் பான மேலதிக தொடர்புக ளுக்கு, க.ஸ்ரீசங்கர் -077 736 3175, ஜீவகுமார் - 077 603 1512, விஜயகுமார் - 077 631 3658, சீலன் - 077 645 3739 ஆகியோ ரிடம் தொடர்பு கொள்ள லாம்.(க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கரணவாய் சோளங் கன் விளையாட்டுக் கழகம் நடத் தும் அணிக்கு எட்டுப் பேர் ஆறு பந்துப் பரிமாற் றங்களைக் கொண்ட மாபெ ரும் துடுப்பாட்டப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள் ளது.

பங்கு பற்ற விரும்பும் அணிக்கு 077 833 3499, 077 104 1691, 076 863 2107 எனும் இலக்கங்களு டன் தொடர்பு கொள்ளுமாறு விளையாட்டுக்கழகத்தின் தலை வர் கேட்டுள்ளார். (க-60)

## யாழ்ப்பாண பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்பிரதேச செய லத்தின் 2018 ஆம் ஆண் டிற்கான விளையாட்டுப் போட் டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு பாஸையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமைதானத் தில் யாழ்ப்பாண பிரதேச செய லாளர் பொ.தயானந்தன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் கே.குருபரன் மற் றும் யாழ். மாவட்ட விளையா ட்டு உத்தியோகத்தர் கே. விஜி தரன் ஆகியோர் கலந்து கொள் கின்றனர். போட்டிகள் யாவும் குறித்த நேரத்திற்கு ஆரம்ப மாகும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-106)

## சமி மிகவும் நல்ல மனிதர் ஆதரவு கொடுக்கும் டோனி



இந்திய வேகப்பந்து வீச்சா ளர் முகமது சமியால் நாட் டுக்கும் மனைவிக்கும் துரோ கம் செய்ய முடியாது என மகேந்திர சிங் டோனி தெரி வித்துள்ளார்.

இந்திய வேகப்பந்து வீச் சாளர் முகமது சமி மீது அவரது மனைவி ஹசின் பல பரபரப்பான குற்றச்சாட் டுக்களை அளித்தார்.

இந்நிலையில், இந்திய முன்னாள் அணித் தலைவ ரும் விக்கெட் கீப்பருமான டோனி இது குறித்து கூறுகை யில்,

'முகமது சமி மிகவும் நல்லவர். அவரை நீண்ட காலமாக எனக்குத் தெரியும். சமியால் நாட்டிற்கும் அவரது மனைவிக்கும் எந்தத் துரோகமும் செய்ய முடியாது. இது அவரது தனிப்பட்ட குடும்ப வாழ்க்கை.

இதனை ஷமிதான் தீர்க்க வேண்டும். இந்த விவகார த்தை ஊடகங்கள் பெரிதுப டுத்தக் கூடாது. அனைத்து பிரச்சினைகளில் இருந்தும் ஷமி மீண்டு வருவார்' என தெரிவித்துள்ளார். (க)

## குசல் பெரேராவுக்கு காயம் கவலையில் இலங்கை அணி



இலங்கை அணி வீரர் குசல் பெரேரா காயம் அடை ந்துள்ள விடயம் அந்த அணி க்கு கவலையை ஏற்படுத்தி யுள்ளது.

இலங்கையில் நடை பெற்று வரும் முத்தொடர் இருபது-20 போட்டிகளில் இலங்கை அணி சார்பில் குசல் பெரேரா சிறப்பாக விளையாடி வருகிறார். அவர் தொடர்ந்து அரை சதங்களை விளாசி வருகிறார்.


இந்நிலையில் 12 ஆம் திகதி இந்தியாவுடனான போட்டியில் இலங்கை தோற் றது. இப்போட்டியில் 55 ஓட்ட ங்கள் குவித்த பெரேரா, பவுண்டரி அருகே பீல்டிங் செய்யும் போது கீழே விழு ந்து காயமடைந்தார்.

இதனால் நாளை நடை பெறவுள்ள வங்கதேசத்துக்கு எதிரான முக்கிய போட்டியில் அவர் விளையாடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

குசல்பெரேராவுக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டுள்ள நிலை யில் மருத்துவ குழு அவரை கண்காணித்து வருகிறது.

ஏற்கனவே இலங்கை அணியின் முன்னணி வீரர் கள் காயத்தால் அவதிப்பட்டு வரும் நிலையில் பெரேரா வின் காயம் அணியினரை கவலையில் ஆழ்த்தியுள் ளது. (க)

## சூதாட்டம் செய்தாரா சமி விசாரணைகள் ஆரம்பம்



இந்திய அணியின் முன் னணி வேகப்பந்து வீரர் முகமது சமி. இவர் மீது அவ ரது மனைவி பல்வேறு புகா ர்களைக் கூறியிருந்தார். கொடுமைப்படுத்தி, கொலை செய்ய முயற்சித்ததாக பொலி ஸில் புகார் அளித்தார்.

தென்னாபிரிக்க தொடர் முடிந்த பிறகு முகமது சமி டுபாய் சென்று பாகிஸ்தானை சேர்ந்த பெண்ணை சந்தித்து சூதாட்டத்தில் ஈடுபட்டு இருக் கலாம் என்றும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

இதன் அடிப்படையில் கொல்கத்தா பொலிஸார் முக மது சமி மீது வழக்குப் பதிவு செய்திருந்தனர். அதோடு கிரிக்கெட் வாரியத்துக்கு முகமது சமியின் தென்னா பிரிக்க பயண விபரங்களை கேட்டு கடிதம் எழுதி இருந்த னர்.

இதைத் தொடர்ந்து முக மது சமியிடம் சூதாட்ட குற் றச்சாட்டு குறித்து ஊழல் தடுப்புக் குழு விசாரணை நடத்துகிறது. (க)

## மாகாண சபையில்...

கத்தை சர்வதேச நீதி பொறிமுறைக்கு உட்படுத்துமாறு கோரி வடமாகாண சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானம் மின்னஞ்சல் மற்றும் தபால் ஊடாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதன் ஒரு பிரதியை கடந்த 9ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு நேரில் வழங்கியுள்ளேன். வடமாகாண சபையின் தீர்மானத்தை வழங்கும்போது ஆணையாளருடன் ஒரு நிமிடம் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அப்போது இலங்கை அரசும் இணங்கி நிறைவேற்றிய 30:01 தீர்மானத்தில் இலங்கை அரசு இணங்கியிருந்த 36 நிபந்தனைகளில் ஒன்றான மீள நிகழாமை என்ற நிபந்தனை அப்பட்டமாக மீறப்படுகின்றது.

இந்த நிலையில் தான் கண்டியிலும் அம்பாறையிலும் முஸ்லிம் மக்கள் மீது இடம்பெற்ற வன்செயல்களை சுட்டிக்காட்டியிருந்தேன். சிறுபான்மை இனங்கள் மீது இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியான வன்செயல்களை கட்டவிழ்த்து வருகின்றது என சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதேபோல் 9-ம் திகதி பொதுச் சபை கூட்டத்தில் பேசுவதற்கு ஒரு நிமிடமும் 30 விநாடிகளும் வழங்கப்பட்டது. அப்போது இலங்கை அரசாங்கம், தாமும் இணங்கி நிறைவேற்றிய 30:01 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என சொல்கிறது.

குறிப்பாக ஜனாதிபதி பிரதமர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் அப்பட்டமாக அதனை கூறிவருகின்றார்கள் என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறேன். எனவே இலங்கை அரசை ஒரு சர்வதேச நீதி பொறிமுறைக்கு உட்படுத்துமாறும், ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திட அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளேன். மேலும் வடமாகாண சபையின் தீர்மானம் வடமாகாணத்தில் வாழும் 11 லட்சம் மக்களுடைய நிலைப்பாடாக உள்ளது. 26-ம் திகதி ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் வடமாகாண சபையின் தீர்மானம் பெரிதும் தாக்கம் செலுத்தும் என்றார். (ம-4)

## இலங்கையின் அபிவிருத்தி...

வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக ஜப்பானிய பிரதமர் ஷிங்சோ அபே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உறுதியளித்தார்.

ஜப்பானுக்கு அரச முறைப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஜப்பானிய பிரதமர் ஷிங்சோ அபேவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போதே ஜப்பானிய பிரதமர் மேற்கண்டவாறு கருத்தைத் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு ஜப்பான் பெற்றுத்தரும் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக எதிர்காலத்திலும் வழங்கப்படும் என ஜப்பானிய பிரதமர் உறுதியளித்தார்.

இதன்போது துறைமுக அபிவிருத்திக்கு முன்னுரிமையளிப்பதுடன், ஏற்கெனவே கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் அபிவிருத்திக்காக ஜப்பானிய அரசால் வழங்கப்படும் ஒத்துழைப்பு தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் மின்சக்தி உற்பத்திக்கு தேவையான உதவிகளை வழங்க தயாராகவுள்ளதாக தெரிவித்த ஜப்பானிய பிரதமர், அதிவேக வீதிக்கட்டமைப்புக்களை அமைப்பதற்கும் உதவி வழங்குவதாக இதன்போது குறிப்பிட்டார்.

ஜப்பானின் கைத்தொழில் செயற்பாடுகளின் பங்களிப்பையும் இலங்கைக்கு வழங்க முடியும் என ஜப்பானிய பிரதமர் இதன் போது தெரிவித்தார்.

அதேபோன்று இலங்கையின் சுகாதார துறையின் அபிவிருத்திக்கு அவசியமான தொழில்நுட்ப உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த கோரிக்கைக்கு ஜப்பானிய பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

இலங்கையின் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும், கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்றிட்டத்துக்கும் உதவி வழங்குவதாக ஜப்பானிய பிரதமர் உறுதி வழங்கினார்.

பாதுகாப்பு மற்றும் கடற்படை செயற்பாடுகளிலும் ஜப்பான் இலங்கைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புக்களை இதன்போது நினைவுகூர்ந்த ஜப்பானிய பிரதமர், இந்து சமுத்திர வலய நாடுகளிடையே ஜப்பானிய அரசின் இந்த உதவி இலங்கைக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பாக ஜப்பானிய பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக தொடர்புகளை மேம்படுத்துதல் தொடர்பாக இதன்போது தலைவர்கள் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், இலங்கையில் அரசதுறையில் முதலீடு செய்தல் மட்டுமல்லாது, அரச மற்றும் தனியார் ஆகிய இருதுறைகளினதும் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி இதன்போது சுட்டிக் காட்டினார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த ஜப்பானிய பிரதமர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தப் பயணத்தால் இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையில் ஆதி காலம் முதல் பேணப்பட்டுவரும் நெருங்கிய நட்புறவில் மேலும் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகும் என தெரிவித்தார்.

இருநாடுகளுக்குமிடையே இருதரப்பு தொடர்புகளை மேலும் உறுதிசெய்து கொள்வதற்கு அரச முறைப் பயணத்துக்கு அழைப்பு விடுத்தமைக்காக ஜப்பானிய பிரதமருக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, கடந்த ஜீ7 மாநாட்டின்போது வலுப்பெற்ற ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்புகள் இந்தப் பயணத்தின் மூலம் மேலும் உறுதியடைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த ஜீ7 மாநாட்டின் வெற்றியை நினைவூட்டிய ஜனாதிபதி, ஜப்பானிய பிரதமருக்கு அதற்காக நன்றி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அகிஹிதோ சக்கரவர்த்தியுடன் இடம்பெற்ற சந்திப்பை கௌரவத்தோடு நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இதன் போது தமக்கு வழங்கப்பட்ட அமோக வரவேற்புக்கும் நன்றி தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தருமாறு ஜப்பானிய பிரதமருக்கு ஜனாதிபதி, அழைப்பு விடுத்ததுடன் ஜப்பானிய பிரதமரும் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்.

இரு அரச தலைவர்களுக்குமிடையிலான இருதரப்பு கலந்துரையாடலின் இறுதியில் ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான சுகாதார சேவைகள் தொடர்பான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது.

டோக்கியோ நகரில் அமைந்துள்ள ஜப்பானிய பிரதமரின் அலுவலகத்துக்கு பயணம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, ஜப்பானிய பிரதமர் ஷிங்சோ அபே மகத்தான வரவேற்பு அளித்தார்.

அதன் பின்னர் இராணுவ அணிவகுப்பு மரியாதை சகிதம் உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வு மிகுந்த அபிமானத்தோடு இடம்பெற்றமையானது இருநாடுகளுக்குமிடையிலான தொடர்பினை தெளிவாக எடுத்துக்காட்டியது.

உத்தியோகபூர்வ வரவேற்பின் இறுதியில் இரு அரச தலைவர்களும் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் ஜப்பானிய பிரதமரால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தூதுக்குழுவினர் பிரதான கலந்துரையாடல் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், அரச தலைவர்களின் குழு ஒளிப்படமும் எடுக்கப்பட்டது. (ம)

## சம்பிக்க ரணவக்கவே...

இந்த கலவரத்தினூடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுமே பெரும் இலாபத்தை அடைந்ததாக தெரிவித்த முஸ்லிம் உரிமைகளுக்கான கூட்டமைப்பின் தலைவர் மொஹமட் நிப்ரால், அரசாங்கத்திற்கு அழுத்தம் தெரிவித்த அரசிலுள்ள 21 முஸ்லிம் அமைச்சர்கள், உறுப்பினர்களும் விலகிவர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கண்டி திகன, தெல்தெனிய உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த வாரம் கலவரங்கள் இடம்பெற்றதோடு பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் என்பவற்றின் மீது தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 280 பேர் கைது செய்யப்பட்ட அதேவேளை நிலைமையை வழமைக்கு கொண்டு வர அவசர காலச் சட்டமும், பொலிஸ் ஊரடங்குச் சட்டமும் கொண்டுவரப்பட்டன.

இந்த நிலையில் கண்டி வன்முறை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை முஸ்லிம் உரிமைகளுக்கான கூட்டமைப்பு கொழும்பில் நேற்று புதன் கிழமை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த கூட்டமைப்பின் தலைவரான மொஹமட் நிப்ரால், 25 வருடங்களுக்கு முன்னதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க விதைத்த இனவாத விதையே கண்டியில் முளைத்திருப்பதால் அவரது அத்தனை புத்தகங்களையும் அரசாங்கம் தடைசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட மொஹமட் நிப்ரால், இலங்கையில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாத செயற்பாடுகளுக்கு எதிராக கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளதாக தெரிவித்தார். (ம)

# சர்வதேசத்தை நம்பியே தமிழ் மக்கள் உள்ளார்கள்

## இம்மானுவேல் அடிகளார்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தோல்வி அடைந்தாலும் தமிழர்களுக்கு இருக்கும் ஒரே ஒரு சக்தி சர்வதேசம்தான் என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மேலைத்தேய நாடுகளின் அமைப்பையும், அதன் சக்தியையும் அறியாமல் இங்குள்ள சிலர் விமர்சனம் செய்கின்றனர்.

அது தவறானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்-நல்லூரில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் செய்யக்கூடியது என்ன என்பது மக்கள் மத்தியில் தெளிவாக போய்ச்சேரவில்லை என தெரிவித்துள்ளார்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த முடியாது.

அந்த உண்மை எல்லோருக்கும் தெரியும் என தெரிவித்த சுமந்திரன், அமெரிக்கா கூட இந்த விடயத்தை மேற்கொள்ளாது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை மிகவும் வலுப்பெற்றிருப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ம)

## இலங்கை தொடர்பாக...

இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட்ட போதும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என ஐ.நா மனித உரிமைகள் பேரவை விசனமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை மைத்திரி-ரணில் அரசாங்கம் 2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த காலம் முதல், வடக்கு கிழக்கு பிரதேசங்களின் நிலைமையில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்றும், குறிப்பாக இராணுவ முகாம்களின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை எனவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மனித உரிமைகள் பேரவை தகவல்கள் கூறுகின்றன.

காணாமல்போனோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல், மீள் குடியேற்றம், படையினரால் அபகரிக்கப்பட்ட காணிகளை மீளவும் கையளித்தல் உள்ளிட்ட யுத்தத்தினால் ஏற்பட்ட பக்கவிளைவுகளுக்கு, நல்லாட்சி அரசாங்கம் சரியான முறையில் தீர்வுகளை முன்வைக்கவில்லை என்று முறைப்பாடுகள் ஜெனிவாவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், பொறுப்புக்கூறும் விடயத்தில், இலங்கை அரசாங்கம் உரிய முறையில் செயற்படவில்லை என்பது தொடர்பாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கடும் கண்டனங்களை வெளியிடும் எனவும், கால அவகாசம் வழங்கக்கூடிய சாதகமான நிலைமை இல்லையெனவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, தமிழகத்தில் இருந்து நீதிபதி ஒருவரின் தலைமையில் சென்றுள்ள 12 பேர் அடங்கிய குழு தமிழர்களின் நிலைமை தொடர்பாக மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரை சந்தித்து விளக்கமளிக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இந்திய மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதி, ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக கடும் கண்டனங்களை வெளியிடலாம் எனவும், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து இந்தியா வலியுறுத்தும் எனவும் ஜெனிவா தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்காவும் இலங்கை தொடர்பாக விசனம் வெளியிடலாம் எனவும் இதன் காரணத்தினால் கால அவகாசம் வழங்குமாறு இலங்கை அரசாங்கம் மீண்டும் கோரிக்கை முன்வைக்க முடியாத நிலை ஏற்படலாம் எனவும் ஜெனிவா தகவல்கள் கூறுகின்றன.(ம)

## சிறீதரன் எம்.பி...

ணம் சிறீதரன் நேற்று ஜெனிவா பயணமாகியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 37ஆவது கூட்டத்தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பங்குபற்றவே சிறீதரன் ஜெனிவா பயணமாகியுள்ளார்.(ம)

## நாடு கடத்தப்பட...

இணைப்பு நுழைவிசைவு காலாவதியான நிலையில் நடேசலிங்கம், அவரது மனைவி பிரியா மற்றும் இவர்களின் குழந்தைகளான கோபிகா மற்றும் தருணிகா ஆகியோர், நாடு கடத்தப்படுவதற்காக அவுஸ்ரேலிய அதிகாரிகளால் குடிவரவுத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை நாடு கடத்துவதை தடுக்கக் கோரி அவுஸ்ரேலியாவில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்ததுடன், சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு இவர்கள் நால்வரும் நாடு கடத்தப்படுவதற்காக பேர்த் விமான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, வேறு பல இலங்கையர்களுடன் சிறப்பு விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டனர்.

பின்னர் சிறிது நேரத்தில் அவுஸ்ரேலிய அதிகாரிகள் அவர்களை விமானத்தில் இருந்து இறக்கிக் கொண்டு சென்றனர்.

கடைசி நேரத்தில் முன்னெடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளை அடுத்தே அவர்களை நாடு கடத்தும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (ம)

## எதிரான இனப்படுகொலை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறை தொடர்பில் ஐ.நா நன்கு அறியும்.

சிறுபான்மை இனத்துக்கு எதிராக இலங்கையில் நடைபெறும் அடக்குமுறையை சர்வதேசம் கண்டிக்க வேண்டும் எனவும் கஜேந்திரகுமார் கேட்டுக்கொண்டார். (ம)

## காணாமல் போ...

த்துள்ளார்.

மேலும் இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் மற்றும் கையளிக்கப்பட்டவர்கள் குறித்து ஆதாரங்கள் வெளியிடப்பட்ட போதிலும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இதுவரை இலங்கை அரசு வெளிப்படுத்தவில்லை. அதனை முதலில் செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நாட்டிலே வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டவர்கள் சம்பந்தமான விடயங்களை வெளியிலே கொண்டுவருவதற்கான சர்வதேச சமவாயச் சட்டமூலம் இந்தச் சபையிலே சமர்ப்பிக்கப்பட்டதையிட்டு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேநேரம் இதனைக் கொண்டு வருவதற்குக் கிட்டத்தட்ட இரண்டரை வருடங்கள் எடுத்திருக்கிறது என்பது மிகவும் கவலைக்குரியது. இந்த நாட்டிலே அதிகமானோர் வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டார்கள்.

குறிப்பாக வடக்கு- கிழக்கு வாழ் தமிழர்கள் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமக்கு நடந்த அநீதிகளுக்கு எதிராக மனித நேயத்தோடும் ஜனநாயக முறைப்படியும் முன்னெடுத்த போராட்டங்கள் எல்லாம் ஆயுத முனையில் அடக்கப்பட்டன. அந்த மக்கள் ஆயுத ரீதியாகத் தாக்கப்பட்டனர் அந்தநேரத்தில்தான் அவர்கள் துப்பாக்கிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த நிலைமையை அரசுதான் அவர்கள்மீது திணித்தது.

அதன் பின்னர் நீண்ட பெரும் போராட்டத்துக்கு மத்தியில் 2009ஆம் ஆண்டிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போனார்கள். இந்த நாட்டிலே இதனை விசாரிப்பதற்காகப் பல்வேறுபட்ட ஆணைக்குழுக்களை அரசாங்கம் நியமித்தது.

குறிப்பாக தமிழர்கள் மீதான ஓர் இனப்படுகொலையை மேற்கொண்ட மகிந்த ராஜபக்ஷவும் அவருடைய சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவும் இந்த நாட்டிலே செய்த அதிபயங்கரமான யுத்தம் மற்றும் கொடூரமான கொலைகளினால் பல்வேறுபட்டவர்களும் காணாமலாக்கப்பட்டார்கள்.

இந்த நாட்டிலே இருக்கின்ற இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இந்த நாட்டிலே நடந்திருக்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வைச் சரியான முறையில் அணுக வேண்டும் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இந்த விடயங்களைக்கூட அரசாங்கம் கிஞ்சித்தும் தன்னுடைய கவனத்திலே எடுக்கவில்லை. பின்னர் மேலும் ஏமாற்றுவதற்காக முன்னாள் நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தலைமையிலே ஜனாதிபதி ஆணைக்குழுவை உருவாக்கியது.

ஆனால், இந்த ஜனாதிபதி ஆணைக் குழுவானது மக்களிடம் விசாரணை செய்த நேரத்தில் உங்களுக்கு ஆடு தரவா? கோழி தரவா? என்று இளக்காரமான முறையில் கேட்டதே தவிர, சரியான முறையில் நீதியைத் தரவில்லை.

இவற்றையெல்லாம் கடந்து 2011- 2015 வரையில் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாக, 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜெனிவாப் பிரகடனத்தின் 30(1)இன் கீழுள்ள சகல விடயங்களையும் இலங்கை ஏற்றுக்கொண்டது.

அப்பொழுது வெளிநாட்டமைச்சராக இருந்த மங்கள சமரவீர, காணாமற்போனோர் தொடர்பில் காரியாலயம் அமைக்கின்றோம் அவர்கள் தொடர்பில் உடனடித் தீர்வைக் கொண்டுவருகின்றோம் அவர்களைக் கண்டுபிடித்து உறவினர்களிடம் ஒப்படைக்கின்றோம் நீதியை வழங்குகின்றோம் என்று கூறினார்.

ஆனால், இரண்டரை வருடங்கள் கடந்தும் இதுவரை அந்த நீதி நிலைநாட்டப்படவில்லை. இந்த நிலையில் இன்றைய நாளில் இந்தச் சட்டமூலம் விவாதிக்கப்படுகின்றது. அதற்கான ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் எங்கே குறித்த அலுவலகம் அமையும்? கொழும்பிலே அமைந்தால், வடக்கிலும் கிழக்கிலும் இருக்கின்றவர்கள் எவ்வாறு கொழும்புக்கு வந்து உரிய சாட்சியங்களையும் மற்றும் விடயங்களையும் முன்வைப்பார்கள்? எனவே, வடக்கிலும் கிழக்கிலும் காணாமற்போனோர் பற்றிய அலுவலகங்கள் குறைந்தது நான்கையேனும் நிறுவி அங்கு அந்த மக்கள் யாருடைய இடைஞ்சலும் இல்லாமல் குறிப்பாக புலனாய்வுத்துறையினருடைய இடைஞ்சல்கள் இல்லாமல், சர்வதேச மேற்பார்வையோடு சுதந்திரமாகத் தங்களுடைய சாட்சியங்களை அளிப்பதற்கு வழிசெய்ய வேண்டும்.

தலைமைதாங்கும் உறுப்பினரே இதிலே சர்வதேசத்தினுடைய கவனிப்பு மிகமிக முக்கியம். குறிப்பாக, அமெரிக்கா கூடிய கரிசனையைச் செலுத்த வேண்டும் பிரித்தானியா அதன் கரிசனையைக் காட்ட வேண்டும். இந்தியா தன்னுடைய பங்களிப்பை வழங்க வேண்டும்.

அதாவது, இந்த விடயத்திலே வெளிப்படையான விசாரணை நடைபெறுவதற்கு ஐரோப்பிய நாடுகள் உதவ வேண்டும். ப்பயர் சூன் என்று சொல்லப்படுகின்ற இடத்திலிருந்து போர் நிறுத்தம் செய்யப்பட்ட வலயங்களுக்குள் செல்லுமாறு மக்களிடம் கூறப்பட்டதன் பின்னர் அங்கு கொல்லப்பட்ட மக்களுக்கு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

தங்களுடைய பிள்ளைகளை ஒப்படைத்த பெற்றோர், கணவனை ஒப்படைத்த மனைவிமார், தங்களுடைய தாய், தந்தையரை ஒப்படைத்த பிள்ளைகள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் போராட்டத்திற்கு ஒரு வருடம் முடிந்திருக்கின்றது.

ஆனால், இந்த நாட்டிலே யாருடைய கண்ணுக்கும் அவர்களின் நிலைமை தெரியாதிருப்பது நியாயமல்ல. அவர்களுக்கு அதற்கான நீதி இன்னமும் கிடைக்காமையால் தொடர்ந்தும் பேராடிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் சர்வதேசத்தினுடைய மேற்பார்வையின்கீழ், சர்வதேச சமூகத்தினுடைய பிரசன்னத்தோடு இந்த விடயம் விசாரிக்கப்பட்டு நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று நான் குறிப்பிடுகின்றேன்.

ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா இந்த விடயங்களிலே மேன்மேலும் - கூடுதலாகத் தங்களுடைய கரிசனையைக் காட்ட வேண்டும் என்பதைத்தான் நாங்கள் வலியுறுத்துகின்றோம். மிக முக்கியமாக, இவ்வாறு காணாமற்போனவர்களுடைய குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். குறிப்பாக பாதிரியார் பிரான்ஸிஸ் தலைமையிலே 48 இற்கும் மேற்பட்டவர்கள் சரணடைந்திருந்தார்கள். அவர்களைக் கொண்டுசென்ற வாகனம் எங்கே? அவர்கள் எங்கே?

விடுதலைப் புலிகளினுடைய மூத்த உறுப்பினர் பாலகுமாரனுடைய மகன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. அந்த அடையாளங்களை லங்கா கார்டியன் பத்திரிகை வெளியிட்டது. பி.பி.சியின் முன்னாள் செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தன்னுடைய டுவீட்டர் பக்கத்திலே வெளியிட்டிருந்தார். இவையெல்லாம் நடந்தும்கூட இந்த நாட்டிலே நீதி கிடைக்கவில்லை.

சரணடைந்த புலித்தேவனும் அவரோடு சென்ற அரசியல் பொறுப்பாளர் நடேசனும் கொல்லப்பட்டார்கள். இவ்வாறாக மிகுந்த அநியாயங்கள் இந்த நாட்டிலே நடந்தன. மிகக் கொடூரமாக நடந்த அந்த யுத்தத்திலே அந்த மக்கள்மீது யுத்தக் குற்றங்கள் புரியப்பட்டன. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை குறிப்பிட்டதுபோல 2009ஆம் ஆண்டிலே ஒரு இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் காணாமற்போயும் இருக்கின்றார்கள்.

எனவே அரசாங்கம் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சர்வதேசச் சட்ட வல்லுநர்களின் - நீதியாளர்களின் உதவிகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறியதன் பிரகாரம் இதனை விசாரித்து அந்த மக்களுக்கு நீதியை வழங்கவேண்டும் என்றார். (ம-4)

## எதிர்வரும் 22-ம்...

தபா தெரிவித்துள்ளார்.

பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான பிரச்சினைகள் நிலவும் 15 உள்ளூராட்சி சபைகளை தவிர ஏனையவற்றின் பிரதிநிதிகள் சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர். நாட்டில் மொத்தமுள்ள 340 உள்ளூராட்சி சபைகளில் 24 மாநகர சபைளும் 41 நகர சபைகளும் அடங்கும்.

முழு உள்ளூராட்சி சபைகளுக்கும் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 5 ஆயிரத்து 61 உறுப்பினர்கள் வட்டார ரீதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 3 ஆயிரத்து 264 உறுப்பினர்கள் விகிதாசார ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

60 வீதமான உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் 40 வீதமான உறுப்பினர்கள் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## ஹெரோயின் கட...

மறைத்து சூட்சுமமாகக் கடத்திச் சென்ற இளம் பெண் மற்றும் இளைஞர் ஒருவரும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடம் சிக்கிக்கொண்டனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸார் ஊடாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டார்.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவரை பார்வையிட நேற்று முன்தினம் வருகை தந்துள்ளார். அவர் கொண்டு சென்ற பொதியை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சோதனையிட்டனர்.

பொதியிலிருந்த பற்பசையைச் சோதனையிட்ட போது, அதற்குள் 4 பக்கற்றுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குள் ஹெரோயின் போதைப்பொருள் உள்ளமையை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கண்டறிந்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சிறைச்சாலைக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளின் பின்னர், இளம் பெண்ணையும் அவருக்கு உதவிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரையும் கைது செய்தனர். பெண்ணிடம் மீட்கப்பட்ட 4 பக்கற்றுக்கள் ஹெரோயினின் எடை 180 மில்லிக்கிராம் என மதிப்பிடப்பட்டது. (ம-4-9)

## வெடிக்காத நிலை...

நகர் பகுதியில் யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபைக்கு சொந்தமான காணியினை நேற்றைய தினம் துப்புரவு செய்து உழவு செய்தபோது வெடிக்காத நிலையில் செல் ஒன்று இருப்பதை கண்ட மக்கள் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்

இதனடிப்படையில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் வெடிபொருள் உள்ள இடத்தில் நிலைகொண்டுள்ளதோடு அதனை உரியமுறையில் அகற்ற விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்

யுத்த கால வெடிபொருட்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-281)

## இன, மதவாதத்...

வித்துள்ளார்.

இலங்கையின் கண்டி மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற இனங்களுக்கு இடையிலான மோதல்கள் குறித்து அவரது டுவிட்டர் பதிவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக அரசாங்கமும், உரிய அதிகாரிகளும் விரைந்து சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அண்மையில் இலங்கையில் வெடித்த மோசமான வன்முறையினால் ஆயிரக்கணக்கான மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும் அவர் தனது டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

சிறுநீரகம் தேவை

52 வயதுடைய ஒருவருக்கு O+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் அவசரமாக தேவைப்படுவதால் தகுதியுடையவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
076 463 1296
(C-1860)


அறிமுகம் - Rs. 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800
(C-1859)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK – 550*/=Kg
கனடா – 1050*/=Kg
தொடர்புகளுக்கு: 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-1828)

வேலைவாய்ப்பு

யாழ். குடாநாட்டில் முதன்மை நிறுவனமான DNMC Holdings சர்வதேச நிறுவனத்திற்கு நிலையான 15 பதவி வெற்றிடங்களுக்கு நேர்முகத் தேர்வு ஆரம்பமாகின்றது. விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு உங்களுக்கான நேரத்தினை உறுதிப்படுத்துங்கள்.
● தகைமை O/L மட்டும் போதுமானது.
● முன்அனுபவம் அவசியமில்லை.
தொடர்பு: 0771571699
(3227)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

➢ பிரெஞ்சு கற்பதற்கு வட மாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
(3137)

சுப்பர் மார்க்கட் பணியாளர் விற்பனை பிரதிநிதிகளுக்கு
டுபாய் வேலைவாய்ப்பு
துப்பரவுப் பணியாளர் (Cleaners) ஆ/பெ
தொழிலாளர்கள் (Labourers)
வெற்றிடங்களும் உண்டு
குறிப்பு: கம்பனி பிரதிநிதிகளை நேரில் சந்தித்து பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக்கட்டணம் அறவிடப்படும்
விபரங்களுக்கு 0777 324 004
Trans Gulf (Pvt) Ltd. — 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222
SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS — 221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.